# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு
## 2023 - 2024

**மானியக் கோரிக்கை எண். 42**

**திரு. இ. பெரியசாமி**
ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2023

# பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்கம் எண் |
| --- | --- | --- |
| 1. | முன்னுரை | 1 |
| 2. | தமிழ்நாட்டில் ஊராட்சி நிர்வாக அமைப்புகள் | 11 |
| 2.1 | ஊராட்சி அமைப்புகளின் வரலாறு | 13 |
| 2.2 | ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் | 16 |
| 2.3 | மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் | 17 |
| 2.4 | ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்கள் | 24 |
| 2.5 | சொந்த வருவாய் இனங்கள் | 32 |
| 2.6 | ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் | 34 |
| 2.7 | சிறப்பாக செயல்புரியும் கிராம ஊராட்சிகள் மற்றும் நிறுவனங்களுக்கு உரிய அங்கீகாரம் மற்றும் விருதுகள் வழங்குதல் | 36 |
| 2.8 | புதிய முன்னெடுப்புகள் | 39 |

| | | |
|---|---|---|
| 3. | **மாநில அரசுத் திட்டங்கள்** | 43 |
| 3.1 | அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – II | 45 |
| 3.2 | அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 2022–23 ஆம் ஆண்டில் ஊரக நூலகங்களைப் புதுப்பித்தல். | 51 |
| 3.3 | பெரியார் நினைவு சமத்துவபுரம் | 52 |
| 3.4 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 59 |
| 3.5 | நமக்கு நாமே திட்டம் (ஊரகம்) | 60 |
| 3.6 | ஊரக உட்கட்டமைப்பு – சாலைகள் | 62 |
| 3.7 | முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | 64 |
| 3.8 | நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (NABARD–RIDF) | 68 |
| 3.9 | பள்ளி உட்கட்டமைப்பு – குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CFSIDS) | 70 |
| 3.10 | பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (SIDS) | 72 |

| | | |
|---|---|---|
| 3.11 | சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் (SEDP) | 73 |
| 3.12 | பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும் உட்கட்டமைப்பு திட்டங்கள் | 73 |
| **4.** | **ஒன்றிய அரசு பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்** | 77 |
| 4.1 | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS) | 79 |
| 4.2 | "அனைவருக்கும் வீடு" – பிரதம மந்திரி ஊரக குடியிருப்பு திட்டம் | 99 |
| 4.3 | ஜல் ஜீவன் மிஷன் | 107 |
| 4.4 | நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (MPLADS) | 115 |
| 4.5 | நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் (SAGY) | 116 |
| 4.6 | பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் (PMGSY) | 118 |
| 4.7 | தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) (SBM–G) | 121 |
| 4.8 | ஷியாம பிரசாத் முகர்ஜி ரூர்பன் இயக்கம் | 134 |

| | | |
|---|---|---|
| 4.9 | பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும் உட்கட்டமைப்பு திட்டங்கள். | 135 |
| **5.** | **ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பணியமைப்பு** | 137 |
| 5.1 | பணியமைப்பு | 139 |
| 5.2 | அரசிதழ் பதிவு பெற்ற பணியமைப்பு | 139 |
| 5.3 | பொறியியல் பணியமைப்பு | 140 |
| 5.4 | அரசிதழ் பதிவு பெறாத பணியாளர் பணியமைப்பு | 143 |
| **6.** | **பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு** | 147 |
| 6.1 | திறன் மேம்பாடு | 149 |
| 6.2 | மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் மையங்கள் | 153 |
| 6.3 | பயிற்சி முறைகள் | 153 |
| 6.4 | பயிற்சி செயல் திறன் | 154 |
| 6.5 | மறு சீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டம் (RRGSA) | 155 |
| 6.6 | இதர கல்வி நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றுதல் | 156 |
| 6.7 | மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் | 157 |

| | | |
|---|---|---|
| 6.8 | மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் செயல்பாடுகள் | 158 |
| 6.9 | ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள் (DRCPs) | 160 |
| **7.** | **நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை உள்ளூர் மயமாக்கல் (LSDGs)** | 161 |
| 8. | வரவு செலவுத் திட்டம் 2023–24 | 195 |
| 9. | முடிவுரை | 199 |

# 1. முன்னுரை

**முன்னுரை**

*"அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கிய வளர்ச்சி, அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வளர்ச்சி, அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கிய வளர்ச்சி தான் 'திராவிட மாடல்' வளர்ச்சி. அந்த நோக்கத்துடன் தமிழ்நாடு வளர வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை, வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சியாக மட்டுமல்ல, சமூக வளர்ச்சியாக இருக்க வேண்டும். பொருளாதாரம் – கல்வி – சமூகம் – சிந்தனை – செயல்பாடு ஆகிய ஐந்தும் ஒரு சேர வளர வேண்டும். அதுதான் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், கலைஞரும் காண விரும்பிய வளர்ச்சி. அதுதான் திராவிட மாடல் வளர்ச்சி!"*

**– மு.க.ஸ்டாலின்,**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**

பொருளாதாரக் குறியீட்டை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு ஒரு மாநிலம் வளர்ந்த மாநிலம் என கருதப்படுவதில்லை. மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டுக்கு வழிவகுக்கும் அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாடு அரசு முன்னெடுக்கிறது. வலிமையான அடித்தளமும்

அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியும் தமிழ்நாட்டை பல ஆண்டுகளாக வளர்ச்சிப் பாதையில் நிலை நிறுத்துகிறது.

தமிழ்நாடு, புதுமையான ஊரக வளர்ச்சித் திட்டங்களை வகுத்து அனைத்து தரப்பினரும் முன்னேற வேண்டும் என்ற அர்ப்பணிப்புடன் அத்திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதில் நாட்டின் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. இத்துறையின் கொள்கைகள், திட்டங்கள் ஆகியவை சமூக நீதி, சமமான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகிய சீர்மைகளுடன் வலிமையாக இணைந்துள்ளது.

மாநில அரசு தனது திறமை வாய்ந்த ஊரக வளர்ச்சித் துறை பணியாளர் தொகுதியின் மூலம் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுடன் நெருங்கி பணியாற்றி ஊரக வளர்ச்சித் துறையின் ஒன்றிய, மாநில அரசு மற்றும் வெளிநாட்டு நிதியுதவி பெறும் பல்வேறு திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதை உறுதி செய்கிறது.

ஊரக வளர்ச்சித் திட்டங்கள் ஊரக மக்களின் வருமானம் மற்றும் வாழ்வாதாரத்தை உயர்த்துவதை கடமையாக கொண்டுள்ளன. மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டம்

மற்றும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – II ஆகிய திட்டங்கள் இன்றியமையாததாகவும் ஏழை, விளிம்பு நிலை மற்றும் நலிவுற்ற மக்களின் வாழ்வாதாரம், ஊரக உட்கட்டமைப்பு, இயற்கை வள மேலாண்மை ஆகியவற்றுடன் நேரடித் தொடர்புடையனவாக உள்ளன.

அடிப்படை வசதிகளான குடிநீர், சுகாதாரம், ஊரக இணைப்புச் சாலை வசதிகள் ஆகியவை தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்), ஜல் ஜீவன் இயக்கம், பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் ஆகிய ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்பு திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது. பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் வீடு இல்லாதவர்களுக்கு வீடு வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் இத்திட்டத்திற்கான நிதி பகிர்வு 62:38 என்ற விகிதத்தில் உள்ளது. இதில் 62% மாநில அரசால் வழங்கப்படுகிறது. இது வீடு இல்லாதவர்களுக்கு தரமான வீடுகளை வழங்குவதில் மாநில அரசுக்கு உள்ள உறுதிப்பாட்டை காண்பிக்கிறது.

ஒன்றிய அரசின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு

இணையாகவும் கூடுதல் பயனளிக்கும் திட்டங்களாகவும் மாநில அரசின் சில முன்னோடித் திட்டங்கள் உள்ளன. சமூக நீதி மற்றும் சமத்துவத்தை உறுதி செய்யும் திட்டமாக பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டமும் கல்வி உட்கட்டமைப்பினை உறுதி செய்யும் குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டமும் கிராம சாலை இணைப்புகளை மேம்படுத்த இதர சாலை மேம்பாட்டுத் திட்டங்களுடன் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி** அவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின்** அவர்களின் சீரிய தலைமையின் கீழ் செயல்படும் இவ்வரசு, மகாத்மா காந்தி அவர்களின் கனவினை பூர்த்தி செய்திடும் வகையில் தன்னிறைவு பெற்ற சுயசார்பு கிராமங்களை உருவாக்கிட முனைப்புடன் செயல்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஒரு முதன்மையான துறையாக வேளாண்மை,

கால்நடைப் பராமரிப்பு, மீன் வளம், கிராமத் தொழில்கள் மற்றும் நீர்வள மேலாண்மை ஆகிய துறைகளை ஒருங்கிணைத்து நீடித்த வளர்ச்சிக்கான சமுதாய உட்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் சொத்துக்களை ஊரகப் பகுதிகளில் உருவாக்குகிறது. இந்த அரசின் முதன்மையான குறிக்கோள் ஊரகப் பகுதிகளில் வளர்ச்சியை முடுக்கிவிட்டு நகர மற்றும் ஊரக பகுதிகளுக்கு இடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகளை குறைத்து உட்கட்டமைப்பு மற்றும் வருமானத்தை பெருக்குவதாகும்.

தமிழ்நாட்டின் பரப்பளவில் 85 சதவீதத்திற்கும் மேற்பட்ட பரப்பினை ஊரகப் பகுதிகள் கொண்டுள்ளன. பரந்து விரிந்த இப்பகுதிகள் கிராம ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் மாவட்ட ஊராட்சி என்ற மூன்றடுக்கு நிர்வாக அமைப்புகளால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 1,18,978 எண்ணிக்கையிலான பிரதிநிதிகளை கொண்டு நிர்வகிக்கப்படுகின்றன.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டதன் மூலமும் உரிய காலங்களில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு

தேர்தல்கள் நடத்தப்பட்டதனாலும் மக்களாட்சி முறையில் அதிகாரப்பரவலாக்கல் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கும் உறுதி செய்யப்பட்டது.

எனவே, திட்டமிடல், செயல்படுத்துதல், கண்காணித்தல் ஆகிய ஒவ்வொரு நிலையிலும் மக்களின் பங்கேற்பினை உறுதி செய்ய ஆண்டுக்கு ஆறு முறை கிராம சபைகள் கூட்டப்படவேண்டும் என்ற நடைமுறை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான 17 இலக்குகள் மறுவகைப்படுத்தப்பட்டு உள்ளூர்மயமாக்கப்பட்ட நீடித்த நிலையான வளர்ச்சிக்கான 9 கருப்பொருட்களின் குறியீடுகளை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குள் உட்புகுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகும். அவையாவன;

- வறுமையில்லாத மற்றும் மேம்படுத்தப்பட்ட வாழ்வாதாரம் கொண்ட கிராம ஊராட்சி
- நலவாழ்வு கிராம ஊராட்சி
- குழந்தைகள் நேய கிராம ஊராட்சி

- நீரில் தன்னிறைவு அடைந்த கிராம ஊராட்சி
- தூய்மையான மற்றும் பசுமையான கிராம ஊராட்சி
- உட்கட்டமைப்பில் தன்னிறைவு அடைந்த கிராம ஊராட்சி
- சமூக நீதி மற்றும் சமூகப் பாதுகாப்பு உள்ள கிராம ஊராட்சி
- நல் ஆளுமையுள்ள கிராம ஊராட்சி
- மகளிர் நேய கிராம ஊராட்சி

உள்ளூர்மயமாக்கப்பட்ட நீடித்த நிலையான வளர்ச்சிக்கான 9 கருப்பொருட்களின் குறியீடுகளை அடைவதன் மூலம் மட்டுமே நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை எய்த முடியும். அனைத்துத் துறை செயல்பாடுகளையும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பதால் மட்டுமே இது சாத்தியமாகும்.

**"அரசு நிர்வாகம் என்பது யாரால் உரத்த குரல் கொடுக்க முடியாதோ அவர்களின் தேவையை உணர்ந்து அவற்றை நிறைவேற்றித் தருவதே ஆகும்"** – என்ற உயரிய கொள்கையினை அடையும்

நோக்கில் துறையின் தினசரி நடவடிக்கைகள் அமையும்.

# 2. தமிழ்நாட்டில் ஊராட்சி நிர்வாக அமைப்புகள்

## 2.1 ஊராட்சி அமைப்புகளின் வரலாறு

தொல்லியல் சான்றுகள் மூலம் பொருநை நதி மற்றும் வைகை நதி நாகரீகங்கள் சுமார் 2600 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலேயே தமிழகத்தில் உள்ளூர் திட்டமிடல் முறை இருந்ததனை அறிய முடிகிறது. சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கீழடியில் திட்டமிடப்பட்ட நகர நாகரீகம் இருந்ததற்கான சான்றுகளாக சுட்ட செங்கற்களைக் கொண்டு கட்டப்பட்ட வீடுகள், சுடுமண் குழாய் மூலம் உருவாக்கப்பட்ட கழிவுநீர் கால்வாய்கள், உறை கிணறுகள், வடிகட்டி மூலம் நீரினை தூய்மைப்படுத்தி உபயோகப்படுத்திடும் வழக்கம் ஆகியன அகழாய்வு மூலம் தெரிய வந்துள்ளன.

அகநானூற்றில், "குடவோலை முறை" போன்ற நடைமுறை கி.மு. 2 மற்றும் கி.பி. 3 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலம் முதல் இருந்துள்ளதை அறிய முடிகிறது. கி.பி. எட்டாம் நூற்றாண்டு காலத்தைய திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மானூர் கல்வெட்டுகளில் தேர்தல்கள் மற்றும் ஊராட்சி நிர்வாகம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர் கல்வெட்டுக் குறிப்புகள் மூலம் சோழ அரசு காலத்தில் தல சுயாட்சி நிர்வாகம் சிறந்து விளங்கியதை அறிய

முடிகிறது. தமிழ்நாட்டில், அப்போதைய காலத்தில் இருந்த கிராம குடியரசுகள் சமுதாயக் குழுக்களுடன் இணைந்து அப்பகுதிகளின் முன்னேற்றத்திற்கு பல்வேறு பணிகளை மேற்கொண்டன.

பத்து மற்றும் பதினொன்றாம் நூற்றாண்டுகளில் சோழர்களின் ஆட்சிக் காலத்தில் இந்த வழிமுறைகள் அதன் சிகரத்தை எட்டியது. இதன்படி கிராமக் குழுக்கள் தங்களது வரையறுக்கப்பட்ட பகுதிகளில் வரி விதித்தல், சமூக வாழ்வை மேம்படுத்துதல் மற்றும் நீதி வழங்குவது போன்ற பொறுப்புகளை மேற்கொண்டு இருந்தன. கிராமக் குழுக்களுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் "குடவோலை முறை" எனப்படும் இரகசிய வாக்களிப்பு முறை பின்பற்றப்பட்டது.

ஆங்கிலேயர் காலத்தில், தாமஸ் மன்றோ அறிமுகப்படுத்திய ரயத்வாரி வரி விதிப்பு முறை நேரடியாக விவசாயிகளிடம் வரி வசூல் செய்யும் முறைக்கு வழிவகுத்ததுடன் விவசாயிகளிடமே நிலத்திற்கான உரிமை இருப்பதையும் உறுதி செய்தது. 19–ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அப்போதைய ஆங்கிலேய இந்தியாவின் வைசிராய் ரிப்பன் பிரபு தலசுய ஆட்சிக்கு முக்கியத்துவம் அளித்துள்ளார். நாடு விடுதலையான பிறகு, மக்களாட்சி அதிகாரப் பரவலாக்கம் குறித்து முதன்முதலில் இயற்றப்பட்ட சட்டம், "மதராஸ் பஞ்சாயத்துச் சட்டம், 1950" ஆகும்.

மேலும், இந்திய அரசியலமைப்பில் "அரசுக்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறை" களின் படி, அரசானது சுயாட்சி பெற்ற கிராம ஊராட்சிகளை அமைத்திட அனைத்து விதமான நடவடிக்கைகளையும் எடுக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

பல்வந்த்ராய் மேத்தா குழு (1957), அசோக் மேத்தா குழு (1977), G.V.K. ராவ் குழு (1985), L.M. சிங்வி குழு (1986) ஆகிய பல்வேறு குழுக்கள் ஊராட்சி நிர்வாகத்தை ஆராயும் பொருட்டு அரசால் அமைக்கப்பட்டன. உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியத்துவத்தை அறிந்து அவைகளின் அதிகாரங்களையும், செயல்பாடுகளையும் நிறுவனப்படுத்துவதற்கு இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 73–வது திருத்த சட்டம், 1992 ஆம் ஆண்டு இயற்றப்பட்டு, 1993 ஏப்ரல் முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.

அரசியலமைப்புச் சட்டத்தின் 11–வது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 29 இனங்களில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு போதிய அதிகாரங்களை வழங்கிட மாநில அரசு வழிவகை செய்திட வேண்டும் என்று இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 243–G தெரிவிக்கின்றது. தமிழ்நாடு அரசு பல்வேறு அரசு ஆணைகள் மூலம் 11–வது அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள கல்வி, சுகாதாரம், குடிநீர்

விநியோகம், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கூட்டுறவு, பொது விநியோகம் போன்ற 29 இனங்களில் அதிகாரம் மற்றும் பொறுப்புகளை பகிர்ந்தளித்து ஆணையிட்டுள்ளது.

## 2. 2 ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள்

மாநிலத்தில் உள்ள நகர்ப்புர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தலை நடத்துவதற்கான ஒரு சுதந்திரமான மற்றும் தன்னாட்சி பெற்ற அரசியலமைப்பு அதிகாரம் கொண்ட அமைப்பாக 1994–ல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் மறுவரையறை செய்யப்பட்ட வார்டுகளின் அடிப்படையில் 27 மாவட்டங்களில், அதற்கான அறிவிப்பு செய்யப்பட்டு, அம்மாவட்டங்களில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்கள் 2019–20 ஆம் ஆண்டில் நிறைவடைந்தன. இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு, மீதமுள்ள 9 மாவட்டங்களின் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான வார்டு மறுவரையறைப் பணிகள் நிறைவடைந்து தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

ஊராட்சி நிர்வாகத்தில் மகளிரின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் வகையில் அரசு சீரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கடந்த 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பெற்ற ஊரக உள்ளாட்சித் தேர்தல்களில் மகளிருக்கான இடஒதுக்கீடு 50% என நிர்ணயிக்கப்பட்டிருப்பினும் அதற்கு அதிகமான பிரதிநிதித்துவத்தினை அதாவது 56% என்கிற அளவில் மகளிர் ஊராட்சி நிர்வாகத்தில் இடம் பெற்றுள்ளனர். பெண்கள் 7,012 (56%) பேர் கிராம ஊராட்சித் தலைவர்களாகவும், 242 (62%) பேர் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களாகவும், 20 (55%) பேர் மாவட்ட ஊராட்சித் தலைவர்களாகவும் பொறுப்பில் உள்ளனர். மேலும் ஊராட்சி நிர்வாகத்தில், மொத்தமுள்ள பிரதிநிதிகளில் 67,756 பேர், அதாவது 56%, மகளிர் ஆவர். பெண் பிரதிநிதிகளுக்கு அதிகாரமளித்தல் மற்றும் தலைமைத்துவ பண்புகள் பெற்றிடும் வகையில் உரிய பயிற்சிகளை வழங்க அரசு முழு அர்ப்பணிப்புடன் செயல்படுகிறது.

## 2.3 மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள்

### 2.3.1 கிராம ஊராட்சிகள்

தமிழ்நாட்டில் உள்ள 37 ஊரக மாவட்டங்களில் 79,395 குக்கிராமங்களை உள்ளடக்கிய 12,525 கிராம ஊராட்சிகள் உள்ளன. கிராம ஊராட்சியின் தலைவர்,

கிராம ஊராட்சியின் செயல் அலுவலர் ஆவார். ஒவ்வொரு கிராம ஊராட்சியும் உரிய காரணங்களால் கலைக்கப்படாத வரை ஒவ்வொரு சாதாரணத் தேர்தலுக்குப் பின்னர் 5 ஆண்டு காலம் செயல்பாட்டில் இருக்கும்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்துடன் ஒருங்கிணைந்து கிராம ஊராட்சி வாரியாக 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் ஊரக மக்கள் தொகை விபரம் ஆகஸ்ட் 2014–ல் வெளியிடப்பட்டது. அவ்வாறு கிராம ஊராட்சி வாரியாக வெளியிடப்பட்ட மக்கள் தொகையில் ஆதிதிராவிடர் / பழங்குடி இனத்தவர் மற்றும் பெண்கள் குறித்த விவரங்களும் அடங்கும். மேலும், மேற்கண்ட விவரங்கள் https://tnrd.tn.gov.in/ என்ற இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

**கிராம சபை**

தமிழ்நாட்டின் வரலாற்றுப் பதிவுகளில் சோழர் காலத்தில் "ஊர் மற்றும் சபை" என்கிற அமைப்புகள் இருந்துள்ளன. இச்சபைகள் அவ்வூராட்சியின் நிர்வாகத்தை மேற்கொள்வதற்காகவும் மக்களாட்சி முறை வேரூன்றி முடிவுகள் எடுப்பதையும் உறுதி செய்தன.

இந்தியா விடுதலை பெற்ற பின்னர் இயற்றப்பட்ட இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 243 ஆவது பிரிவு சேர்க்கப்பட்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கு முக்கியத்துவம் தரப்பட்டன. அவற்றில் பிரிவு 243 கிராம சபை குறித்து விவரிக்கிறது. கிராம ஊராட்சியிலுள்ள அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய அமைப்பான கிராம சபைக்கு குறிப்பிட்ட அதிகாரங்களும், பொறுப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் ஜனவரி 26, மார்ச் 22, மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 மற்றும் நவம்பர் 1 ஆகிய ஆறு நாட்களில் கிராம சபைக் கூட்டங்கள் கட்டாயமாக நடத்தப்படும் என அறிவித்தார். இது தவிர, தேவையின் அடிப்படையில் விதிமுறைகளுக்குட்பட்டு கிராம சபைக் கூட்டம் நடத்தப்படலாம்.

**"நம்ம கிராம சபை" செயலி**

**"நம்ம கிராம சபை"** என்கிற புதிய கைபேசி செயலி, கிராம சபை நிகழ்வுகளை கண்காணித்திடும் பொருட்டு இத்துறையின் மூலம் இவ்வாண்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த செயலி இயக்குவதற்கு எளிதாகவும், கீழ்காணும்

செயல்பாடுகளை பதிவு செய்திடவும் பயன்படுத்தப்படுகிறது.

- கிராம சபையின் குறைவெண் வரம்பு
- கிராம சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்
- கிராம சபையில் பங்கேற்ற பற்றாளர்களின் விவரங்கள்
- கிராம சபை நடைபெற்ற நேரம்
- கலந்துகொண்ட பிறதுறை அலுவலர்களின் விவரம்
- கிராம சபை நடைபெற்றதற்கான புகைப்பட ஆதாரங்கள்

கிராம சபை நிகழ்வுகளை நிகழ் நேரத்தில் கண்காணித்திடவும் அதில் கலந்து கொண்ட அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் குறித்து அறிந்து கொள்ளவும், இந்த கைபேசி செயலி ஒரு பயனுள்ள கருவி என நிரூபித்துள்ளது.

**கிராம ஊராட்சிக் குழுக்கள்**

ஒவ்வொரு கிராம ஊராட்சியும் கீழ்க்கண்ட குழுக்கள் அமைத்து செயல்படும்.

- நியமனக்குழு
- வளர்ச்சிக்குழு
- வேளாண்மை மற்றும் நீர்வடிப் பகுதி குழு

- பணிகள் குழு
- கல்விக் குழு

**கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம்**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–ன் பிரிவு–240–ன் படி ஒவ்வொரு கிராம ஊராட்சியும் ஒவ்வொரு ஆண்டும் கிராம ஊராட்சிக்கான வளர்ச்சித் திட்டத்தினைத் தயார் செய்திட வேண்டும்.

அடுத்த நிதியாண்டிற்கான கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தை அரசின் வழிகாட்டுதல்படி அதற்கு முந்தைய ஆண்டிலேயே தயாரிப்பதற்காக அக்டோபர் 2 முதல் டிசம்பர் 31 வரை மக்கள் பங்கேற்பின் அடிப்படையிலும் இதர துறைகளின் ஒருங்கிணைப்புடன் கிராம வளர்ச்சிக்காக திட்டமிடல் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

மக்கள் திட்டமிடல் இயக்கத்தின் ஒரு பகுதியாக, மாநிலத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளின் சமூக மற்றும் பொருளாதார தேவைகளுக்கான மதிப்பீடு, சமுதாய வளப்பயிற்றுனர்கள் மூலம் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு ஒன்றிய அரசின் மிஷன் அந்தியோதயா செயலி மூலம் உள்ளீடு செய்யப்படும். கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தை இறுதி செய்வதற்காக அனைத்து கிராம ஊராட்சிகளிலும் சிறப்பு கிராம சபைக் கூட்டங்கள் கட்டாயமாக நடத்தப்படவேண்டும்.

கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டங்கள் எதிர்வரும் 2023–24 ஆம் ஆண்டிலிருந்து உள்ளூர் மயமாக்கப்பட்ட நீடித்த மற்றும் நிலைத்த வளர்ச்சி இலக்குகள் சார்ந்த கருப்பொருள்கள் அடிப்படையில் தயாரிக்கப்படும். ஊராட்சி அளவில், இந்த கருப்பொருள்கள் அடிப்படையிலான திட்டமிடலே அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நீடித்த வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையும்.

### 2.3.2 ஊராட்சி ஒன்றியங்கள்

தமிழ்நாட்டில் இடைநிலை அளவில் 388 ஊராட்சி ஒன்றியங்கள் (வட்டார ஊராட்சிகள்) உள்ளன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், குறைந்தபட்சம் 5,000 மக்கள் தொகை கொண்ட ஊராட்சி ஒன்றிய வார்டுகளை உள்ளடக்கிய வளர்ச்சி வட்டாரங்களாகும்.

ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் தொடர்புடைய வார்டில் உள்ள மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களால், மறைமுகத் தேர்தலின் மூலம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார். ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கு வரி விதித்திடும் அதிகாரம் இல்லை.

### 2.3.3 மாவட்ட ஊராட்சிகள்

தமிழ்நாட்டில் 36 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம்,1994 பிரிவு 24–ன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஊராட்சி அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், மக்களால் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல் மூலம் மாவட்ட ஊராட்சித் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார். புதிதாக உருவாக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்டத்திற்கான மாவட்ட ஊராட்சி அடுத்த ஊரக உள்ளாட்சி தேர்தல்களுக்குப் பின் அமைக்கப்படும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், உதவி இயக்குநர் நிலையில் ஒரு அலுவலர் ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். மாவட்ட ஊராட்சிகளுக்கு வரி விதிக்கும் அதிகாரம் ஏதும் இல்லை.

### திருத்தியமைக்கப்பட்ட மாவட்ட திட்டக் குழு

31 மாவட்ட திட்டக்குழுக்கள் திருத்தியமைக்கப்பட்டதுடன் செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களுக்கு முதல் முறையாக

மாவட்ட திட்டக் குழுக்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.

## 2.4 ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்கள்

மாநிலத்தில் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் வரி விதிப்பு செய்ய அதிகாரம் பெற்ற ஒரே அமைப்பு கிராம ஊராட்சியாகும். கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட இனங்களிலிருந்து வருவாய் பெறுகின்றன:

அ) மானியம்

ஆ) வரி வருவாய்

இ) வரியில்லா வருவாய்

### அ. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள்

### மாநில நிதிக் குழு மானியம்

73–வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 198–ன்படி, தமிழ்நாட்டில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தொடர்ச்சியாக மாநில நிதி ஆணையம் அமைக்கப்பட்டு வருகிறது. மாநில நிதி ஆணையத்தின் முக்கிய பணிகள் பின்வருமாறு:

1. அரசால் விதிக்கப்படும் வரி, தீர்வை, சுங்கம் மற்றும் கட்டணங்கள் மூலம் பெறப்படும் மொத்த

வருவாயில் மாநிலத்திற்கும், ஊராட்சிகளுக்கும் பிரித்து வழங்குதல்.

2. ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய வரிகள், தீர்வை, சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை நிர்ணயித்தல்.
3. மாநிலத்தின் மொத்தத் தொகுப்பு நிதியிலிருந்து ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியங்கள்.
4. ஊராட்சிகளின் நிதி நிலையினைப் பெருக்குவதற்கான வழிமுறைகள்.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி பகிர்வு செய்திட 1994–லிருந்து இதுவரை ஆறு மாநில நிதிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**i) ஆறாவது மாநில நிதி ஆணையம் (2022–23 – 2027–28)**

ஆறாவது மாநில நிதிக்குழு அரசால் 2020 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு அதன் பெரும்பாலான பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

**ஆறாவது மாநில நிதிக்குழுவின் முக்கிய பரிந்துரைகள்**

1. ஆறாவது மாநில நிதிக்குழுவின் செயல்பாட்டுக்காலம் 2022–2023 முதல் 2027–2028 ஆம் ஆண்டு வரை ஆகும்.

2. ஆறாவது மாநில நிதிக்குழு மாநிலத்தின் மொத்த வரி வருவாயில் 10 சதவீதத்தை உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளித்திட பரிந்துரைத்துள்ளது.
3. ஊரக மற்றும் நகர்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான பகிர்மான விகிதம் 51 : 49 ஆகும்.
4. அரசு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கியுள்ள மானியத்தினை மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு முறையே 6:39:55 என்கிற பகிர்மான விகிதத்தில் வழங்கிட ஆணையிட்டுள்ளது.
5. மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ள மானியமானது ஆறாவது நிதிக்குழு பரிந்துரைத்துள்ள பகிர்மான விதிமுறைகளின்படி பகிர்ந்தளிக்கப்படும்.
6. ஆறாவது மாநில நிதிக்குழு மானியங்களை கீழ்க்கண்டவாறு இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளது.
    1. சிறப்பு மானியம்
    2. பகிர்மான மானியம்

## சிறப்பு மானியம்

நிதிக்குழு பரிந்துரைகளின் அடிப்படையில் சில முன்னுரிமைப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு துறைக்கு சிறப்பு மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன. வழங்கப்பட்டுள்ள சிறப்பு மானியங்கள் மேலும் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதாவது மூலதன மானிய நிதி மற்றும் செயல்பாடு, பராமரிப்பு மற்றும் பற்றாக்குறை மானிய நிதியாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இம்மானியங்கள், மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் வழங்கப்பட்டுள்ளன.

## I. மூலதன மானிய நிதி

ஐந்தாவது நிதிக்குழு பரிந்துரைத்ததைப் போலவே ஆறாவது நிதிக்குழு காலத்திலும் மூலதன மானிய நிதி நீட்டிக்கப்பட்டுள்ளது. மூலதன மானிய நிதி மாநில மற்றும் மாவட்ட அளவிலான தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஆறாவது நிதிக்குழு, மாநில அளவிலான மூலதன மானிய நிதியை கீழ்காணும் வகையில் பிரித்து பயன்படுத்திட பரிந்துரைத்துள்ளது.

**மாநில அளவிலான மூலதன மானிய நிதி**

- ஊரக கட்டமைப்பு – ரூ.600 கோடி
- இதர மாவட்ட சாலை (ODR) – சாலை வகை மாற்றம் – ரூ.120 கோடி

- மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் – ரூ.1 கோடி
- பள்ளிகள் பராமரிப்பு – ரூ.140 கோடி

**மாவட்ட அளவிலான மூலதன மானிய நிதி**

- மூலதன மானிய நிதி – மாவட்ட அளவில் ரூ.200 கோடி.

இதன்படி 2022–23 ஆம் ஆண்டிற்கு ரூ.1061 கோடியை மூலதன மானிய நிதிக்கென ஆறாவது மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின்படி ஒதுக்கீடு செய்துள்ளது.

**II. செயல்பாடு, பராமரிப்பு மற்றும் பற்றாக்குறை மானிய நிதி**

பற்றாக்குறை ஊராட்சிகளுக்கான மானிய நிதிக்கு பதிலாக செயல்பாடு, பராமரிப்பு மற்றும் பற்றாக்குறை மானிய நிதியினை ஆறாவது மாநில நிதிக்குழு பரிந்துரைத்துள்ளது. இதன்படி, 2022–23 ஆம் ஆண்டிற்கு ரூ.782.60 கோடியை கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்துள்ளது.

1. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நீண்ட கால குடிநீர் கட்டண நிலுவைகளைச் செலுத்தும் பொருட்டு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைகளைச் செலுத்திடும் பொருட்டு ரூ.200 கோடியை ஒதுக்கியுள்ளது.
3. ஒவ்வொரு வருடமும் ரூ.280 கோடியை பற்றாக்குறை ஊராட்சிகளுக்கு வழங்கிடும் பொருட்டு ஆறாவது மாநில நிதிக்குழு பரிந்துரைத்துள்ளது.
4. ஆறாவது நிதிக்குழு முதல் முறையாக நகர்ப்புரத்தை ஒட்டியுள்ள ஊராட்சிகளுக்கு சிறப்பு மானியமாக ரூ.69 கோடியையும், மலைப்பகுதி ஊராட்சிகளுக்காக ரூ.30 கோடியையும் ஒதுக்கியுள்ளது.
5. ஆறாவது மாநில நிதிக்குழு ரூ.28 கோடி ரூபாயினை நூலக மேல் வரியின் முன்பணமாக நூலகத் துறை இயக்குநரகத்துக்கு கிராம ஊராட்சிகள் சார்பாக வழங்கிடும் பொருட்டு பரிந்துரைத்துள்ளது இதனை, தொடர்புடைய கிராம ஊராட்சிகள் சொத்துவரியுடன், நூலக மேல்வரியை வசூலித்து அதனை ஊராட்சிகளே பயன்படுத்திக்கொள்ளலாம்.
6. தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் மூலம் ஊராட்சிகளில் பணிபுரியும்

தூய்மைப் பணியாளர்களுக்கான நல உதவிகளுக்காக ரூ.5கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

7. ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சிக்கென ரூ.60 இலட்சம் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.
8. ஆறாவது மாநில நிதிக்குழு ரூ.60 கோடியை மானியமாக பள்ளி மேம்பாட்டுக்கெனவும், வன உரிமைச் சட்டத்தினை ஊரகப் பகுதிகளில் சிறப்பாக செயல்படுத்திடும் பொருட்டு ஊக்கத் தொகையாக ரூ.10 கோடியும் ஒதுக்கியுள்ளது.

சிறப்பு மானியமாக ரூ.1843.60 கோடி, 2022–23 ஆம் ஆண்டு ஆறாவது நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பகிர்மான மானியம்**

பகிர்மான மானியம் 6:39:55 என்ற விகிதத்தில் மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

2022 – 2023 ஆம் ஆண்டிற்கு ரூ.5593.20 கோடி பகிர்மான நிதியாக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

## ஒன்றிய நிதி ஆணைய மானியம்

நிதிப்பகிர்வு தொடர்பாக பதினைந்தாவது ஒன்றிய நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் 2021–22 முதல் 2025–26 வரையிலான காலத்திற்குரியதாகும்.

- வரையறுக்கப்பட்ட நிதி மற்றும் வரையறுக்கப்படாத நிதி விகிதம் 60:40 ஆகும்.
- வரையறுக்கப்பட்ட மானியத்தில் 50% (30%) குடிநீர் விநியோகம், மழைநீர் சேகரிப்பு மற்றும் மறுசுழற்சிப் பணிகளுக்காகவும் மீதமுள்ள 50 சதவீதம் (30%) சுகாதாரம் பணிகளுக்குப் பயன்படுத்தலாம்.
- வரையறுக்கப்படாத மானியம் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் ஊதியம் அல்லது நிர்வாக செலவினம் தவிர அரசு அனுமதித்துள்ள இதர குறிப்பிட்ட பணிகளுக்காக பயன்படுத்தலாம்.

பதினைந்தாவது ஒன்றிய நிதி ஆணையம் பரிந்துரைத்துள்ள அடிப்படை மற்றும் வரையறுக்கப்பட்ட மானியங்களை மாநில நிதி ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட பகிர்மான விகிதாச்சார அடிப்படையில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் மூன்று அடுக்குகளுக்கும் கீழ்கண்டவாறு பின்பற்றப்படுகிறது.

| | |
|---|---|
| மாவட்ட ஊராட்சிகள் | 5% |
| ஊராட்சி ஒன்றியங்கள் | 15% |
| கிராம ஊராட்சிகள் | 80% |

15–வது ஒன்றிய நிதிக்குழுவின் ஒட்டுமொத்தகாலத்திற்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.1**

**(ரூ. கோடியில்)**

| ஆண்டு | மொத்த மானியம் | வரையறுக்கப்படாத மானியம் (40%) | வரையறுக்கப் பட்ட மானியம் (60%) |
|---|---|---|---|
| 2021–22 | 2666 | 1066.4 | 1599.6 |
| 2022–23 | 2761 | 1104.4 | 1656.6 |
| 2023–24 | 2791 | 1116.4 | 1674.6 |
| 2024–25 | 2957 | 1182.8 | 1774.2 |
| 2025–26 | 2884 | 1153.6 | 1730.4 |
| **மொத்தம்** | **14059** | **5623.6** | **8435. 4** |

## 2.5 சொந்த வருவாய் இனங்கள்

1. **வரி வருவாய்**

• தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 172 ன்படி வீட்டு வரி / சொத்து வரி வசூல் செய்திட கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

• தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 198 (B)−ல் தொழிலாளர்களின் ஊதியம் அல்லது கூலித் தொகையிலிருந்து தொழில் வரி விதிக்கவும், வசூலிக்கவும் வழிவகையுள்ளது. சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் தொழிலாளர்களின் ஊதியத்திலிருந்து தொழில் வரிக்காக பிடித்தம் செய்த தொகையினை தொடர்புடைய கிராம ஊராட்சிக்கு செலுத்திட வேண்டும்.

• தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 172, 220 மற்றும் பிரிவு 242−ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, ஊரக உள்ளாட்சி அமைப்புகள் விளம்பர வரி விதிக்கும் அதிகாரம் பெற்றுள்ளன.

2. வரியில்லா வருவாய்

கீழ்க்கண்ட இனங்களிலிருந்து வரியில்லா வருவாய் பெற கிராம ஊராட்சிகள் உரிமை பெற்றுள்ளன.

i) மனைப் பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்
ii) அபாயகரமான மற்றும் கேடு விளைவிக்கக் கூடிய தொழில்களுக்கான கட்டணங்கள்
iii) சந்தைக் கட்டணம்
iv) குடிநீர் கட்டணம்
v) வண்டி நிலையங்களுக்கான கட்டணம்
vi) சமூகக் காடுகள் ஏலம்

vii) மீன்பாசி குத்தகை

viii) 2சி பட்டா கட்டணம்

ix) சந்தை மற்றும் பொருட்காட்சிகளிலிருந்து பெறப்படும் வருமானங்கள்

x) படகுக் குழாம் மூலம் பெறப்படும் கட்டணங்கள்

xi) அபராதங்கள் மற்றும் தண்டத் தீர்வை

xii) கனிமம் மற்றும் சுரங்க ஏலம் மற்றும் உரிமத் தொகை

**2.6 ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்**

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் முத்திரைத்தாள் கட்டணத்துடன் பெறப்படும் மிகுவரி வருவாய் மாநில அளவில் ஒருங்கிணைக்கப்பட்டு பதிவுத்துறை மூலம் விடுவிக்கப்படுகிறது. இந்த மிகுவரி வருவாய் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு பிரித்து வழங்கப்படுகிறது.

அதன்படி, 2022-23 ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் ரூ.1003.00 கோடியை பின்வருமாறு அனுமதித்து அரசாணையின்படி விடுவித்துள்ளது.

- மூன்றில் ஒரு பங்கு தொகையான ரூ.334.33 கோடி நிதியானது கிராம ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பகிர்வு செய்யப்படுகிறது.

- மீதமுள்ள மூன்றில் இரு பங்கு தொகையான ரூ.668.66 கோடி ஊரகப் பகுதிகளில் முன்னுரிமைத் திட்டங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியின் கீழ் தேவையின் அடிப்படையில் சிறப்பு உட்கட்டமைப்பு பணிகளான சாலைகள், பாலங்கள், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான அலுவலகக் கட்டடங்கள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலக வளாகம் மற்றும் எரிவாயு தகன மேடை போன்ற பணிகள் ஒப்பளிக்கப்படுகின்றன. மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கு வாகனங்கள் வாங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுவரை 277 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் ரூ.672.11 கோடி மதிப்பீட்டிலும், 15 ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலக வளாகங்கள் ரூ.104.46 கோடி மதிப்பீட்டிலும் எடுக்கப்பட்டுள்ளன. 2021-22 ஆம் ஆண்டு, 82 புதிய வாகனங்கள் ரூ.6.82 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. புதிய முன்னெடுப்பாக, 2021-22 ஆம் ஆண்டில், 10 மாவட்டங்களில் நகர்ப்புரத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில்

ரூ.20 கோடி மதிப்பீட்டில் 10 எரிவாயு தகன மேடைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

**2.7 சிறப்பாக செயல் புரியும் கிராம ஊராட்சிகள் மற்றும் நிறுவனங்களுக்கு உரிய அங்கீகாரம் மற்றும் விருதுகள் வழங்குதல்:**

**அ. உத்தமர் காந்தி விருது**

கிராம ஊராட்சித் தலைவர், ஊராட்சியின் முன்னேற்றத்திற்காக திட்டமிடலில் துவங்கி, தேவையான ஆதாரங்களை திரட்டுதல், தேவைகளை முன்னுரிமைப்படுத்துதல், அரசு திட்டங்களைச் செயல்படுத்துதல் வரையிலான பல்வேறு பணிகளை மேற்கொண்டு ஒட்டுமொத்தக் கிராம வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறார். கிராம ஊராட்சித் தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாகவும், கிராம ஊராட்சியின் செயல் அலுவலராகவும் இருந்து, பொது மக்களுக்கும் பல்வேறு அரசுத் துறைகளுக்கும் முக்கிய இணைப்புப்பாலமாக விளங்குகிறார். எனவே, ஊராட்சியின் மேம்பாடானது பெரும்பாலும் கிராம ஊராட்சித் தலைவரின் தலைமைத்துவத்தினையும், நிர்வாகத்திறன் மற்றும் அறிவுக்கூர்மையையும் பொறுத்து, அரசின் திட்டங்களை ஒருங்கிணைப்பதிலும் அத்திட்டங்களினால் ஏற்படும்

நன்மைகளை கடைக்கோடி வரை கொண்டு சேர்ப்பதிலும் முக்கிய மையப்புள்ளியாக உள்ளார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சட்டமன்றப் பேரவை விதிகள் 110ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பின்படி 2022ஆம் ஆண்டிலிருந்து "உத்தமர் காந்தி விருது" மீண்டும் நிறுவப்பட்டது. கிராம ஊராட்சியின் மேம்பாட்டிற்காகவும், நீடித்த மற்றும் நிலைத்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கும் முன்னின்று வழிநடத்தும் கிராம ஊராட்சித் தலைவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு இவ்விருது 2006 முதல் 2010 வரையிலான காலகட்டத்தில் வழங்கப்பட்டு பின்னர் கைவிடப்பட்டது

இவ்விருது, சிறப்பாக செயல்புரியும் கிராம ஊராட்சிகளுக்கு மாவட்டத்திற்கு ஒன்று வீதம் ரூ. 10 லட்சம் ரொக்கப்பரிசுடன் வழங்கப்படும். விருதுக்கு தகுதியான கிராம ஊராட்சியின், நீடித்த மற்றும் நிலைத்த வளர்ச்சி இலக்குகளை அடைவதில் சிறப்பாக செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்ட குறியீடுகளையும் மற்றும் அதன் செயல்திறன்களை அளவிடுவதை பொறுத்து தேர்வு செய்யப்படுகிறது. இவ்வாறு விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர்களை அங்கீகாரப்படுத்துவதன் மூலம் இவ்வூராட்சியில் நடைபெற்ற சிறப்பான பணிகள்

பிற ஊராட்சிகளுக்கும், தலைவர்களுக்கும் முன் மாதிரியாக அமைவதோடு அவ்வூராட்சிகளும் மேம்பாடு அடைய ஊக்கப்படுத்துகிறது.

**சமூக பொறுப்புணர்வுடன் செயல்படும் நிறுவனங்களுக்கான விருதுகள்:**

அரசு சாரா தனியார் தொண்டு நிறுவனங்கள் மற்றும் பெரு நிறுவனங்கள் உட்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகளை சமூக நலத்திட்டங்களின் ஒரு பகுதியாக மேற்கொண்டு வருகின்றன. பெரு நிறுவனங்கள் தங்களுடைய நிகர லாபத்தில் 2% நிதியினை சமூகப் பொறுப்புணர்வு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திட நிறுவனங்கள் சட்டம் 2013 மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது. கிராம மேம்பாட்டிற்கு தனியார் நிறுவனங்கள் மற்றும் பெருநிறுவனங்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக சமூக பொறுப்புணர்வுடன் செயல்படும் நிறுவனங்களுக்கான விருது உருவாக்கப்பட்டது. இவ்விருதுகள் சிறப்பாக செயல்படும் பெருநிறுவனங்களுக்கு 2010 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டது. தற்போது, ஊரகப் பகுதிகளில் சமூக மற்றும் ஊரக மேம்பாட்டிற்காக சிறப்பாக செயல்படும் பெரு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களை அங்கீகரிக்கும் விதமாக, சமூக பொறுப்புணர்வுடன்

செயல்படும் பெரு நிறுவனங்களுக்கான விருதுகள் மீண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும், மாவட்டம் தோறும் சிறப்பாக செயல்படும் ஒரு பெரு / தனியார் நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு விருதுடன், ரூ.1.இலட்சம் ரொக்கப்பரிசும் கேடயமும் வழங்கப்படும்.

## 2.8 புதிய முன்னெடுப்புகள்

1. 648 கிராம ஊராட்சிகளில், பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் கிராம ஊராட்சி அளவில் ஒருங்கிணைக்க கிராம செயலகக் கட்டடங்கள் ரூ.260 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.
2. கிராம ஊராட்சிகளில் சிறப்பான சேவைகள் உறுதி செய்திடும் விதமாக மேம்பட்ட தகவல் தொழில்நுட்பக் கட்டுமானத்துடன் புதிய கணினி உபகரணங்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளன.
3. அனைத்து கிராம ஊராட்சிகளிலும் இணைய வரி முனையம் மூலமாக சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி, தொழில் உரிமம் மற்றும் வரியில்லா வருவாய் ஆகியவற்றை எளிதில் பெறுவதற்கு இணைய சேவை

துவங்கப்பட்டுள்ளது. மேலும், மனைப்பிரிவு அனுமதி, கட்டிட அனுமதி மற்றும் தொழிற்சாலை நிறுவுதல் அனுமதி போன்ற சேவைகளை இணையதள வாயிலாக கூடிய விரைவில் செயல்படுத்தப்படும்.

4. தற்போது, கிராம ஊராட்சிகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கும் வரம்பு ரூ.2இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாகவும், வட்டார ஊராட்சிகளுக்கு ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சமாகவும், மாவட்ட ஊராட்சிகளுக்கு ரூ.20 இலட்சத்திலிருந்து ரூ.50 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

5. ஊராட்சிகளுக்கான மானியம் மற்றும் சொந்த வருவாய் இனங்களை பராமரிக்க மாநில அளவிலான ஒற்றை மையக் கணக்கு மூலம் சிறந்த நிதி நிர்வாகத்தினை கிராம ஊராட்சிகளில் ஏற்படுத்தி, வேலைப்பளுவினை குறைத்து கணக்குகளை எளிதாக பராமரித்திட வழி வகை செய்யப்பட்டுள்ளது.

6. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் பொது மக்களுக்கு குறைதீர்க்கும் வழி

முறையாக (155340) என்ற எண்ணுடன் ஒரு உதவி மையம் (Help Desk) ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரகத்தில் 24X7 என்ற வகையில் அனைத்து நாள்களிலும் செயல்படும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

# 3. மாநில அரசுத் திட்டங்கள்

## 3.1 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II

அனைத்து கிராம ஊராட்சிகளும் முழுமையான வளர்ச்சியை அடையும் நோக்கத்தில் முக்கியத்துவம் வாய்ந்த அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டமானது 2006 முதல் 2011 வரை மாநில அரசால் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டமானது ஐந்து ஆண்டுகளில் அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்தோடு செயல்படுத்தப்பட்டது. ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் தலா ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஊராட்சியிலும் குளங்கள் புதுப்பித்தல், அறைகலன்கள் மற்றும் புத்தகங்களுடன் கூடிய ஊரக நூலகங்கள் அமைத்தல், புதிய இடுகாடு / சுடுகாடு மற்றும் பழைய இடுகாடு / சுடுகாடுகளில் வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் சமுதாய / பள்ளி விளையாட்டு மையங்கள் தேவையான விளையாட்டு உபகரணங்களுடன் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டம் ஊரகப் மக்களிடையே ஒரு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது.

அனைத்து குக்கிராமங்களும் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியினை முழுமையாக அடைவதை உறுதி செய்யும் பொருட்டு, தற்போது அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் 2021–22–ம் ஆண்டு முதல் 2025–26–ம் ஆண்டு முடிய ஐந்து ஆண்டுகளில் அனைத்து கிராமங்களிலும் படிப்படியாக நிறைவேற்றப்படும். அனைத்து குக்கிராமங்களில் வாழும் மக்களுக்கு தேவைப்படும் முக்கிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்யும் பொருட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பல்வேறு திட்டங்களுடனும் ஏறத்தாழ 16 துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களையும் ஒருங்கிணைத்து ஊரக மக்களுக்கு நேர்மறை தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

### 3.1.1 கிராம ஊராட்சிகளைத் தேர்வு செய்தல்

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II–ன் கீழ் ஒவ்வொரு ஆண்டும், 20 விழுக்காடு கிராம ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்படும்.

## நிதி ஒதுக்கீடு

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்–II–ன் கீழ், குறைந்தபட்ச அடிப்படை நிதியாக தலா ரூ.30 இலட்சமும், செயல்திறன் ஊக்க நிதியாக ரூ.5 இலட்சம் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் வழங்கப்படும். மக்கள்தொகை மானியம், குக்கிராம மானியம் ஆகியவற்றைக் கணக்கிடும் போது குக்கிராம எண்ணிக்கைக்கு 50 விழுக்காடும், மக்கள் தொகை எண்ணிக்கைக்கு 50 விழுக்காடும் நிதி வழங்கப்படும்.

செயல் திறன் ஊக்க நிதியானது 9 காரணிகளின் அடிப்படையில் ஊராட்சிகள் மதிப்பீடு செய்யப்பட்டு, அவை எய்தப்பட்ட அளவிற்கு ஏற்ப ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் மாவட்ட ஆட்சித் தலைவரால் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## ஒருங்கிணைந்த குக்கிராமங்கள் கணக்கெடுப்பு

குக்கிராமங்களில் உள்ள அடிப்படை உட்கட்டமைப்பு இடைவெளி தேவைகள் குறித்த கணக்கெடுப்பு, ஊராட்சியின் தலைவர், ஊராட்சி செயலர் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர் கொண்ட உள்ளூர் குழுவின் மூலம் எடுக்கப்பட்டது. இக்கணக்கெடுப்பின் அடிப்படையில், மூன்று விரிவான இனங்களின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன.

(1) அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் எடுக்கப்படும் பணிகள் (2) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பிற திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும் பணிகள் (3) பல்வேறு இதர துறைகளின் திட்டங்கள்.

**திட்டக் கூறுகள்**

திட்ட கூறுகளின் விவரம் பின்வருமாறு:–

**அட்டவணை 3.1**

| வ. எண் | பணியின் வகைகள் | நிதி ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | நீர் நிலைகள் புதுப்பித்தல் | 30% |
| 2. | குக்கிராமங்களில் தெருக்கள் / வீதிகள் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் | 25% |
| 3. | சமத்துவ சுடுகாடு / இடுகாடு என்று பரிந்துரைக்கப்பட்டவைகளின் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளுதல் | 10% |
| 4. | பள்ளிகளில் உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பொதுப் பயன்பாட்டு கட்டமைப்புகளை உருவாக்குதல் | 15% |
| 5. | சுத்தமான மற்றும் பசுமை கிராமம் | 10% |
| 6. | வாழ்வாதாரம் மற்றும் சந்தைப்படுத்துதல் வசதிகளை ஒருங்கிணைத்தல் | 10% |

மொத்த ஒதுக்கீட்டில் 30% ஒதுக்கீடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் வாழும் குக்கிராமங்கள் / பகுதிகளுக்கு வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் 2021–22 ஆம் ஆண்டில் 2657 கிராம ஊராட்சிகள், ரூ.1455 கோடி நிதி ஒதுக்கீட்டுடனும், 2022–23 ஆம் ஆண்டில் 2544 கிராம ஊராட்சிகள், ரூ.1155 கோடி நிதி ஒதுக்கீட்டுடனும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. 2023–24 ஆம் ஆண்டில் 2504 கிராம ஊராட்சிகள் ரூ.1148 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் தேர்ந்தெடுக்கப்படும்.

**அட்டவணை 3.2**

**2021–22 மற்றும் 2022–23 ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட பணிகளின் விவரம்**

| வ. எண் | பணியின் வகைகள் | 2021–22 | | 2022–23 | |
|---|---|---|---|---|---|
| | | மொத்த பணிகள் (எண்ணிக்கை) | மொத்த தொகை (ரூபாய் கோடியில்) | மொத்த பணிகள் (எண்ணிக்கை) | மொத்த தொகை (ரூபாய் கோடியில்) |
| 1 | நீர் நிலைகள் புதுப்பித்தல் | 2616 | 257 | 2152 | 198 |
| 2 | தெருக்கள் / வீதிகள் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் | 8954 | 415 | 6309 | 309 |
| 3 | சமத்துவ சுடுகாடு / இடுகாடுகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் | 900 | 47 | 553 | 29 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | பள்ளிகள் மற்றும் பொது பயன்பாட்டிற்கான கட்டமைப்புகளை உருவாக்குதல் | 4256 | 303 | 2933 | 254 |
| 5 | தூய்மை மற்றும் பசுமை பணிகள் | 1410 | 68 | 1164 | 56 |
| 6 | வாழ்வாதாரம் மற்றும் சந்தைப்படுத்துதல் வசதிகள் | 2296 | 149 | 1828 | 127 |

## பிற துறைகளுடன் பணிகளை ஒருங்கிணைத்தல்

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்–II ன் கீழ் பல்வேறு திட்டங்கள் மற்றும் முயற்சிகளின் ஒருங்கிணைப்பு மிக முக்கிய அம்சமாகும். தகுதியுள்ள பொருத்தமான பயனாளிகளுக்கு அனைத்து திட்டங்களும் சென்றடையும் வண்ணம் முக்கிய 16 துறைகள் குறிப்பிட்ட வருடத்திற்கான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்–II ஊராட்சிகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். இவ்வூராட்சிகளில் தொடர்புடைய துறைகளால் அரசின் திட்டங்களை பற்றிய விழிப்புணர்வு மற்றும் ஊரக மக்களுக்கு தேவையான வசதிகளை வழங்கிட சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன

## 3.2 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 2022–23–ம் ஆண்டில் ஊரக நூலகங்களைப் புதுப்பித்தல்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் அட்டவணை எண்.XI விதிகள் 243ஜி மற்றும் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 111–ல் கிராமங்களில் நூலகங்கள் / வாசிப்பு அறைகளைத் திறப்பதற்கும், பராமரிப்பதற்கும் கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 2006–07 முதல் 2010–11 முடிய 12,618 ஊரக நூலகங்கள் அமைக்கப்பட்டன. இந்நூலகங்கள் முறையாக பராமரிக்கப்படாமல் இருந்தமையால், முழுமையான முறையில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளன.

**அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகங்களை புதுப்பிப்பதற்கான திட்டம்**

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் மூலம் 12,525 கிராம ஊராட்சிகளிலும் ஏற்படுத்தப்பட்ட நூலகங்களை 2021–22 முதல் 2023–24 முடிய மூன்றாண்டு காலங்களில் பழுது பார்க்க அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. ஊரக

நூலகக் கட்டடங்கள் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தலில் மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்தளம் மற்றும் கழிப்பறை அமைத்தல், பழுதுபட்ட பயன்படுத்த இயலாத அறைகலன்களை மாற்றுதல் மற்றும் புதிய / கூடுதலான புத்தகங்கள் வழங்கப்படுதலும் உள்ளன.

2021-22 ஆம் ஆண்டில் 4116 நூலகங்கள் ரூ.91.75 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. 2022-23 ஆம் ஆண்டில் 3808 நூலகங்கள் ரூ.84.27 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்க எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மீதமுள்ள நூலகங்கள் 2023-24-ல் புதுப்பிக்க எடுத்துக் கொள்ளப்படும்.

### 3.3 பெரியார் நினைவு சமத்துவபுரம்

சமூக நீதியை ஊக்குவிக்கவும், தந்தை பெரியாரின் சமூக சமத்துவ கொள்கையை பரப்பும் பொருட்டும், சுதந்திர பொன்விழா ஆண்டு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாகவும், "பெரியார் நினைவு சமத்துவபுரம்" திட்டம் தமிழ்நாடு அரசால் 1997-98 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு 238 சமத்துவபுரங்கள் இரு கட்டங்களாக அமைக்கப்பட்டன. முதற்கட்டமாக, 1997 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரையில் 145 சமத்துவபுரங்களும் இரண்டாம்

கட்டமாக 2008 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையில் 93 சமத்துவபுரங்களும் அமைக்கப்பட்டன.

பல்வேறு சமூகங்களைச் சார்ந்த மக்கள் சாதி, சமய வேறுபாடின்றி ஒன்றாக வாழ்வதற்கு வழிவகை செய்வதே இதன் நோக்கமாகும். 100 வீடுகளும், அடிப்படை வசதிகளும் கொண்ட மாதிரி கிராமத்தை உருவாக்கிட 8 முதல் 10 ஏக்கர் வரையிலான நிலப்பரப்பு கண்டறியப்பட்டது. இவ்வீடுகள் பல்வேறு இனத்தை சேர்ந்த வீடற்ற ஏழை மக்களுக்கு ஒதுக்கப்பட்டது.

**சமத்துவபுரங்கள் சீரமைப்பு**

சமூக ஒற்றுமையையும், சகோதரத்துவத்தையும் பிரதிபலிக்கும் அடையாளமாக விளங்கும் சமத்துவபுரங்கள், எவ்வித பராமரிப்புமின்றி கைவிடப்பட்ட நிலையில் இருந்ததால், உரிய வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கி 238 சமத்துவபுரங்களையும் படிப்படியாக சீரமைத்திட அரசால் முடிவு செய்யப்பட்டது.

- சமத்துவபுரங்கள் சீரமைப்பு பணிகள் கீழ்க்கண்ட மூன்று கூறுகளை உள்ளடக்கியதாகும்.
    - சிறுபழுதுகள் நீக்கம் – வீடு ஒன்றிற்கு ரூ.50,000/– வீதம்;

○ வெவ்வேறு நிலைகளிலிருந்து திட்ட மதிப்பீட்டின்படி வீடுகளை மீளக்கட்டுதல்;

○ பொது உட்கட்டமைப்பு வசதிகளை சீரமைத்தல்.

● பயனாளிகள் அல்லது அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகள் குடியிருக்கும் வீடுகளில், சிறுபழுதுநீக்கப் பணிகள் சம்மந்தப்பட்ட பயனாளிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. மீளகட்டும் பணிகள் ஒப்பந்தப்புள்ளி முறையை பின்பற்றி பயனாளியின் ஒப்புதலுடன் மேற்கொள்ளப்படுகிறது.

● ஒதுக்கீடு செய்யப்படாத / கைவிடப்பட்ட வீடுகளில் மேற்கொள்ளப்படும் சிறுபழுதுகள் மற்றும் மீளகட்டும் பணிகள் ஒப்பந்தப்புள்ளி முறையை பின்பற்றி மேற்கொள்ளப்படுகிறது. இத்தகைய வீடுகள் உரிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி தெரிவு செய்யப்பட்ட தகுதியான பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

- பொது உட்கட்டமைப்பு சீரமைப்பு பணிகள் ஒப்பந்தப்புள்ளி முறையை பின்பற்றி மேற்கொள்ளப்படுகிறது.
- இந்த நிதியுதவி ஒரு முறை மட்டுமே அரசால் வழங்கப்படும் என்பதால், சீரமைப்பு பணிகளில் பயனாளிகள் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள ஏதுவாகவும், சீரமைப்பு பணிகள் முறையாக நடைபெறுவதை உறுதி செய்திடவும் ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் குடியிருப்போர் நலச்சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

**சமத்துவபுரங்கள் சீரமைப்பு கட்டம்–I (2021–22)**

முதற்கட்டமாக 149 சமத்துவபுரங்கள் சீரமைக்க எடுத்துகொள்ளப்பட்டு அவற்றில் உள்ள வீடுகளில் சிறு பழுது நீக்கம் செய்தல், மிகவும் பழுதடைந்த வீடுகளை மீளக்கட்டுதல் மற்றும் பொது உட்கட்டமைப்பு வசதிகளான குடிநீர் விநியோகம், சாலைகள், தெருவிளக்குகள், விளையாட்டு மைதானங்கள், பூங்காக்கள், சமுதாயகூடம், நூலகம், அங்கன்வாடி, பொது விநியோக அங்காடி, பள்ளிக் கட்டடம் சீரமைத்தல் போன்ற பணிகள் ரூ.190.44 கோடியில் மேற்கொள்ளப்பட்டது.

ஏற்கனவே, கட்டி முடிக்கப்பட்டு, ஆட்சி மாற்றத்தினால் ஒதுக்கீடு செய்யப்படாமல் இருந்த ஐந்து சமத்துவபுரங்களில் விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு சமத்துவபுரமும், சிவகங்கை மாவட்டத்தில் ஒரு சமத்துவபுரமும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், மாவட்டத்திற்கு ஒன்று வீதம் திருச்சிராப்பள்ளி, கடலூர் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் சீரமைக்கபட்டுள்ள மற்ற மூன்று சமத்துவபுரங்களும் விரைவில் திறந்து வைக்கப்படும்.

149 சமத்துவபுரங்களில் வாழும் மக்கள் பயனடையும் வகையில் 11,332 வீடுகளில் சிறு பழுது நீக்கும் பணிகள், 2,364 வீடுகளை மீளகட்டும் பணிகள் மற்றும் 1,939 பொது அடிப்படை வசதி தொடர்பான பணிகளும் மேற்கொள்ளப்பட்டது.

**சமத்துவபுரங்கள் சீரமைப்பு கட்டம்–II**

இரண்டாம் கட்டமாக, மீதமுள்ள 88 சமத்துவபுரங்களில் 7,574 வீடுகளில் சிறு பழுது நீக்கும் பணிகள், 60 வீடுகளை மீளகட்டும் பணிகள் மற்றும் 650 பொது அடிப்படை வசதி தொடர்பான பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**அனைவருக்கும் வீடு கணக்கெடுப்பு**

"குடிசைகள் இல்லாத தமிழ்நாடு" என்ற நிலையை அடைய வேண்டும் என்பதை தமிழ்நாடு அரசு நோக்கமாக கொண்டுள்ளது. நிரந்தர வீடு தேவைப்படும் நிலையில் உள்ள குடும்பங்களுக்கான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. அனைவருக்கும் வீடு கணக்கெடுப்பில் குடிசைகள், நிலைத்த தன்மையற்ற மற்றும் வாழத் தகுதியற்ற வீடுகளில் வாழும் சமுக பொருளாதார சாதி வாரி கணக்கெடுப்பு,
ஆவாஸ் ப்ளஸ், கலைஞர் வீடு வழங்கும் திட்டம் – மறுகணக்கெடுப்பு, புதிய குடிசைகள் கணக்கெடுப்பு ஆகிய பட்டியல்களில் இடம் பெறாத குடும்பங்கள் கணக்கெடுக்கப்பட்டு, கள சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**அரசு திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட வீடுகளை பழுது நீக்கம் மேற்கொள்வதற்கான கணக்கெடுப்பு**

1970–ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு ஊரக பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்கு மாநில மற்றும் ஒன்றிய அரசு பங்களிப்பு திட்டங்களின் மூலம் வீடுகள் வழங்கி வருகிறது. 2010–11 ஆம் ஆண்டுக்கு முன்னதாக கட்டப்பட்ட வீடுகளின் தற்போதைய நிலை குறித்து அறிந்திடும் வகையில் தமிழ்நாடு மகளிர்

மேம்பாட்டு நிறுவனத்தின் சமுதாய வள பயிற்றுநர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் மூலம் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**பிற துறைகளுக்காக செயல்படுத்தப்படும் வீட்டு வசதித் திட்டங்கள்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் வீட்டு வசதி திட்டங்கள் தவிர, மீனவர்கள், இலங்கை அகதிகள், பழங்குடியினர் போன்ற சிறப்பு பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டங்களும் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- மீனவர்களுக்கு வீடு வழங்கும் திட்டமான நீலப்புரட்சி திட்டத்தின் கீழ் 4,069 வீடுகள் ரூ.69.17 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு 2,901 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

- அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையால் 19 மாவட்டங்களில் உள்ள 32 முகாம்களில்
ரூ.175.747 கோடி மதிப்பீட்டில் 3,510 வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ள

இப்பணிகள் குறித்த காலகெடுவிற்குள் முடிக்கப்படும்.

- பழங்குடியினர் நலத்துறையால் 2022–23–ஆம் ஆண்டில் 12 மாவட்டங்களில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் 1,094 வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. தற்போது பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ள இவ்வீடுகள் அனைத்தும் விரைவில் முடிக்கப்படும்.

**3.4 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டமானது தமிழ்நாடு அரசால் முழுமையாக நிதியளிக்கப்படும் திட்டம் ஆகும். இத்திட்டத்தின் கீழ் மாநிலத்தின் 234 தொகுதிகளுக்கு ஆண்டுக்கு ஒரு தொகுதிக்கு ரூ.3.00 கோடி வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளில் உள்ள முக்கிய இடைவெளிகளை கண்டறிந்து அவற்றுக்கான பணிகளை தேர்வு செய்து செயல்படுத்துவதை சட்டமன்ற மேம்பாட்டு திட்டம் வழிவகை செய்கிறது. இத்திட்டம் மாநிலத்தின் ஊரக மற்றும் நகர்ப்புரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2022-23 ஆம் ஆண்டில், அரசால் வெளியிடப்பட்ட புதிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி, குறித்த காலத்தில் பணிகளைத் தேர்ந்தெடுத்து குறிப்பிட்ட காலத்திற்குள் மேற்கொள்ள வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்ட மூன்று மாதங்களுக்குள் பணிகளை பரிந்துரைப்பதன் பேரில், அதற்கான அனுமதி ஒரு மாதத்திற்குள் வழங்கப்பட வேண்டும். மேலும், ஒட்டுமொத்த ஒதுக்கீட்டில், 22% ஆதிதிராவிடர் (SC) மற்றும் பழங்குடியினர் (ST) மக்கள் அதிகம் வசிக்கும் கிராமப்புர பகுதிகளுக்கும், நகர்ப்புரங்களில் உள்ள குடிசைப் பகுதிகளுக்கும் பயன்படுத்த வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. 2022-23 ஆம் ஆண்டில், ரூ.702 கோடி அனைத்து மாவட்டங்களுக்கும் விடுவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

2023-24 ஆம் ஆண்டுக்கு ரூ.702 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 3.5 நமக்கு நாமே திட்டம் (ஊரகம்)

மக்களின் பங்கேற்புடன் பொது சொத்துக்களை உருவாக்குவதை ஊக்குவிக்க நமக்கு நாமே திட்டத்தினை மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்

1997–98 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவித்தார்கள். ஊரக மக்களின் சுய உதவி மற்றும் சுய சார்பு எண்ணத்தை ஊக்குவித்தல் மற்றும் வலிமைப்படுத்துதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தனிநபர்கள், குழுக்கள், அமைப்புகள், வணிக நிறுவனங்கள் அல்லது உள்ளூர் மக்கள் மூன்றில் ஒரு பங்கு பொதுமக்கள் பங்களிப்பை அளித்து நமக்கு நாமே திட்டத்தில் பங்கேற்கலாம். பொது மக்களின் பங்களிப்பு மதிப்பீட்டில் 50 சதவீதம் அல்லது அதற்கு மேல் இருந்தால் மாவட்ட ஆட்சித் தலைவர், ஒப்பந்தப்புள்ளியின்றி, பங்களித்தவரையோ அல்லது அவரின் முகவரையோ, அப்பணியை செயல்படுத்த அனுமதி வழங்கலாம். ஏற்கனவே உள்ள வழிகாட்டு நெறிமுறைகளில் திருத்தம் செய்து, ஆதிதிராவிடர் (SC) / பழங்குடியினர் (ST) குடியிருப்புகளில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான குறைந்தபட்ச பொது மக்கள் பங்களிப்புத் தொகையை ஒட்டுமொத்த பணியின் மதிப்பீட்டில் ஐந்தில் ஒரு பங்காக (1/5) அரசால் குறைக்கப்பட்டது.

2022–23 ஆம் ஆண்டில் நமக்கு நாமே திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ.100.00 கோடி அனுமதிக்கப்பட்டது. 2021–22 மற்றும் 2022–23 ஆம் ஆண்டுகளில் மொத்தம் 2,819 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் 2023-24 ஆம் ஆண்டில், ரூ.100.00 கோடி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**3.6 ஊரக உட்கட்டமைப்பு – சாலைகள்**

தமிழ்நாடு பரந்து விரிந்த கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை உள்ளடக்கிய ஊரகச் சாலைத் தொகுப்பினை கொண்டுள்ளது. ஊரகச் சாலைகள் கிராமப்புர மக்களின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஊரகச் சாலைகளை தொடர்ந்து பயன்படுத்தத்தக்க வகையில் மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் இத்துறையின் முக்கிய செயல்பாடுகளில் ஒன்றாகும்.

தமிழ்நாட்டில், 1,55,351 கி.மீ நீளம் கொண்ட 1,44,083 கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில், 68% சாலைகள் தார் இடப்பட்ட சாலைகளாகவும், 32% சாலைகள் தார் இடப்படாத சாலைகளாகவும் உள்ளன. தேவை மற்றும் முன்னுரிமையின் அடிப்படையில் தார் இடப்படாத சாலைகள் தார்ச் சாலையாக மேம்பாடு செய்ய எடுத்துகொள்ளப்படுகிறது. இதில் தார் இடப்பட்ட 1.02 இலட்சம் கி.மீ சாலையில், 58,875 கி.மீ (58%) நீளமுள்ள ஊரகச் சாலைகள் கடந்த ஐந்தாண்டுகளில் மேம்பாடு மற்றும் பராமரிப்பு செய்யப்படவில்லை. 5 ஆண்டுகளுக்கு உட்பட்ட சாலைகளுக்கு தொடர்

பராமரிப்பும், 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சாலைகளுக்கு, சாலையின் மேற்பரப்பின் நிலையின் (PCI) அடிப்படையில் காலமுறை பராமரிப்பு அல்லது வலுப்படுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சாலையின் மேற்பரப்பின் அடிப்படையில், கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.3**

| வ. எண் | சாலையின் மேற்பரப்பின் வகை | ஊராட்சி ஒன்றிய சாலைகள் | கிராம ஊராட்சி சாலைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | நீளம் (கி.மீ) | | |
| 1. | தார்ச்சாலை | 25,720 | 76,369 | 1,02,089 |
| 2. | சிமெண்ட் சாலை | 319 | 3,246 | 3,565 |
| 3. | ஈரடுக்கு கப்பிச்சாலை | 140 | 1,771 | 1,911 |
| 4. | ஓரடுக்கு கப்பிச்சாலை | 360 | 9,575 | 9,935 |
| 5. | சரளைக்கல் சாலை | 149 | 4,622 | 4,771 |
| 6. | மண் சாலை | 901 | 32,179 | 33,080 |
| மொத்தம் | | 27,589 | 1,27,762 | 1,55,351 |

## 3.7 முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

ஊரகச் சாலைகளுக்கு தொடர் மற்றும் காலமுறை பராமரிப்பு பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டத்தை தவிர்த்து, வேறு திட்டங்களின் கீழ் தற்போது மேற்கொள்ளப்படுவதில்லை. 1.02 இலட்சம் கி.மீ நீளமுள்ள தார்ச் சாலைகள் ரூ.54,000 கோடி சொத்து மதிப்பு உடையது. இச்சாலைகளை முறையாக பராமரிக்கவில்லையெனில், விரைவில் சாலைகள் சேதமடைவதுடன், அரசிற்கு கணிசமான சொத்து இழப்பும் ஏற்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 13.01.2023 அன்று சட்டப்பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு பதிலளித்தபோது, "முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்" என்ற புதிய திட்டத்தை அரசு செயல்படுத்தும் என்றும் இரண்டு ஆண்டுகளில் 10,000 கி.மீ நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய சாலைகள் ரூ.4,000 கோடியில் மேம்படுத்தப்படும் எனவும் அறிவித்தார்கள். ஊராட்சி ஒன்றிய மற்றும் கிராம ஊராட்சி சாலைகளை மேம்படுத்துதல் / வலுப்படுத்துதல் / பராமரித்தல், முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகும்.

**சாலைகளின் மறுவகைப்பாடு**

I. ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சாலைத் தொகுப்பின் முழு விவரத்தினை அறிய வட்டார ஊரகச் சாலைத் திட்டம் (**Block Rural Road Plan**) தயாரிக்கப்படும். மேலும், ஒவ்வொரு சாலைக்கும் தேர்ந்தெடுக்கப்படும் காரணிகளின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

II. ஊரகச் சாலைகளின் வகைப்பாட்டிலுள்ள சமமின்மையை நீக்க, முக்கிய கிராம ஊராட்சி சாலைகள் குக்கிராமங்களை இணைக்கும் ஒற்றை இணைப்புச் சாலைகள், பேருந்து செல்லும் சாலைகள், 3 கி.மீ நீளத்திற்கு மேற்பட்ட சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்டத்தின் முக்கிய சாலைகள், புறவழி சாலைகள் மற்றும் இதர முக்கிய சேவைகளை இணைக்கும் சாலைகள், ஊராட்சி ஒன்றிய சாலைகளாக மறுவகைப்படுத்தப்படும். தோராயமாக, 38,600 கி.மீ நீளமுள்ள கிராம ஊராட்சி சாலைகள் ஊராட்சி ஒன்றிய சாலைகளாக மறுவகைப்படுத்தப்படும்.

III. ஊரகச் சாலைத் தொகுப்பின் மேம்படுத்தப்பட்ட மேலாண்மைக்கு ஊராட்சி ஒன்றிய சாலைகள், முக்கிய ஒன்றிய சாலைகள் (Major Union Roads) மற்றும் இதர ஊராட்சி ஒன்றிய சாலைகள் (Other Union Roads) என மேலும் வகைப்படுத்தப்படும்.

**சிறப்பு அம்சங்கள்**

- இத்திட்டதின் கீழ் ஊராட்சி ஒன்றியங்களால் முன்மொழியப்படும் சாலைகள், இத்துறையின் வசம் உள்ள, இடம் சார்ந்த (Spatial data) தரவுகள் (**புவியியல் தகவல் அமைப்பு**) மூலம் ஆய்வு செய்யப்படும்.
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் மாநிலத் திட்டங்களில், இத்திட்டத்தில் தான் முதன்முறையாக, சாலைகள் மேம்பாட்டிற்கு பிறகு 5 ஆண்டுகால தொடர் பராமரிப்பு, அதன் ஒப்பந்ததாரர்களால் மேற்கொள்ளப்பட உள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்படும் சாலைப் பணிகளின் தரம், தனிப்பட்ட மாநில தரக் கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் மற்றும் மூன்றாந்தரப்பு முகமை மூலமாக ஆய்வு மேற்கொள்ளப்படும். மேலும், இத்திட்டத்தில்

பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டத்திற்கு இணையான தரம் உறுதிபடுத்தப்படும்.

- முக்கிய சாலைகளுடன் ஊரகச் சாலைகள் இணையும் இடத்தில், சாலைகளுக்கான சந்திப்பு மேம்பாடு (Intersection Improvement) கட்டாயம் மேற்கொள்ளப்படும். பாதுகாப்பான சாலைகளை உறுதி செய்வதற்காக வேகத்தடைகள், பாதுகாப்புத் தடைகள் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TNRRIS)**

தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கம், ஊரகச் சாலைத் தொகுப்பினை மேம்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதலில் உள்ள இடைவெளியை நிரப்புதல் ஆகும். இத்திட்டத்திற்கான நிதி, மாநில நிதிக்குழு மானிய நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 29,194 கி.மீ நீளமுள்ள சாலைகள் ரூ.6,427.23 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. 2022-23-ஆம் ஆண்டில் 2,325 கி.மீ நீளமுள்ள சாலைகள் முடிக்கப்பட்டுள்ளன மற்றும் ரூ.718 கோடி செலவினம் செய்யப்பட்டுள்ளது.

## 3.8 நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (NABARD – RIDF)

ஊரக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்பாடு செய்வதில் மாநில அரசுகளுக்கு உதவிடும் வகையில், மாநில அரசுகள் செயல்படுத்தும் ஊரக உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி வழங்கிட நபார்டு வங்கியின் கீழ், "ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி" யினை ஒன்றிய அரசு 1995–96–ஆம் ஆண்டு அறிவித்தது. (இதில் 80% கடனாகவும், 20% மாநில அரசின் பங்காகவும் உள்ளது). ஊரகப் பகுதிகளில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் மிகவும் பழுதடைந்த தார்ச்சாலைகளை மேம்படுத்துதல், தார் இடப்படாத சாலைகளை தேவையின் அடிப்படையில் தார்ச் சாலைகளாக தரம் உயர்த்துதல் மற்றும் பாலங்கள் அமைத்தல் மூலம் ஊரக பகுதிகளில் அனைத்து பருவ காலங்களிலும் பயன்படும் வகையில் சாலைகள் அமைப்பது இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

**சிறப்பு அம்சங்கள்**

- பேருந்துகள்/சிற்றுந்துகள் செல்லும் சாலைகள், விவசாயத்திற்குப் பயன்படும் சாலைகள், தொழில் மற்றும் வணிக மையங்களுக்குச் செல்லும் சாலைகள், சுற்றுலா பகுதிகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்லும் சாலைகள்,

மருத்துவமனை, பள்ளி மற்றும் இதர சேவைகளை இணைக்கும் சாலைகள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, இத்திட்டத்தின் கீழ் சாலைகள் தேர்வு செய்யப்படுகின்றன.

- குறைந்தபட்சம் 1 கி.மீ நீளமுள்ள சாலைகள் இத்திட்டத்தின் கீழ் மேம்பாடு செய்ய எடுத்துக் கொள்ளப்படுகிறது.

இந்த திட்டத்தின் கீழ், 2006–07–ஆம் ஆண்டு முதல் 2022–23–ஆம் ஆண்டு வரை 19,063 கி.மீ நீளமுள்ள கிராம ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சாலைகள் மற்றும் 510 பாலங்கள் ரூ.4,312 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

2021–22–ஆம் ஆண்டில், 113 பாலங்கள் ரூ.333 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, இதுவரை 15 பாலங்கள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 98 பாலங்கள் முன்னேற்றத்தில் உள்ளன. 2022–23–ஆம் ஆண்டில், 80 பாலங்கள் ரூ.262 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

## 3.9 பள்ளி உட்கட்டமைப்பு – குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CFSIDS)

பள்ளிக் கல்வியின் தரத்தை உயர்த்த, தமிழ்நாடு அரசு பல்வேறு நலத் திட்டங்களையும், முன்னெடுப்புகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் விளைவாக, அரசுப் பள்ளிகளுக்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மாநிலத்தில் 21,136 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள் (PUPS) மற்றும் 6,502 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் (PUMS) உள்ளன. இந்தப் பள்ளிகளில் 58,835 கட்டடங்கள் உள்ளன. மேற்கூறப்பட்ட பள்ளிக் கட்டடங்களின் உட்கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு ஆகியவை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. கோவிட்–19 காலத்தில், பள்ளிகள் மூடப்பட்டதாலும் இந்தக் கட்டடங்களின் பராமரிப்பு மற்றும் புனரமைத்தல் பணிகளுக்கு போதிய நிதி ஒதுக்கப்படாததாலும் கற்றலுக்கேற்ற பாதுகாப்பான மற்றும் போதுமான வகுப்பறைகள் கிடைப்பதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் பழுதடைந்த நிலையில் இருந்த 2,745 கட்டடங்களை இடிக்க அரசு விரைவான நடவடிக்கை மேற்கொண்டது.

மேலும், 4,847 பள்ளிகளில் 13,157 கூடுதல் வகுப்பறைகள் தேவைப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது. புதிய வகுப்பறைகளுக்கான தேவை இடைவெளியை குறைக்க, இந்த அரசு, கிராமப்புர மற்றும் நகர்ப்புரங்களில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் புதிய வகுப்பறைகளை கட்டுவதற்காக, 2022-23-ஆம் ஆண்டில் "குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CFSIDS)" அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

2022-23-ஆம் ஆண்டில் ரூ.823 கோடி மதிப்பீட்டில் 5,483 புதிய வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (MLACDS), நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (MPLADS), நமக்கு நாமே திட்டம் (NNT) போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் 236 ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 472 வகுப்பறைகள் ரூ.51.63 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் கட்டடங்கள் பள்ளி மாணவர்களுக்கு சிறந்த கற்பித்தல் – கற்றல்

சூழலை ஏற்படுத்தும் வகையில் இருக்கும். கற்றல் தொடர்பான தகவல்கள் மற்றும் வாழ்க்கைத் திறன்கள் ஓவியங்களாக வரையப்பட்டிருக்கும். பள்ளிக் கட்டடங்கள், போதுமான வெளிச்சம், சிறந்த காற்றோட்டம், பாதுகாப்பு அம்சங்கள், கவர்ச்சிகரமான வண்ணமயமான வரைபடங்கள் மற்றும் படங்கள் போன்ற குழந்தை நேய வடிவமைப்பு அம்சங்களுடன் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

## 3.10 பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (SIDS) 2021-22-ல் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டு, கிராமப்புர மற்றும் நகர்ப்புரங்களில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க (PUPS) மற்றும் நடுநிலைப் (PUMS) பள்ளிகளில் தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை பராமரித்தல் மற்றும் புனரமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

2021-22-ஆம் ஆண்டில், ரூ.135.87 கோடி மதிப்பீட்டில், 10,171 பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோல், 2022-23-ஆம் ஆண்டிற்கு, ரூ.194.65 கோடி மதிப்பீட்டில், 8,824 பழுதுபார்த்தல்

மற்றும் புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

### 3.11 சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்

நக்சலிசம் பரவுதலை கட்டுபடுத்தும் வகையில் பின்தங்கிய மாவட்டங்களான தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரியில் சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் 2003–04 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. மேற்கண்ட இரண்டு மாவட்டங்களில், நக்சல் பாதித்த பகுதிகளில் கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரம், வேலைவாய்ப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் கடைக்கோடி கிராமப்புர மக்களையும் சமூக பொருளாதார பணிகளை வலுவூட்டிடும் வகையிலான பணிகளை மேற்கொண்டு மேற்படி நக்சலைட்டுகளால் பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளில் முன்னேற்றத்தினை விரைவுப்படுத்திட ரூ.750 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### 3.12 பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும் உட்கட்டமைப்பு திட்டங்கள்

#### அ. ஆதி திராவிடர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளான, குடிநீர்

வழங்குதல், தெரு விளக்குகள் அமைத்தல், இணைப்புச் சாலைகள் / தெருக்களை மேம்படுத்துதல், மயானத்தில் எரிமேடை / காத்திருப்போர் கூடம், அணுகு சாலை, விளையாட்டு மைதானங்கள் மேம்பாடு செய்தல் போன்ற பணிகளை செய்வதற்காக நிதியை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு வழங்குகிறது. ஏற்கனவே உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ், மக்கள் தொகையின் அடிப்படையில் ஆதி திராவிடர் குடியிருப்புகள் தேர்வு செய்யப்படுகின்றன. 2022-23 ஆம் ஆண்டிற்கு, ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2023-24-ஆம் ஆண்டில் அனைத்து திட்டங்களையும் ஒருங்கிணைத்து ஆதி திராவிடர் மக்கள் மற்றும் குடியிருப்புகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் முழுமையடையும் வகையில் வழங்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

**ஆ, பழங்குடியினர் வாழும் பகுதிகளில் உட்கட்டமைப்பு மேம்பாடு செய்தல்**

பழங்குடியினர் வாழும் பகுதிகளில் தெரு விளக்குகள் அமைத்தல், குடிநீர் வசதி செய்தல், சாலைகள் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 2021–2022–ஆம் ஆண்டிற்கு தெரு விளக்குகள், சூரிய விளக்குகள் மற்றும் குடிநீர் வசதிகள் ஏற்படுத்த ரூ.25.19 கோடி நிதி ஒதுக்கீடு பழங்குடியினர் நலத்துறையால் வழங்கப்பட்டுள்ளது.

# 4. ஒன்றிய அரசு பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

## 4.1 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்

### 4.1.1 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்துதல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் பிப்ரவரி 2006–ல் ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டது. இது ஒவ்வொரு நிதியாண்டிலும் திறன்சாரா உடலுழைப்பினை வழங்க முன்வரும் ஊரக குடும்பங்களுக்கு 100 நாட்கள் வேலைவாய்ப்பை அளிக்கும் திட்டமாகும்.

### 4.1.2 திட்டத்தின் சிறப்பம்சங்கள்

1. பத்து முக்கியச் சட்ட உரிமைகள் பின்வருமாறு:
   - அ. வேலை அட்டை பெறுவதற்கான உரிமை
   - ஆ. வேலை கோரிய பதினைந்து தினங்களுக்குள் வேலை பெறுதலுக்கான உரிமை
   - இ. வேலையில்லாப்படி பெறுவதற்கான உரிமை
   - ஈ. தேவையான பணிகளைத் தேர்ந்தெடுத்து தொகுக்கும் உரிமை
   - உ. 5 கி.மீ. தொலைவிற்குள் வேலை பெறுதலுக்கான உரிமை
   - ஊ. பணித்தளத்தில் அடிப்படை வசதிகள் பெறுவதற்கான உரிமை
   - எ. அறிவிக்கப்பட்ட ஊதியம் பெறுவதற்கான உரிமை

ஏ. பதினைந்து தினங்களுக்குள் ஊதியம் பெறுவதற்கான உரிமை

ஐ. காலங்கடந்து ஊதியத் தொகை வழங்கினால் இழப்பீடு பெறுவதற்கான உரிமை

ஒ. குறித்த காலத்திற்குள் குறைகள் மீது தீர்வு காணல் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட அனைத்து செலவுகள் மீது தொடர் சமூகத் தணிக்கை மற்றும் சமூக தணிக்கை மேற்கொள்ளுதல்.

2. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் 'பணி வாரம்' என்பது ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை வேலை ஆரம்பித்து அடுத்த புதன்கிழமை வரை வேலை நடைபெறுவதாகும். ஊராட்சிகளிலுள்ள தொகுப்புகளில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

3. திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊதியம் ஊரக விலைப் பட்டியலின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தின் திருத்திய அட்டவணை–I–ன்படி திறன்சாரா தொழிலாளர்களுக்கான விலைப் பட்டியலின்படியான ஊதியமானது, ஓர் வயது வந்த

நபர் ஒரு மணி நேர உணவு இடைவேளையுடன் கூடிய எட்டு மணி நேர வேலைக்கு பெறக்கூடியதற்கு (அதாவது ஏழு மணி நேர செயல் விளைவுடைய வேலை) சமமாக நிர்ணயிக்கப்படுகிறது.

4. மாற்றுத் திறனாளிகளுக்கென சிறப்பு ஊரக விலைப்புள்ளி பட்டியலைப் பின்பற்றி அரசாணை வெளியிடப்பட்டு முறையாக பின்பற்றப்படுகிறது. இவ்வரசாணையில் மாற்றுத் திறனாளிகளுக்கென மண் வேலை தொடர்பான மற்றும் இதர சிறப்பு பணிகள் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.
5. ஒப்பந்ததாரர்கள் மற்றும் உடல் உழைப்பை தவிர்க்கும் இயந்திரங்களுக்கு அனுமதி இல்லை.
6. அனைத்து கட்டுமானப் பணிகளிலும் தொழிலாளர் ஊதியக்கூறிற்கு ஊரக விலைப்புள்ளி பட்டியலையும், பொருள் செலவினக்கூறிற்கும் திறன்சார் தொழிலாளர் ஊதியத்திற்கும் பொதுப் பணித்துறை விலைப்புள்ளி பட்டியலையும் கட்டாயமாக பின்பற்ற வேண்டும்.
7. குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் வேலைக்கு விண்ணப்பிக்கவும், அவ்வேலையினைப் பெறுவதற்கும் வேலை அட்டையினைப் பெற உரிமை பெற்றுள்ளனர். வேலை அட்டை ஒவ்வொரு ஐந்து

ஆண்டிற்கும் ஒரு முறை புதுப்பிக்கப்படுகிறது. 01.04.2022–லிருந்து ஐந்து வருடங்களுக்குச் செல்லத்தக்க புதிய வேலை அட்டைகள் 100 சதவிகித சரிபார்ப்பிற்குப் பின் தொடர்ந்து பணிபுரியும் அனைத்து தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

8. 2017–18–ம் ஆண்டிலிருந்து 12,524 கிராம ஊராட்சிகளிலும் மின்னணு வருகைப் பதிவேடு (e–MR) பயன்படுத்தப்பட்டு வருகிறது.
9. தமிழ்நாட்டிற்கு, 01.04.2023 முதல் ஆண்கள் மற்றும் பெண்கள் என்ற வேறுபாடின்றி ஊதியம் நாளொன்றுக்கு ரூ.294 என திருத்தியமைக்கப்பட்டுள்ளது.
10. பணித்தளம் 5 கி.மீ. தூரத்திற்கு மேல் இருக்கும் பட்சத்தில், போக்குவரத்து மற்றும் வாழ்வினத் தொகையாக ஊதியத்தில் 10 விழுக்காடு கூடுதலாக வழங்கப்படும். இருப்பினும், தமிழ்நாட்டில் வேலை நடைபெறும் இடம் 2 கி.மீ. சுற்றளவிற்குள் இருக்குமாறு பணிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.
11. பணித்தளத்தில் குடிநீர், முதலுதவிப்பெட்டி, நிழற்கூடங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்படுகிறது.
12. கிராம சபையில் "கிராம சமூகத் தணிக்கையாளர்கள்" அதாவது மகளிர் சுய உதவிக்குழு

உறுப்பினர்களிலிருந்து பயிற்சி பெற்ற கிராம வள நபர்கள் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகள் சமூகத் தணிக்கை செய்யப்படுகின்றது.

13. கிராம சபைக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அந்தந்த கிராம ஊராட்சிகளில் எடுத்து செய்ய இருக்கும் பணிகளின் தொகுப்பு மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பணிகளை தேர்வு செய்வதற்கும் அனைத்து தொழிலாளர்களுக்கும் உரிமை உள்ளது.
14. வேலை நடைபெறும் அனைத்து இடங்களிலும் வேலையின் பெயர், அனுமதிக்கப்பட்ட தொகை, பணி நடைபெற்ற காலம் போன்ற விவரங்களுடன் கூடிய குடிமக்களுக்கான தகவல் பலகை வைக்கப்படுகிறது.
15. 65.17 இலட்சம் ஊரக குடும்பங்களில் உள்ள 75.01 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது.

### 4.1.3 நிதி விடுவிப்பு

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கான நிதி மூன்று முக்கிய கூறுகளாக பிரிக்கப்பட்டுள்ளது:

1. திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊதியக்கூறு (100% ஒன்றிய அரசு)
2. கட்டுமான பொருட்கள் மற்றும் பணிகளுக்கான பொருட்கூறு (75% ஒன்றிய அரசு மற்றும் 25% மாநில அரசு)
3. அலுவலர்களுக்கான ஊதியம் மற்றும் இதர செலவினங்களுக்கான நிர்வாக செலவின கூறு (100% ஒன்றிய அரசு)

திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி மொத்த செலவினத்தில் பொருட்கூறுக்கான செலவினம் 40%–க்கு மேல் மேற்கொள்ளப்படக்கூடாது.

### 4.1.4 குறித்த காலத்திற்குள் வங்கிகள் மூலம் ஊதியம் வழங்குதல்

2022–23–ம் நிதியாண்டில் 100 சதவிகித ஊதியத் தொகை பதினைந்து நாட்களுக்குள் வழங்கப்பட்டு வருகிறது. குறித்த காலத்திற்குள் ஊதியம் வழங்குதலை (நிலை–I) T+8 ஆகவும் மற்றும் (நிலை–II) T9-T15 ஆகவும் ஒன்றிய அரசு திருத்தி வரையறுத்துள்ளது.

தொழிலாளர்களின் ஊதியத் தொகை 100 விழுக்காடு அவர்களது வங்கிக் கணக்குகளில் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ்

அனைத்து பரிவர்த்தனைகளும் மின்னணு நிதி மேலாண்மை முறை (e-FMS) மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

### 4.1.5 அனுமதிக்கப்பட்ட பணிகள்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் அனுமதிக்கப்பட்ட பணிகளின் பட்டியலை நான்கு பிரிவுகளின் கீழ் வழங்குகிறது. அட்டவணை-I-ல் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு பணிகளை அடிப்படையாகக் கொண்டு, மேலாண்மை தகவல் மைய அமைப்பு மூலம் இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட 268 பணிகளில் 182 பணிகள் இயற்கை வள மேலாண்மைப் பணிகளாகும். 164 பணிகள் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த பணிகளாகும்.

### 4.1.6 இயற்கை வள மேலாண்மை பணிகள் / விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த செயல்பாடுகள்

இயற்கை வள மேலாண்மை பணிகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் முக்கிய இலக்காகும். அதன்படி. பசுமை மற்றும் வறட்சி தடுப்பு நடவடிக்கைகளாக பெருமளவு மரக்கன்று நடுதல் மற்றும் சாலையோர மரக்கன்று நடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும்,

தடுப்பணைகள், மீன் நிரப்பு குழிகள், கசிவு நீர்க் குட்டைகள், அகழிகள், பண்ணைக் குட்டைகள், உறிஞ்சுக் குழிகள் ஆகிய செயற்கை மீள் நிரப்பு கட்டமைப்புகள் அமைப்பதன் மூலம் நிலத்தடி நீர் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வரத்துக் கால்வாய்கள் மற்றும் பாரம்பரிய நீர் நிலைகள் போன்றவை புனரமைக்கப்பட்டு அவை முழு கொள்ளளவை எட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

ஒன்றிய அரசு (ஊரக வளர்ச்சி அமைச்சகம்) வெளியிட்ட நீர் பாதுகாப்பு இயக்கத்தின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி 65 சதவீத செலவீனம் இயற்கை வள மேலாண்மை பணிகளுக்கும், 60 சதவீத செலவீனம் வேளாண்மை மற்றும் வேளாண் சார் பணிகளுக்கு செலவிட வேண்டும். தனிநபர் மற்றும் சமுதாயம் சார்ந்த இயற்கை வள மேலாண்மை பணிகளை குறிப்பாக நீர் பற்றாக்குறை வட்டாரங்களில் தமிழ்நாடு அரசு கவனம் செலுத்துகிறது. 2022-23 ஆம் ஆண்டில் 2,86,804 இயற்கை வள மேலாண்மை பணிகள் ரூ.7,308 கோடியில் எடுக்கப்பட்டு 1,71,752 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது இது மொத்த செலவினத்தில் 73.95% ஆகும்.

### 4.1.7 நீர் வள மேலாண்மைக்கான 100 நாள் சிறப்பு முயற்சிகள் (2021)

அதிக அளவில் நீர் சேமிப்பு பணிகளை மேற்கொள்ளும் விதமாக செப்டம்பர்–நவம்பர் 2021–ல் 100 நாள் சிறப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஒன்றிய அரசின் 'ஜல் சக்தி அபியான்–மழை நீர் சேகரிப்பின் ஒரு பகுதியாக 4,057 தடுப்பணைகள், 16,784 பண்ணைக்குட்டைகள், 1,562 கசிவு நீர்குட்டைகள், 5,681 நீர் அகழிகள், 6,283 அமிழ்ந்த நீர்குட்டைகள் போன்ற 27,973 பணிகள் சிறப்பு முயற்சியாக மாநிலம் முழுவதும் செய்து முடிக்கப்பட்டது. இந்த முயற்சியானது நீர் சேமிப்பு மற்றும் நீர்நிலைகளைப் பாதுகாப்பதில் உள்ளூர் மக்களின் மத்தியில் ஆர்வத்தை மீண்டும் உருவாக்கியுள்ளது.

### 4.1.8 நீர் வள மேலாண்மைக்கான 75 நாள் சிறப்பு முயற்சிகள் (2022)

2022 ஆம் ஆண்டில், மார்ச் 22, 2022 (உலக நீர் தினம்) முதல் ஜூன் 5, 2022 (உலக சுற்றுச்சூழல் தினம்) வரையிலான காலத்தில் 75 நாள் சிறப்பு முயற்சியாக 2 குறிக்கோள்களுடன் நீர்வளப் பணிகள் எடுக்கப்பட்டன.

இக்காலத்தில் ஊரக பகுதிகளில் விழும் ஒவ்வொரு துளி மழை நீரையும் சேகரிக்கும் வண்ணம் தடுப்பணைகள், பண்ணைக்குட்டைகள், நீர் அகழிகள், மேற்கூரை மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் போன்ற 15,397 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பசுமை வளம் அதிகரிப்பதை உறுதி செய்ய இந்த 75 நாட்களில் மாநிலம் முழுவதும் உள்ள ஒவ்வொரு வட்டார நாற்றங்கால் பண்ணைகளிலும் 10,000 மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு சுமார் 30,00,000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

நடப்பாண்டின் ஜல் சக்தி அபியான் திட்டத்தின் கீழ் "குடிநீர் ஆதாரங்களின் நிலைத்தன்மையை உறுதி செய்தல்' என்ற கருப்பொருளுடன் ஓர் முயற்சி மார்ச் 22 ஆம் தேதியில் தொடங்கப்பட்டுள்ளது.

அனைத்து கிராம ஊராட்சிகளிலும், 22 மார்ச் 2023 அன்று உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் உள்ளூர் நீர்நிலைகளை பாதுகாக்கவும், நீர் விரயத்தை குறைக்கவும், அனைத்து கட்டடங்களிலும் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை அமைக்கவும் உறுதிமொழி எடுக்கப்பட்டது.

### 4.1.9 கண்காணிப்பு முறை

### தேசிய கைப்பேசி கண்காணிப்பு முறை

தேசிய கைப்பேசி கண்காணிப்பு செயலி 21 மே 2021 அன்று ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு அனைத்து மாநிலங்களும் தினசரி கட்டாயம் பயன்படுத்த அறிவுறுத்தியுள்ளது. மேலும், இச்செயலி மூலம் தினமும் இரு முறை தொழிலாளர்களது வருகையினை பணித்தளத்தில் இருந்து பதிவு செய்வதன் மூலம் ஓர் வெளிப்படை தன்மை ஏற்படுத்தப்படுகிறது. இத்திட்ட தொழிலாளர்களின் தினசரி வருகைப்பதிவினை இச்செயலி மூலம் மாநில அளவில் நடைபெற்று வரும் அனைத்து பணிகளும் எடுக்கப்படுவதைக் கண்காணித்து உறுதிசெய்யும் பணியில் களநிலை அலுவலர்களும் ஈடுபட்டுள்ளனர். இதற்காக அனைத்து பணித்தள பொறுப்பாளர்களுக்கும் உரிய பயிற்சி வழங்கப்பட்டுள்ளதோடு வட்டார / மாவட்ட அளவிலாள அலுவலர்கள் தினசரி முன்னேற்றத்தினை கண்காணிக்க உணர்த்தப்பட்டுள்ளனர்.

### பகுதி அலுவலர் ஆய்வு செயலி

பகுதி அலுவலர்கள் ஆய்வு செயலி 21.05.2021 அன்று ஊரக வளர்ச்சித் திட்டங்களை

திறம்பட கண்காணிப்பதற்காக ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டது.

இச்செயலி மாநில அலுவலர்கள் தங்களது கள ஆய்வு முடிவுகளை இணையதளம் மூலம் பதிவு செய்ய வழிவகுக்கும். இது ஊரக வளர்ச்சித் துறையால் தொடங்கப்பட்ட அனைத்து திட்டங்களுக்கும் நேரம் முத்திரையிடப்பட்ட மற்றும் புவிக்குறியீடு செய்யப்பட்ட புகைப்படத்தை பதிவு செய்ய அனுமதிக்கு . மேலும் கள ஆய்வு விவரங்களை தங்குதடையின்றி தெரிவிப்பதற்கும் இவ்விவரங்களை உயர் அலுவலர்கள் rural.nic.in இணையதளத்தின் மூலம் காண்பதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 4.1.10 வெளிப்படை தன்மை

**சமுக தணிக்கை**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட தணிக்கை விதிகள் 2011 பிரிவு 3(1)–ன்படி ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் இச்சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளை மாநில அரசாங்கம் குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை சமூக தணிக்கை மேற்கொள்ள வழிவகை செய்யவேண்டும். சமூக தணிக்கை வள அலுவலர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில், மக்களால் சமூக தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. நிதி செலவினம்

மட்டுமல்லாது திட்டத்தின் செயல்முறை, சமூக ஏற்றத்தாழ்வு மற்றும் பணித்திறன் ஆகிய கோணங்களிலிருந்து ஆய்வு செய்வது சமூக தணிக்கையின் நோக்கமாகும். சமூக தணிக்கை, தகவல் பரிமாற்றம், கல்வி, தகவல் தொடர்பு ஆகியவற்றின் மூலம் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையை அதிகப்படுத்தவும், வளர்ச்சித் திட்டங்களின் செயல்பாடுகளான திட்டமிடுதல், பணிகளை தேர்வு செய்தல், அமல்படுத்துதல், செயல்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றில் பொது மக்களின் பங்கேற்பினை அதிகப்படுத்தவும் உதவுகிறது.

**சமூக தணிக்கைக்கான நிறுவன அமைப்புகள்**

தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கமானது (SASTA) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம் 1975–ன் கீழ் பதிவு செய்யப்பட்டு இந்திய அரசின் வழிகாட்டுதல்படி இயங்குகிறது.

மாவட்ட வள பயிற்றுநர்கள் மற்றும் வட்டார வள பயிற்றுநர்கள் ஒவ்வொரு கிராம வள பயிற்றுநர்கள் பயிற்சி அளித்து சமூக தணிக்கை நடைபெற உதவுவார்கள். ஒவ்வொரு ஊராட்சியிலும் கிராம வள பயிற்றுநர்கள் கிராம சபையால் தேர்வு செய்யப்பட்டு,

அவர்களுக்கு எதேச்சையாக கிராமங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சமூக தணிக்கை மேற்கொள்வார்கள்.

**சமூக தணிக்கையின் தாக்கம்**

சமூக தணிக்கையினை, திட்டத்தின் பயனாளிகளே மேற்கொள்வதால், சமூக தணிக்கையானது திட்டப் பயனாளிகளிடையேயும், திட்டத்தினை செயல்படுத்துபவர்கள் மத்தியிலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சமூக தணிக்கைக்காக ஏற்பாடு செய்யப்படும் சிறப்பு கிராம சபையில் நடைபெறும் விவாதமானது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட செயல்பாட்டின் பொது கருத்து கேட்பினை ஒத்து இருப்பதால், இத்திட்டத்தில் பணிபுரிபவர்கள் தங்களுடைய உரிமைகள் மற்றும் பலன்களை அறிந்துகொள்ளும் விழிப்புணர்வு கூட்டமாகவும் சிறப்பு கிராம சபை அமைகிறது. சமூக தணிக்கையின் பலனாக கிராம ஊராட்சி மற்றும் வட்டார அளவிலும் பதிவேடுகள் பராமரிப்பது மேம்பட்டு வருகிறது

**2022-23-ம் ஆண்டிற்கான சமூக தணிக்கை நடவடிக்கைகள்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் 2020-21 மற்றும் 2021-22 ஆம் ஆண்டுகளுக்கான செலவினங்கள் தொடர்பான சமூக

தணிக்கையானது 2022-23 ஆம் நிதியாண்டில் இதுவரை 11,905 கிராம ஊராட்சிகளில் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 619 கிராம ஊராட்சிகளில் இத்தணிக்கையானது 08.04.2023-க்குள் முடிக்கப்படும்.

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்) மற்றும் 15-வது நிதிக்குழு போன்ற பிற திட்டங்களுக்கும் சமூக தணிக்கை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

### 4.1.11 குறைகேள் அலுவலர்

மாவட்ட அளவில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் தொடர்பான குறைகள் மற்றும் புகார்களை நிவர்த்தி செய்ய குறை தீர் அலுவலர் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. 37 மாவட்டங்களுக்கும் குறைகேள் அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

### 4.1.12 ஊதியம் தாமதமாக வழங்கியதற்கான இழப்பீடு மற்றும் வேலையில்லா படி வழங்குதல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் தொழிலாளர்கள் வேலை செய்ததற்கான ஊதியத்தினை தாமதமாக வழங்கும் நிகழ்வுகளில் இழப்பீட்டுத் தொகையும், வேலை கோரிய 15

நாட்களுக்குள் வேலை வழங்கப்படாத நிகழ்வுகளில் வேலையில்லா படி வழங்குவதற்கும் வழிவகை செய்கிறது. தமிழ்நாடு அரசு வேலையில்லா படி வழங்குவதற்கான விதிமுறைகள் மற்றும் ஊதியம் தாமதமாக வழங்கியதற்கான இழப்பீட்டு விதிமுறைகள் குறித்த அறிவிக்கைகளை 2022 ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளது.

### 4.1.13 2023-24-ம் ஆண்டிற்கான தொழிலாளர் வரவு செலவு மதிப்பீடு

மனித சக்தி நாட்களுக்கான தொழிலாளர் வரவு செலவு மதிப்பீடு ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் கீழிருந்து மேற்செல் அணுகுமுறையில் தயாரிக்கப்படுகிறது. இம்மதிப்பீடு தயாரிக்கும் பணியில் தொகுப்பு வாரியான தேவைகளை கணக்கில் கொண்டு இறுதி செய்யப்பட்டுள்ளன. ஒன்றிய அரசிடமிருந்து 2023-24 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் வரவு செலவு திட்டத்திற்கு 35 கோடி மனித சக்தி நாட்களை பெற முன்மொழியப்பட்டுள்ளது.

### 4.1.14 கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்துடன் ஒருங்கிணைப்பு

மாநில அரசின் ஓர் முதன்மை திட்டமாக கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த

வேளாண் வளர்ச்சித் திட்டத்தினை வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை துவக்கியுள்ளது. இது அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II செயல்படுத்தப்பட்டு வரும் அதே ஊராட்சிகளில் செயல்படுத்துவதன் மூலம் புவியியல் சார் ஒருங்கிணைப்பு உறுதி செய்யப்படும். 2021-22 இல் 2,657 கிராம ஊராட்சிகளிலும் 2022-23 இல் 2,544 கிராம ஊராட்சிகளிலும் இவ்விரு திட்டங்கள் இணைந்து செயல்படுத்தப்படும்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II-ன் கூறுகளான நீர் நிலைகளை புனரமைத்தல், வாழ்வாதாரம் மற்றும் சந்தைப்படுத்துதல், பொது உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற பணிகள் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட நோக்கம் மற்றும் அதன் பலன்களுடன் நேரடியாக ஒருங்கிணைக்கப்படுகிறது. இதே போல் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் குறிப்பிடத்தக்க பகுதி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட கூறுகளுடன் குறிப்பாக நீர் வள பாதுகாப்பு பணிகளான தடுப்பணைகள் (சிமெண்ட் கான்கிரீட் / கம்பி வலை), பண்ணைக் குட்டைகள், அகழிகள், அமிழ்ந்த குழிகள், மீள் நிரப்புத் தண்டு போன்ற பிற பணிகளை மேற்கொள்ள வழிவகை

செய்கிறது. கூடுதலாக மண் பாதுகாப்பு பணிகளான மண் வரப்புகள், கல் வரப்புகள் மற்றும் இதர நில மேம்பாட்டு பணிகள் வேளாண் விவசாயிகளுக்காக மேற்கொள்ளப்படுகிறது. இதேபோல், இத்துறை மூலம் அர்ப்பணிக்கப்பட்ட தோட்டக்கலை நாற்றங்கால்கள் (1,500) மற்றும் முருங்கை நாற்றங்கால்கள் (3,500) போன்றவை சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களில் நடவு செய்ய ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்–II புவியியல் ரீதியாகவும் திட்ட செயலாக்க ரீதியாகவும் இயற்கை வள மேலாண்மை மற்றும் நீர் பாதுகாப்பு மூலம் உழவர்களுக்கு பலனை வழங்கிட ஒருங்கிணைந்து செயல்படும். கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட ஊராட்சிகளில் மேற்கொள்ளப்படும் ஒருங்கிணைந்த பணிக்கூறுகளுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மூலம் சிறப்பு உந்துதல் தரப்படும். ஊரக வளர்ச்சித் துறையின் இத்தகைய முழுமையான அணுகுமுறை ஊரகப் பகுதியின் வாழ்க்கைத் தர குறியீடுகளை குறிப்பிடத்தக்க அளவு உயர்த்துவதோடு தன்னிறைவு அடைவதை உறுதி செய்யும்.

### 4.1.15 தமிழ்நாடு மாநில வாழ்வாதார இயக்கத்துடன் ஒருங்கிணைப்பு

சுய உதவிக் குழு மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் திட்ட செயலாக்க முகமைகளாகக் நியமனம் செய்யப்பட்டுள்ளன. 2022-23 ஆம் ஆண்டில் 388 வட்டார அளவிலான நாற்றங்கால்கள், 3,500 முருங்கை நாற்றங்கால்கள் மற்றும் 1,500 தோட்டக்கலை நாற்றங்கால்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை திட்ட செயலாக்க முகமைகளாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 4.1.16 மனித சக்தி நாட்களை அதிகரிக்க மேற்கொள்ளப்பட்ட சிறப்பு முயற்சிகள்

**அ. தொகுப்புகளை அதிகரித்தல்**

தொழிலாளர்களின் வசிப்பிடத்திலிருந்து 2 கி.மீ. சுற்றளவிற்குள் அதிகளவு மக்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்குவதற்காக தொகுப்புகள் முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான அனைத்து குடும்பங்களுக்கும் 100 நாட்கள் வேலை வாய்ப்பை வழங்குவதற்காக, ஒவ்வொரு கிராம ஊராட்சியின் தேவைக்கேற்ப கூடுதல் தொகுப்புகளை உருவாக்க

மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் 23,849 தொகுப்புகள் இருந்த நிலையில் தற்போது 3,412 புதிய தொகுப்புகள் கூடுதலாக உருவாக்கப்பட்டு 27,261 தொகுப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**ஆ. பணி இணையாளர்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணித் தளத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களை மேற்பார்வையிடுவதற்காக ஒவ்வொரு பணித்தளத்திற்கும் ஒரு பணி இணையாளர் ஈடுபடுத்தப்படுகிறார். வருகையை பதிவு செய்ய மற்றும் எளிய வழிகாட்டுதல்களை வழங்க தொழிலாளர்களில் இருந்து ஒருவர் தேர்வு செய்யப்படுவார் அவர் அவ்வேலை முடிவுறும் வரையிலோ அல்லது 100 நாட்கள் வரையிலோ இதில் எதில் முந்தையதோ அப்போது கட்டாயமாக பணியில் இருந்து மாற்றப்படுவார்.

**இ. வேலை உறுதி திட்டப் பணி ஒருங்கிணைப்பாளர்களை ஈடுபடுத்துதல்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்த ஏதுவாக முன்னர் மக்கள் நலப் பணியாளர்களாக பணிபுரிந்தவர்கள் மற்றும் அவர்களில் இறந்தவர்களின் வாரிசுதாரர்கள் அவர்களது

விருப்பத்தின் பேரில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வேலை உறுதித் திட்ட பணி ஒருங்கிணைப்பாளர்களாக ஈடுபடுத்தப்பட்டு இத்திட்ட நிர்வாக கூறு நிதியிலிருந்து மாதந்தோறும் ரூ.5,000 மற்றும் ஊராட்சி நிதியிலிருந்து ரூ.2,500-ம் ஆக மொத்தம் ரூ.7,500 மதிப்பூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

## 4.2 அனைவருக்கும் வீடு - பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டம்

### 4.2.1 முன்னுரை

ஊரக குடியிருப்புத் திட்டமான இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தை மேம்படுத்தும் விதமாக அத்திட்டம் சீரமைக்கப்பட்டு பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டமாக ஒன்றிய அரசின் பங்களிப்புடன் 2016-17 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் நிதிபங்களிப்பு 60:40 என இருந்தாலும் தமிழ்நாட்டைப் பொருத்தவரை இந்த விகிதமானது 38:62 ஆக உள்ளது. அதாவது அனைவருக்கும் வீடு - பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கு

வழங்கப்படும் தொகையில் 62% மாநில அரசால் வழங்கபடுகிறது.

### 4.2.2 நோக்கம்

ஊரகப் பகுதிகளில் வாழும் வீடில்லாத ஏழைகளுக்கும், குடிசைகளிலும், சிதிலமடைந்த வீடுகளிலும் வசிக்கும் குடும்பங்களுக்கும் அடிப்படை வசதிகளுடன் கூடிய நிரந்தர வீடுகளை 2022–ஆம் ஆண்டுக்குள் வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஒன்றிய அரசு தற்போது இத்திட்டத்தினை 2024–ம் ஆண்டுவரை நீட்டித்துள்ளது.

### 4.2.3 வீட்டு வசதி திட்டத்திற்கு மாநில அரசின் பங்களிப்பு

பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் கட்டப்படும் ஒரு வீட்டிற்கான அலகு தொகை ரூ.2.77 இலட்சமாகும். இதில் மாநில அரசின் காங்கிரீட் மேற்கூரை அமைப்பதற்கான தொகை மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தூய்மை பாரத இயக்கம் ஆகிய திட்டங்களின் ஒருங்கிணைப்பு மூலம் வழங்கப்படுகிற நிதியும் உள்ளடங்கும். அதன் விவரம் பின்வருமாறு:

## அட்டவணை 4.1

## வீடு ஒன்றிற்கு தமிழ்நாட்டில் வழங்கப்படும் தொகை விவரம்

(ரூபாயில்)

| விவரம் | ஒன்றிய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | மொத்தம் |
|---|---|---|---|
| அலகுத் தொகை | 72,000 | 48,000 | 1,20,000 |
| மாநில அரசின் காங்கிரீட் மேற்கூரை அமைப்பதற்கான கூடுதல் நிதி | – | 1,20,000 | 1,20,000 |
| தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கு | 7,200 | 4,800 | 12,000 |
| மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 90 மனித சக்தி நாட்களுக்கான ஊதியம் | 25,290 | – | 25,290 |
| **மொத்தம்** | **1,04,490** | **1,72,800** | **2,77,290** |

#### 4.2.4 முக்கிய அம்சங்கள்

- வீட்டின் குறைந்தபட்ச பரப்பளவு 25 சதுர மீட்டர் (269 சதுர அடி) ஆகும். இது சுகாதாரமாக சமைப்பதற்கான பகுதியையும் உள்ளடக்கியது.
- பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 60% ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கும், 40% இதர பிரிவினருக்கும் ஒதுக்கப்படுகிறது (தகுதி உள்ள சிறுபான்மை குடும்பங்கள் இருக்குமேயானால் அவர்களுக்கு வழங்கப்படும் 15% இதில் அடங்கும்). அனைத்து பிரிவுகளிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு 5% ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.
- 2019–20 வரை சமூக பொருளாதார சாதிவாரி கணக்கெடுப்பு–2011 புள்ளி விவரங்களிலிருந்து பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்ட வழிகாட்டு நெறிமுறையில் தெரிவிக்கப்பட்டுள்ள சேர்த்தல், நீக்கல் காரணிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நிலையான காத்திருப்பு பட்டியலிலிருந்து பயனாளிகள் கிராம சபை மூலம் தெரிவுசெய்யப்பட்டனர்.
- 2021–22 ஆம் ஆண்டுக்கான வீடுகள் ஆவாஸ் பிளஸ் பட்டியலில் இருந்து அனுமதிக்கப்பட்டு வருகிறது.

- பயனாளிகளுக்கு வழங்கப்படும் தொகை அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

## அட்டவணை 4.2

## பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கட்டப்பட்ட வீடுகள்

| வருடம் | இலக்கு | அனுமதிக்கப்பட்டவை | முடிவுற்றது | | | நிலுவை | அனுமதிக்கப் பட்ட வீடுகளில் முடிவுற்ற வீடுகள் சதவீதம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 31.03.22 வரை | 01.04.22 முதல் 24.03.23 | மொத்தம் | | |
| 2016-17 | 176338 | 176338 | 145065 | 6195 | **151260** | 25078 | 85.78 |
| 2017-18 | 130214 | 130214 | 100268 | 6745 | **107013** | 23201 | 82.18 |
| 2018-19 | 21000 | 21000 | 13927 | 1902 | **15829** | 5171 | 75.38 |
| **கூட்டுத்தொகை** | **327552** | **327552** | **259260** | **14842** | **274102** | **53450** | **83.68** |
| 2019-20 | 200000 | 187183 | 76352 | 32275 | **108627** | 78556 | 58.03 |
| 2021-22 | 289887 | 265409 | 31 | 117470 | **117501** | 147908 | 44.27 |
| **கூட்டுத் தொகை** | **489887** | **452592** | **76383** | **149745** | **226128** | **226464** | **49.96** |
| **பெரு மொத்தம்** | **817439** | **780144** | **335643** | **164587** | **500230** | **279914** | **64.12** |

(மீதமுள்ள வீடுகளின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. நிலுவையில் உள்ள அனைத்து வீடுகளும் 31.12.2023-க்குள் கட்டிமுடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.)

### 4.2.5 பெறப்பட்ட நிதி விவரம் (2022–23)

நடப்பு நிதியாண்டில், பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் நாளதுவரை ரூ.2,492.90 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. விடுவிக்கப்பட்ட தொகையில், திட்ட பயன்பாட்டிற்காக ரூ.2,430.89 கோடி செலவிடப்பட்டுள்ளது. மேலும், ரூ.667.46 கோடி விடுவிக்கக்கோரி ஒன்றிய அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

### 4.2.6 வீடுகளை துரிதமாக கட்டி முடிக்க 2022–23 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டும் பணிகளை துரிதப்படுத்த கீழ்காணும் முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

i. நிலுவையிலுள்ள வீடுகளை விரைவாக கட்டி முடித்திடும் பொருட்டு 200 வீடுகளுக்கு ஒருவர் என்ற வீதத்தில் தொழில்நுட்ப பணியாளர்கள் பணி அமர்த்தப்பட்டுள்ளனர்.

ii. வருவாய் துறை அலுவலர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலர்களை உறுப்பினர்களாக கொண்டு மாநில பணிக்குழு

அமைக்கப்பட்டுள்ளது. நிலமற்ற 98,923 பயனாளிகளில், 14,235 பயனாளிகளுக்கு வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன.

iii. பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் ஏழைப் பயனாளிகளின் நியாயமான குறைகளை விரைவில் தீர்க்கும் வண்ணம் இயக்கக அளவில் ஒரு குறைதீர்ப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்களிடமிருந்து பெறப்படும் குறைகள் மீது உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுப்பதற்காக உரிய அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது.

iv. கள அளவில் பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளை கூர்ந்து கண்காணித்திட கைபேசி செயலி (Mobile App) உருவாக்கப்பட்டுள்ளது.

v. கைப்பேசி செயலி மூலம் ஒவ்வொரு வீட்டின் அன்றாடப் பணி முன்னேற்றத்தை கண்காணித்திடும் வகையில் 13,550 ஊக்குவிப்பாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

vi. காங்கிரீட் மேற்கூரைக்கான செலவினத்தினை கண்காணிக்கவும், அத்தொகை பயனாளிகளுக்கு சரியான நேரத்தில் விடுவிக்கப்படுவதை

உறுதிப்படுத்தவும் மாநில அளவில் வங்கி கணக்கு (SNA) ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 4.2.7 வீடுகள் கட்டுவதில் பின்பற்றப்படும் மாற்று கட்டுமான தொழில் நுட்பங்கள்

வீடுகளை குறைந்த செலவில் விரைந்து முடித்திட ஏதுவாக எக்ஸ்பண்டேட் பாலிஸ்டிரீன் பேனல்கள், இன்டர்லாக் ப்ரிக்ஸ், ஆடோகிளேவுட் ஏரேடட் காங்கிரீட் ப்ளாக் / பேனல்கள், ப்ளை ஆஷ் ப்ரிக்ஸ், ரேட் ட்ரேப் பாண்ட் உடன் கூடிய ஃபில்லர் ஸ்லாப் போன்ற பல்வேறு புதிய / மாற்று தொழில்நுட்பங்களை வீடுகள் கட்டுவதற்கு இத்துறை பின்பற்றி வருகிறது.

### 4.3 ஜல் ஜீவன் இயக்கம்

ஊரக பகுதிகளிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் பரிந்துரைக்கப்பட்ட தரத்தில் தொடர்ச்சியாக குடிநீர் வழங்கிடும் வகையில் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கும் நோக்கத்துடன் ஜல் ஜீவன் இயக்கம் 2019-20 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. திட்டமிடுதலில் சமூகத்தை ஈடுபடுத்தி குடிநீர் வழங்குதலை கண்காணித்தல் மற்றும் நிலைத்த குடிநீர் ஆதாரங்களை நீர் செறிவூட்டுதல் மூலம் வலுப்படுத்துதல், மறு பயன்பாட்டிற்கு ஊக்குவித்தல் ஆகியன இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

#### 4.3.1 திட்ட மூலதனத்தில் சமூக பங்களிப்பு

ஜல் ஜீவன் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, கிராம ஊராட்சியில் உள்ள நீர் விநியோக கட்டமைப்பு மற்றும் மூல ஆதாரத்தை மேம்படுத்த, மலைவாழ்/வனப்பகுதிகள் & 50% மற்றும் அதற்கு மேல் ஆதிதிராவிடர்/பழங்குடியின மக்களை கொண்ட கிராமங்களில், திட்ட மூலதன தொகையில் 5% மற்றும் இதர கிராம ஊராட்சிகளில் 10% பணமாகவோ/ பொருளாகவோ/உடல் உழைப்பாகவோ பொது மக்களிடமிருந்து சமூக பங்களிப்பாக பெறப்பட வேண்டும்.

### 4.3.2 ஜல் ஜீவன் இயக்கத்தின் கூறுகள்

i) ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கிட தேவையான உள்ளூர் அளவிலான கட்டமைப்புகளை உருவாக்குதல்.

ii) நிலையான குடிநீர் ஆதாரங்களை உருவாக்குதல் மற்றும் நீர் ஆதாரங்களை மேம்படுத்துவதன் வாயிலாக நீண்ட காலத்திற்கு தொடர்ந்து குடிநீர் வழங்கப்படுவதை உறுதி செய்தல்.

iii) ஊரக பகுதியிலுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் சீராக குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக குறைவான அளவு நிலத்தடி நீர் உள்ள பகுதிகளில் கூட்டுக் குடிநீர் திட்டங்கள் போன்ற பெருவிநியோக அமைப்புகள் மூலம் தகுந்த விநியோக அமைப்புகளை உருவாக்குதல்.

iv) முடிவுற்ற மற்றும் தற்போது நடைபெற்றுவரும் தனி கிராம மற்றும் கூட்டு குடிநீர் திட்டங்களை மறுசீரமைப்பு செய்தல்.

### 4.3.3 நிதி பங்களிப்பு

ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் பணிகளை மேற்கொள்வதற்கான நிதியினை ஒன்றிய அரசும் (50%), மாநில அரசும் (50%) பங்களிப்பாக வழங்கும் இருப்பினும், ஆதரவு மற்றும் நீர் தர கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசிற்கு இடையேயான நிதி பகிர்மான முறை 60:40 ஆகும்.

### 4.3.4 செயல்படுத்தும் முறை:

தமிழ்நாட்டில் ஜல் ஜீவன் இயக்கத்தினை செயல்படுத்தும் துறையாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை உள்ளது. தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர், ஜல் ஜீவன் இயக்கத்தின் மாநில திட்ட இயக்குநராக உள்ளார்.

ஒற்றை கிராம திட்டத்தில், குடிநீர் ஆதாரம் கிராம எல்லைக்குள் இருந்தால் திட்டத்தை வடிவமைத்தல், மதிப்பீடு தயாரித்தல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவற்றையும் இதேபோன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் எடுக்கப்பட்ட பல் கிராம திட்டத்தில், **கிராம உட்கட்டமைப்பு பணிகளையும்** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை திட்டமிட்டு செயல்படுத்துகிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஒன்றுக்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகளுக்கு குடிநீரினை வழங்க பல் கிராம திட்டங்களை செயல்படுத்துகிறது.

### 4.3.5 இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:

- மூன்றாம் தரப்பு ஆய்வு மற்றும் தரம் மதிப்பீடு செய்தல்.
- விநியோகிக்கப்படும் நீரின் தரம், அளவு மற்றும் தொடர்ச்சியாக சீரான குடிநீர் வழங்குதல் ஆகியவற்றை கொண்டு செயல்பாட்டு மதிப்பீடு மேற்கொள்ளுதல்.
- ஒருங்கிணைந்த தகவல் மேலாண்மை அமைப்பின் மூலம் குடிநீர் விநியோக செயல்பாடு, பணிகளை நிறைவேற்றுதல், பராமரித்தல் மற்றும் திட்டத்தின் செயல்பாடு ஆகியவற்றை கண்காணித்தல்.
- கள ஆய்வு உபகரணங்களின் மூலம் பயிற்சி பெற்ற மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களைக் கொண்டு நீரின் தரம் பரிசோதிக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

### 4.3.6 இயக்குதல் மற்றும் பராமரித்தல்

குடிநீர் வழங்கல் பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் பராமரித்தல் கிராம ஊராட்சியின் பொறுப்பாகும்.

i. குறைந்தபட்ச குடிநீர் கட்டணமாக ரூ.30/– வசூலிக்கப்பட்டுவருகிறது.
ii. அரசால் நிர்ணயிக்கப்பட்ட மொத்த நீர் பரிமாற்ற கட்டணம் சம்பந்தப்பட்ட ஊராட்சியால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்படுகிறது.
iii. ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் நடைபெறும் குடிநீர் வழங்கல் பணிகளை கிராம குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரக்குழுவும் (VWSC), கிராம ஊராட்சியும் கண்காணிக்கின்றன.

### 4.3.7 15–வது ஒன்றிய நிதிக் குழு மானியம் மற்றும் இதர திட்ட நிதிகளை ஒருங்கிணைத்தல்

கிராம ஊராட்சிகளில் பல்வேறு திட்டங்களின் மூலம் அதாவது, 15–வது ஒன்றிய நிதிக் குழு மானியத்தின் வரையறுக்கப்பட்ட நிதி (30%), மாநில நிதிக் குழு மானியம், மாவட்ட கனிமவள நிதி மற்றும் இதர திட்ட நிதிகளை ஒருங்கிணைத்து கிராம குடிநீர் உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

## அட்டவணை 4.3
## 2021-22 & 2022-23 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட குடிநீர் பணிகள் விவரம்

| வ. எண் | திட்டம் | எடுக்கப்பட்ட பணிகள் | | முடிக்கப்பட்ட பணிகள் | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை (ரூ.கோடியில்) | எண்ணிக்கை | தொகை (ரூ.கோடியில்) |
| 1 | ஜல் ஜீவன் இயக்கம் | 18510 | 2558.59 | 15427 | 1595.42 |
| 2 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் | 1930 | 104.01 | 972 | 45.90 |
| 3 | பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் | 115 | 8.03 | 34 | 1.49 |
| 4 | ஒன்றிய நிதி குழு மானியம் (30% வரையறுக்கப்பட்ட நிதி) | 47878 | 2311.94 | 31507 | 1347.51 |
| 5 | நமக்கு நாமே திட்டம் | 146 | 11.30 | 70 | 4.71 |
| 6 | மாநில நிதி குழு மானியம் | 23382 | 695.06 | 10518 | 254.84 |
| **மொத்தம்** | | **91961** | **5688.93** | **58528** | **3249.87** |

தமிழ்நாட்டில் ஊரக பகுதிகளில் மொத்தமுள்ள 1,25,51,754 வீடுகளில் நாளதுவரை 78,92,962 வீடுகளுக்கு செயல்பாட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை ஊரக பகுதிகளிலுள்ள 79,395 குக்கிராமங்களுள் 31,832 குக்கிராமங்களிலுள்ள (40 சதவீதம்) அனைத்து வீடுகளுக்கும் செயல்பாட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 2023–24 ஆம் ஆண்டில், 24.3 இலட்சம் வீடுகளுக்கு ரூ.3,307 கோடி மதிப்பீட்டில் செயல்பாட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.3.8 முன்னோடி அடிப்படையில் குடிநீர் வழங்கல் அமைப்பினை கண்காணித்தல்

தானியங்கி சென்சார் அடிப்படையிலான கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பின் மூலம் மின்சார சிக்கனம் மற்றும் சிறந்த முறையிலான பொது குடிநீர் வழங்கல் அமைப்புகள் மேம்படுத்தப்படுகிறது. மோட்டரின் இயக்கத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் குடிநீர் வீணாவது தடுக்கப்படுகிறது. பின்வரும் ஊராட்சிகளில் முன்னோடி முறையில் சென்சார் அடிப்படையிலான தானியங்கி கண்காணிப்பு அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

| வ. எண். | மாவட்டம் | ஊராட்சி |
|---|---|---|
| 1. | செங்கல்பட்டு | மாம்பாக்கம் |
| 2. | காஞ்சிபுரம் | மருதூர் |
| | | மேல்கதிர்பூர் |

| | | |
|---|---|---|
| 3. | திருவள்ளூர் | அழிஞ்சிவாக்கம் |
| | | மல்லியன்குப்பம் |
| 4. | ஈரோடு | கதிரம்பட்டி |
| 5. | கோயம்புத்தூர் | அரசூர் |

குடிநீர் வழங்குதலில் தானியங்கி கண்காணிப்பு அமைப்பு படிப்படியாக அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் விரிவுப்படுத்தப்படும்.

### 4.3.9 குடிநீர் தரத்தினை கண்காணித்தல்

ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் **களஆய்வு கருவிகளை கொண்டு** குடிநீரின் தரத்தினை, பரிசோதனை செய்வதற்காக 62,625 **மகளிர் சுய உதவிக்** குழு **உறுப்பினர்களுக்கு** பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இப்பரிசோதனையில் 13 வகையான காரணிகள் அதாவது கார–அமிலத் தன்மை, மொத்த கலங்கியுள்ள திடப்பொருட்கள், கலங்கல்தன்மை, குளோரைடு, மொத்த காரத்தன்மை, மொத்த கடினத்தன்மை, சல்ஃபேட், இரும்பு, மொத்த ஆர்செனிக், ஃப்ளோரைடு, நைட்ரேட், மொத்த கொலிபோம் பாக்டிரியா, இ.கோலி பாக்டிரியா ஆகியவை பரிசோதிக்கப்படுகிறது.

குடிநீர் வழங்கல் செயல்பாட்டில், சிறந்த செயல் திறனுக்காக 2022 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் தேதியன்று புது தில்லியில் நடைபெற்ற ஸ்வச் பாரத் திவஸ்

விழாவின் போது மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களால் தமிழ்நாடு கௌரவிக்கப்பட்டது.

## 4.4 நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (MPLADS)

நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டமானது 1993 ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளில் தேவைகளின் அடிப்படையில் நீடித்த சமூகச் சொத்துக்களை உருவாக்குவதை வலியுறுத்துவதன் மூலம் வளர்ச்சித் தன்மை கொண்ட பணிகளைப் பரிந்துரைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் ரூ.5 கோடி வீதம் ஒவ்வொரு நாடாளுமன்ற தொகுதிக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இத்திட்டத்திற்கு ஒரு தொகுதிக்கு தலா ரூ.5 கோடி வீதம் ஒன்றிய அரசால் 2022-23 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டச் செயலாக்கத்திற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையே தொடர்பு துறை ஆகும். நாடாளுமன்ற உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்படும் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்வாக அனுமதி வழங்குவார். இத்திட்டத்தின் கீழ் எடுத்துச்

செய்யக்கூடிய பணிகள்' குறித்த விளக்கப் பட்டியலும், 'தடை செய்யப்பட்ட பணிகள் குறித்தும் வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2021–22 ஆம் ஆண்டில், 1,269 பணிகளும், 2022–23 ஆம் ஆண்டில், 1,139 பணிகளும் எடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 4.5 நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம்

நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் 2014 ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டது. தேர்வு செய்யப்படும் கிராமங்களில் அனைத்து துறைகளின் திட்டங்களையும் ஒருங்கிணைத்து, ஒருமுகப்படுத்தி, செயல்படுத்தி அந்த கிராமங்களை மாதிரி கிராமங்களாக மாற்றி அனைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கிராம ஊராட்சியே இத்திட்ட செயலாக்கத்தின் அடிப்படை அலகாகும். சமவெளிப்பகுதிகளில், 3,000 முதல் 5,000 வரை மக்கள்தொகை கொண்ட கிராம ஊராட்சிகளையும், மலைப்பகுதி / பழங்குடி கிராமங்கள் மற்றும் சவாலான பகுதிகள் எனில் மக்கள்தொகை 1,000 முதல் 3,000 வரை உள்ள கிராம ஊராட்சியை ஒவ்வொரு

நாடாளுமன்ற உறுப்பினரும் தேர்ந்தெடுக்க வேண்டும். கிராம ஊராட்சியே இதன் அடிப்படை அலகாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர் தனது அல்லது தனது மனைவியின் / கணவரின் சொந்த கிராமத்தை தவிர்த்து இதர கிராமங்களிலிருந்து மாதிரி கிராமமாக உருவாக்க வேண்டிய கிராம ஊராட்சியை தங்கள் விருப்பப்படி கண்டறியலாம். மக்களவை உறுப்பினர் தனது தொகுதிக்குள்ளும், மாநிலங்களவை உறுப்பினர் தனது மாநிலத்திற்குள்ளும், நியமன உறுப்பினர் இந்திய அளவில் எந்த ஒரு மாநிலத்திலும், ஒரு கிராமத்தை தேர்ந்தெடுக்கலாம். நகர்ப்புற தொகுதியை பொறுத்தவரையில் கிராம ஊராட்சிகள் இல்லையெனில் சம்பந்தப்பட்ட மக்களவை உறுப்பினர் அருகிலுள்ள ஊரகத் தொகுதியிலிருந்து கிராமத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். அதன் படி 2024 ஆம் ஆண்டிற்குள் 5 மாதிரி கிராம ஊராட்சிகளை (ஆண்டிற்கு ஒன்று வீதம்) தேர்வு செய்து மேம்படுத்த வேண்டும்.

நாடாளுமன்ற மாதிரி கிராமத்திட்டத்தின் கீழ் கண்டறிந்த கிராம ஊராட்சிகளின் முழுமையான வளர்ச்சிக்கு நடைமுறையில் உள்ள ஒன்றிய மற்றும் மாநில அரசு திட்டங்கள் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும்.

## 4.6 பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்

### 4.6.1 பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் III

மாநில அரசால், பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் I மற்றும் II முடிக்கப்பட்டு பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் III (2019-2025) செயல்படுத்தப்பட்டு வருகிறது. குக்கிராமங்களை அருகில் உள்ள சந்தை, உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகள் போன்றவற்றுடன் இணைக்கும் பிரதான சாலைகள் மற்றும் முக்கிய ஊரக இணைப்புச் சாலைகளை மேம்படுத்துதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். 7,375 கி.மீ. நீளமுள்ள ஊரகச் சாலைகளை மேம்படுத்துவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்கு, 2019-20 ஆண்டு முதல் 2022-23 - ஆம் ஆண்டு வரை 4,449 கி.மீ நீளமுள்ள 1,154 சாலைப்பணிகள் மற்றும் 55 பாலங்கள் ரூ.2,883 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு, 2,926 கி.மீ நீளமுள்ள சாலைகளை மேம்படுத்துவதற்கான முன்மொழிவினை ஒன்றிய அரசிற்கு விரைவில் சமர்ப்பிக்கும். பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் தொடக்கத்தில் ஒன்றிய அரசின் 100% நிதியுடன் செயல்படுத்தப்பட்டது, பின்னர் 2015-ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசு மற்றும்

மாநில அரசுகளின் நிதி பகிர்வு 60:40 என மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

### 4.6.2 பராமரிப்பு

பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டத்தின் கீழ் சாலைகளின் 5 ஆண்டு தொடர் பராமரிப்பு இமார்க் (eMARG) எனப்படும் இணைய முகப்பின் மூலம் கண்காணிக்கப்படுகிறது. பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்ட சாலைகளின் தொடர் பராமரிப்பிற்கு, 2021-22-ஆம் ஆண்டில் ரூ.41.46 கோடியும் மற்றும் 2022-23-ஆம் ஆண்டில் ரூ.52.68 கோடி நிதியும் மாநில அரசின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.6.3 **தரக்கட்டுப்பாடு**

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், மாநில அளவில் தரக்கட்டுப்பாட்டு பிரிவு கண்காணிப்பு பொறியாளர் (தரக்கட்டுப்பாடு) அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு நியமித்த தேசிய தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் (NQMs) மற்றும் மாநில தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் (SQMs) பணிகளின் அனைத்து நிலைகளிலும் தரக்கட்டுப்பாட்டு சோதனைகளை மேற்கொள்கின்றனர். இத்துறையில் பணிபுரியும் களப்பொறியாளர்களின் திறனை மேம்படுத்த பல்வேறு திறன் மேம்பாடு மற்றும் தரக்கட்டுப்பாட்டு பயிற்சிகள்**

பல்வேறு தேசிய மற்றும் மாநில அளவிலான சிறந்த பயிற்சி நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்றன.

தற்போது சாலைப்பணிகள் மற்றும் திட்டப்பணிகளின் தரத்தினை கண்காணிக்க 30 மாநில தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் (சாலைகள்) மற்றும் 15 மாநில தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் (திட்டங்கள்) நியமிக்கப்பட்டுள்ளனர்.

### 4.6.4 தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்

அனைத்து மாவட்டங்களிலும், தரக்கட்டுப்பாட்டு சோதனைகள் மேற்கொள்ள மாவட்ட அளவிலான தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் துறையின் மூலம் நிறுவப்பட்டுள்ளன. மேலும், பணித்தளத்தில் பணி நடைபெறும் பொழுதே தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகள் மேற்கொள்ள 7 நடமாடும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளது. தள ஆய்வின் போது பணிகளின் தரத்தினை ஆய்வு செய்ய துறை அலுவலர்களின் வாகனங்களிலும் அடிப்படை தரக்கட்டுப்பாட்டு கருவிகள் உள்ளன. அனைத்துப் பணிகளுக்கும் தரக்கட்டுப்பாட்டு பதிவேடுகள் பராமரிக்கப்படுகின்றன. தர ஆய்வாளர்கள் / சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர்கள் / உதவி செயற்பொறியாளர்களின் திருப்திகரமான தரக்கட்டுப்பாட்டு ஆய்வு முடிவுகளின் அடிப்படையில்

மட்டுமே பணிகளுக்கு பட்டியல் தொகை வழங்கப்படுகிறது.

### 4.7 தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)

"தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)" 2014 ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டு, மக்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்துதல் மற்றும் சுகாதார வசதிகள் அனைவருக்கும் முழுமையாக சென்றடைவதை 2019 ஆம் ஆண்டுக்குள் உறுதி செய்யும் பொருட்டு, இது தொடர்பான அனைத்து முயற்சிகளும் துரிதப்படுத்தப்பட்டது. கிராம சுகாதார இயக்கமானது இரு நிலைகளாக செயல்படுத்தப்படுகிறது. தனிநபர் இல்லக் கழிப்பறைகள் மற்றும் பொது சுகாதார கழிப்பறைகள் கட்டுவதை பிரதான நோக்கமாகக் கொண்டு 2014 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை இத்திட்டம் முதல் நிலையாக செயல்படுத்தப்பட்டது. தூய்மை பாரத இயக்கம் இரண்டாம் நிலை, 2020-21 ஆம் ஆண்டு முதல் 2024-25 ஆம் ஆண்டுவரை, தூய்மை பாரத இயக்கம், முதல் கட்ட செயல்பாடுகள் மூலமாகப் பெற்ற ஆதாயங்களை தக்கவைத்து மேலும் மேம்படுத்துதலை நோக்கமாகக் கொண்டது. தமிழ்நாடு 2019 ஆம் ஆண்டு திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நிலையை அடைந்துள்ளது. ஊரகப் பகுதிகளில் திறந்தவெளியில்

மலம் கழித்தல் அற்ற நிலையை தக்கவைத்தல் மற்றும் திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை செயல்பாடுகள் மூலமாக கிராமங்களில் தூய்மை நிலையை மேம்படுத்துவதோடு அதனை தக்க வைக்கும் (ODF Plus) கிராமங்களாக்குவதும் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) நிலை II–இன் முக்கிய நோக்கமாகும்.

திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நிலையை தக்க வைப்பதுடன் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மையுடனும் காட்சிக்கு தூய்மையான கிராமங்களே மாதிரி கிராமங்கள் ஆகும். தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) நிலை–II இன் செயல்பாட்டு வழிகாட்டு நெறிமுறைகளின்படி, தனிநபர் இல்லக் கழிப்பறை நீங்கலாக இத்திட்டத்தின் இதர கூறுகள் அனைத்தும் 15–வது நிதிக்குழு மானியம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் செயல்படுத்தப்படுகிறது.

### 4.7.1 கிராம சுகாதார செறிவிற்கான திட்டமிடல்

தனிநபர் இல்லங்கள் மற்றும் நிறுவனங்களில் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்துவதிலும் மற்றும் கழிப்பறைகள் பயன்பாட்டிலும் சமீப காலங்களில்

தமிழ்நாடு நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக ஒரு கிராமம் முழுமையான தூய்மைக்கான இடைவெளிகளை கண்டறிதல், அவற்றை அடைதல் மற்றும் ஊராட்சியின் தூய்மை நிலையை மேம்படுத்துவதின் மூலம் திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற கூடுதல் நிலையை (ODF–plus) அடைவதில் "ஆர்வமுள்ள ஊராட்சி" நிலையிலிருந்து "மாதிரி ஊராட்சியாக" மாற ஏதுவாகும். விரிவான மற்றும் முழுமையான மதிப்பீடு செய்வதன் மூலம் தற்போதைய சுகாதார வசதிகள், குடும்ப மற்றும் சமூக அளவில் தேவைப்படும் சுகாதார வசதிகள் ஆகியவை ஒவ்வொரு கிராம ஊராட்சி வாரியாக கணக்கிடப்படுகிறது.

திட மற்றும் சாம்பல் நீர் மேலாண்மை தேவைகளில் அதிக முக்கியத்துவம் கொடுத்து, தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தேவையை மதிப்பீடு செய்வதற்கும், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் மக்கள், தெரு வாரியாக நடைபயணங்களை மேற்கொண்டதன் மூலம் 'கிராம சுகாதார செறிவு திட்டத்தை' தயாரிக்கும் பணியை அரசு மேற்கொண்டது. கிராம சுகாதார செறிவு திட்டம் இறுதி செய்யப்பட்டவுடன், அடையாளம் காணப்பட்ட தேவைகளின் அடிப்படையில், தூய்மை பாரத இயக்கம்

(ஊரகம்) நிதியிலிருந்தும், பிற திட்டங்களான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் மற்றும் 15–வது ஒன்றிய நிதிக்குழு மானியத்திலிருந்து நிதி ஒதுக்கப்படுகிறது. தூய்மை மற்றும் பசுமையான மாநிலத்தை உருவாக்க, திடக்கழிவு மற்றும் சாம்பல் நீர் மேலாண்மை ஆகியவற்றை எய்துவதின் மூலம் நிலையான சாதனையை செயல்படுத்துவதற்கு கீழ்மட்ட அணுகுமுறை மற்றும் தேவைகள் அடிப்படையிலான திட்டமிடலை வலுப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

### 4.7.2 தனிநபர் இல்லக் கழிப்பறைகள்

அனைத்து கிராமப்புற குடும்பங்களுக்கும் பாதுகாப்பான கழிப்பறை வசதிகள் கிடைப்பதை உறுதி செய்வதே இந்த இயக்கத்தின் நோக்கமாகும். முழுமையாக கட்டி முடிக்கப்பட்ட தனிநபர் இல்லக் கழிப்பறையானது அடித்தளம், மேற்க்கட்டமைப்பு மற்றும் தண்ணீர் சேமிப்பு வசதி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இதன் மூலம் முறையான சுகாதாரத்தை பராமரிப்பு உறுதி செய்யப்படுகிறது. கண்டறியப்பட்ட தகுதியுள்ள குடும்பங்களுக்கு தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுமானத்திற்காக ரூ.12,000 ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. 2022–23 ஆம் ஆண்டில், மொத்தம் 19,156 தனிநபர் இல்லக்

கழிப்பறைகள் ரூ.22.99 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது.

### 4.7.3 சமுதாய சுகாதார வளாகங்கள் (CSC)

திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலையுடன் கூடுதல் நிலை (ODF plus) கிராமத்தில், அந்த கிராமத்தை கடந்து செல்லும் மக்களின் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் குறைந்தபட்சம் ஒரு சமூக சுகாதார வளாகம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சமூக சுகாதார வளாகத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியே தேவையான எண்ணிக்கையிலான கழிப்பறை வசதிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான ஒரு கழிப்பறை இருக்கைகள், குளியல் அறைகள், கை அலம்பும் தொட்டி போன்றவை இருக்கும். கிராமத்தில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் எளிதில் அணுகக்கூடிய இடத்தில் அது அமைக்கப்பட வேண்டும். 2022-23 ஆம் ஆண்டில், மொத்தம் 491 சமூக சுகாதார வளாகங்கள் ரூ.31.53 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன.

### 4.7.4 திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை

தூய்மை பாரத இயக்கத்தில் (ஊரகம்) திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை முக்கிய கூறுகளில் ஒன்றாகும். தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) கட்டம்–II இன் கீழ் திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை பணிகளுக்காக உதவி, மக்கள் தொகை தனிநபர் அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகிறது. மேலும், 15–வது நிதிக்குழு மானியங்கள் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் இணைந்து பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) திடக்கழிவு மேலாண்மை

தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் திடக்கழிவு மேலாண்மை வசதிகள் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து கிராம ஊராட்சிகளிலும் உள்ள 66,130 தூய்மை காவலர்கள் வீடு வீடாக குப்பைகளை சேகரிக்கின்றனர். 150 வீடுகளுக்கு ஒரு தூய்மை காவலர் என பொறுப்பாக்கப்பட்டுள்ளார். அனைத்து ஊராட்சிகளிலும் 'கழிவு தணிக்கை' நடத்தப்பட்டு, அந்தந்த ஊராட்சிகளில் உருவாகும் திடக்கழிவு வகைகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. மொத்தத்தில், 70% க்கும் அதிகமான கழிவுகள் மக்கும் கழிவுகள் ஆகும்.

பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு குப்பைகள் உருவாகும் இடத்திலேயே தரம் பிரித்து அளிப்பதின் மூலம் குப்பைகளை எளிதில் உரமாக மாற்ற முடியும். புறநகர் / பெரிய கிராம ஊராட்சிகளில் உருவாகும் திடக்கழிவுகளை திறம்பட நிர்வகிக்க, 287 நுண் உரம் தயாரிக்கும் மையங்கள் ஏற்கனவே நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

**(ஆ) நெகிழிக்கழிவு மேலாண்மை**

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) நிலை–II இன் கீழ், வட்டார அளவில் நெகிழிக்கழிவு மேலாண்மை அலகுகளை நிறுவ ரூ.16.00 இலட்சம் வழங்கப்படுகிறது. சுய உதவிக்குழுக்களால் நடத்தப்படும் இந்த அலகுகளில் இருந்து பெறப்படும் நெகிழிக்கழிவுகளை பயன்படுத்தி தார் சாலைகள் அமைக்கப்படுகின்றன. பேவர் பிளாக்ஸ் மற்றும் பூங்கா பெஞ்சுகள் போன்ற பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்க சுய உதவிக்குழுக்களுக்கு வசதி செய்து தரப்படும். வீடுகளில் மறுசுழற்சி செய்யக்கூடிய பிளாஸ்டிக்கைப் பிரித்து வைப்பதை ஊக்குவிக்க, நேரடி நெகிழி மீள வாங்கும் திட்டம் அறிமுகபடுத்தப்பட்டுள்ளது. மேலும் அத்தகைய மையங்கள் கிராம ஊராட்சிகளில்

நிறுவப்படும். கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.7.20 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 98 நெகிழிக் கழிவு மேலாண்மை அலகுகள் அமைக்கப்பட்டன.

**(இ) சாம்பல் நீர் மேலாண்மை**

ஒரு வட்டாரத்திற்கு இரண்டு கிராம ஊராட்சிகள் வீதம் மொத்தம் 776 கிராம ஊராட்சிகள் 'மாதிரிகள்' உருவாக்க தேர்வு செய்யப்பட்டுள்ளன. சாம்பல் நீர் மேலாண்மையின் கீழ், கிராம ஊராட்சிகளை தன்னிறைவு செய்யும் வகையில், கிராம சுகாதார தன்னிறைவு திட்டத்தின் கீழ் விரிவான திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சாலைகள்/தெருக்கள் மற்றும் பொது இடங்களில் கழிவுநீர் தேங்குவதை தடுக்கவும், கழிவுநீரை திறம்பட கையாளுவதை உறுதி செய்யவும், சமுதாய உறிஞ்சு குழிகள் மற்றும் கிடைமட்ட/செங்குத்து வடிகட்டிகள் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) நிலை–II இன் கீழ் 15–வது நிதிக்குழு மானியத்துடன் ஒன்றிணைந்து கட்டப்படுகின்றன.

**(ஈ) மலக்கசடு மேலாண்மை**

நகர்ப்புற உள்ளாட்சிகளில் ஏற்கனவே உள்ள மற்றும் ஏற்படுத்தப்படவுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) மற்றும் மல கசடு சுத்திகரிப்பு (FSTP)

வசதிகளில் கிராமப்புரங்களின் மல கசடுகளை மேலாண்மை செய்வதற்காக அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் மற்றும் நகர்ப்புற பகுதிகளுடன் தொகுப்பு விவரணை (மேப்பிங்) நடத்தப்பட்டது. 9,344 கிராம ஊராட்சிகள் நான்கு கட்டங்களில் செலவுப் பகிர்வு அடிப்படையில் அருகாமையில் உள்ள சுத்திகரிப்பு நிலையங்களுடன் தொகுப்பு செய்யப்படும். தொகுப்பு செய்வது சாத்தியமில்லாத இடங்களில், விடுபட்ட கிராம ஊராட்சிகளை விவரணை செய்து, தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) நிலை–II இன் கீழ், மலம் கசடு சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

### 4.7.5 தகவல்–கல்வி–தகவல்தொடர்பு பிரச்சாரங்கள்.

சுய உதவி குழுக்கள் / ஊராட்சி அளவிளான கூட்டமைப்புகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 12,000 ஊக்குவிப்பாளர்களுக்கு நேரடி தகவல் பரிமாற்றத்தின் மூலம் பொது மக்களிடையே சிறந்த சுகாதார பழக்கங்களை ஏற்படுத்த பயிற்சி அளிக்கப்படுகிறது.

### 4.7.6 நம்ம ஊரு சூப்பரு பிரச்சாரம்

'நம்ம ஊரு சூப்பரு' பிரச்சாரம் ஆகஸ்ட் 15, 2022 அன்று தொடங்கப்பட்டு, அக்டோபர் 2, 2022 வரை அனைத்து கிராம ஊராட்சிகளிலும்

நடத்தப்பட்டது. மக்களின் மனமாற்றத்தின் மூலம் தூய்மையான மற்றும் பசுமையான கிராமங்களை உருவாக்குவதற்காக சுகாதாரம் மற்றும் திரவக் கழிவு மேலாண்மையில் குறிப்பிட்ட கவனம் செலுத்தும், மக்கள் இயக்கத்தை உருவாக்குவதே முதன்மை நோக்கமாக இருந்தது.

பிரச்சார காலத்தில் சுமார் 47,339 குப்பை கொட்டும் இடங்கள், 16,829 பொது இடங்கள், 21,775 பள்ளிகள், 22,695 அங்கன்வாடிகள், 45,824 அரசு கட்டிடங்கள் / நிறுவனங்கள், 47,949 நீர்நிலைகள், 10,011 சமூக சுகாதார வளாகம் மற்றும் 1,569.35 கி.மீ. கழிவு நீர் வடிகால் சுத்தம் செய்யப்பட்டது. 13,659 பள்ளிகள் மற்றும் 343 கல்லூரிகளில் ஊக்குவிப்பாளர்கள், சுய உதவிக் குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களால் விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டன. பிரச்சார காலத்தில் சுமார் 4 லட்சம் மரங்கள் நடப்பட்டன. மனமாற்றத்தை தக்கவைத்துக் கொள்ளவும் மற்றும் தூய்மையை உறுதிப்படுத்தவும், ஆறு மாதங்களுக்கு ஒரு முறை பிரச்சாரம் ஏற்பாடு செய்யப்படும்.

### 4.7.7 சாண மற்றும் கரிம எரிவாயு உயிர் கலன் திட்டம்

இத்திட்டம் வேளாண் கழிவுகளை மதிப்புமிக்க வளமாக மாற்றுவதன் மூலம் கிராமப்புற சுகாதாரத்தை

மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, விலங்குகளின் கழிவுகள், சமையலறை எச்சங்கள், விவசாய கழிவுகள் மற்றும் சந்தைக் கழிவுகளை உயிர் எரிவாயு மற்றும் உயிரிக் கழிவாக (Bio–slurry) மாற்றுகிறது. இந்தத் திட்டம் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) நிலை –II இன் கீழ் முழுத் திட்டக் காலத்திற்கும் ஒரு மாவட்டத்திற்கு ரூ.50.00 லட்சம் வரை ஒரு முறை மானியம் வழங்கப்படுகிறது. தற்போது, தமிழ்நாட்டில் 5 மாவட்டங்களில் 16 சாண எரிவாயு கலன்கள் செயல்பாட்டில் உள்ளன. மேலும் மாநிலத்தில் உள்ள அனைத்து கிராமப்புற மாவட்டங்களிலும் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின் கீழ் சாண எரிவாயு கலன்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.7.8 இதர திட்டங்களுடன் ஒருங்கிணைத்தல்

சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மைக்கான உள்கட்டமைப்பு வசதிகள், தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்ட நிதியை, 15–வது மத்திய நிதிக்குழு மானியம், மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதி திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – II, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம்,

நமக்கு நாமே திட்டம், நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களுடன் ஒருங்கிணைத்து, உருவாக்கப்பட வேண்டும்.

- **கரிமவாயு திட்டம்:** மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்தத் திட்டமானது, தனிப்பட்ட நபர்கள், விவசாயிகள், கோழிப்பண்ணைகள், கோசாலைகள், இறைச்சிக் கூடங்கள், பால் பண்ணைகள் / கூட்டுறவு நிறுவனங்கள் / தொழிற்சாலைகளுக்கு ஒரு நாளைக்கு 1 கனமீட்டர் முதல் 2500 கனமீட்டர் உயிர் எரிவாயு உற்பத்தி செய்யும் சிறிய மற்றும் நடுத்தர உயிர் எரிவாயு கலன்களை அமைக்க நிதியளிக்கிறது. நிறுவனங்கள் மற்றும் பிற பயனாளிகளுக்கு கோரிக்கையின் அடிப்படையில் மானியம் வழங்கப்படுகிறது.

- **அண்ணா கிராம மறுமலர்ச்சித் திட்டம்–II கிராமப்புற சுகாதாரம்:** மொத்த நிதியில் 10% நிதி, சுத்தமான மற்றும் பசுமையான கிராமம் எனும் இலக்கிற்கு ஒதுக்கப்படுகிறது. இதில் வடிகால் இணைப்பு மற்றும் உறிஞ்சுக் குழிகள் அடங்கும்.

- **மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS):** தனிநபர் மற்றும் சமுதாய உறிஞ்சிக்குழிகள், கிடைமட்ட / செங்குத்து வடிகட்டிகள் மற்றும் வடிகால் அமைப்புகள் உள்ளிட்ட சுகாதாரப் கட்டுமானப் பணிகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

- **15–வது ஒன்றிய நிதி ஆணையம்:** ஒன்றிய அரசின், குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் துறை வழங்கிய வழிகாட்டுதல்களின்படி, தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின் கீழ் எடுக்கப்படும் திடக் கழிவு மேலாண்மை மற்றும் திரவக் கழிவு மேலாண்மை தொடர்பான அனைத்து பணிகளும் 15–வது நிதிக் குழு மானியத்தில் 30% உடன் ஒன்றிணைந்து மட்டுமே எடுக்கப்பட வேண்டும்.

## 4.8 ஷியாம பிரசாத் முகர்ஜி ரூர்பன் இயக்கம்

கிராமத் தொகுப்புகளை நகர்ப்புரங்களுக்கு இணையான வளர்ச்சியுடையதாக சரியான திட்ட வடிவமைப்புடன் கூடிய "ரூர்பன் கிராமங்கள்" உருவாக்குதல் ஒன்றிய அரசின் ஷியாம பிரசாத் முகர்ஜி ரூர்பன் இயக்கத்தின் நோக்கமாகும்.

தமிழ்நாட்டிற்கு 11 பழங்குடியினர் அல்லாத தொகுப்புகளை 2016–17 ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசால் படிப்படியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டத்தில் (2016–17)– ஐந்து தொகுப்புகள் (திருநெல்வேலி–சுத்தமல்லி, கோயம்புத்தூர்–மதுக்கரை, சிவகங்கை – வாணியங்குடி, திருப்பூர் – வேலாயுதம்பாளையம், திருவள்ளூர் – குத்தம்பாக்கம்), இரண்டாம் கட்டத்தில் (2017–18) – மூன்று தொகுப்புகள் (செங்கல்பட்டு–சிங்கபெருமாள் கோவில், மதுரை– கோவில் பாப்பாக்குடி, தஞ்சாவூர்– திருமலை சமுத்திரம்), மற்றும் மூன்றாம் கட்டத்தில் (2018–19) – மூன்று தொகுப்புகள் (கன்னியாகுமரி– சடையமங்கலம், தேனி – சீலயம்பட்டி, கிருஷ்ணகிரி– அலசபள்ளி பட்டவரபள்ளி) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இடைநிரவல் நிரப்பு நிதியின் (CGF) கீழ் எடுக்கப்பட்ட 976 பணிகளில் 847 பணிகள் நிறைவடைந்துள்ளன. மீதமுள்ள 129 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

மொத்த ரூ.330 கோடி ஒதுக்கீட்டில், ரூ.311.32 கோடி நிதி விடுவிக்கப்பட்டு, அதில் ரூ.270.70 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட 143 சொத்துகளில் தற்பொழுது வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மீதமுள்ள அனைத்து பணிகளும் இவ்வருடத்திற்குள் முடிக்கப்பட்டு உருவாக்கப்படும் சொத்துக்கள் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிடம் ஒப்படைக்கப்படும்.

**4.9 பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும் உட்கட்டமைப்பு திட்டங்கள்**

**பிரதம மந்திரி முன்னோடி கிராமத் திட்டம்**

கிராம மக்கள் தொகையில் 40 சதவிகிதத்திற்கும் மேல் ஆதிதிராவிடர் வாழும் கிராமங்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சியை உறுதி செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். ஒன்றிய அரசு 2018-19 மற்றும் 2019-20 ஆம் ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ் 473 கிராமங்களை தேர்ந்தெடுத்துள்ளது. இக்கிராமங்களில், விடுபட்ட மற்றும் தன்னிறைவு பெற தேவையான பணிகளுக்காக, ஒரு கிராமத்திற்கு ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம்

மாநில அளவில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையினால் ஒருங்கிணைக்கப்பட்டு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் செயல்படுத்தப்படுகிறது. அடிப்படை வசதிகளான குடிநீர் வழங்குதல், தெருவிளக்குகள் அமைத்தல், கழிப்பறைகள் கட்டுதல், இணைப்புச் சாலைகள், வடிகால் வசதி செய்தல் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. 2018-19 மற்றும் 2019-20-ஆம் ஆண்டுகளில், 473 கிராமங்களில் 1,993 பணிகள் ரூ.94.20 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

2021-22 ஆம் ஆண்டிற்கு, 22 மாவட்டங்களில் உள்ள 1,342 கிராமங்களை ஒன்றிய அரசு தேர்ந்தெடுத்துள்ளது. மேலும், 2022-23-ஆம் ஆண்டிற்கு, 36 மாவட்டங்களில் உள்ள 1,123 கிராமங்களை ஒன்றிய அரசு தேர்ந்தெடுத்துள்ளது. இத்திட்டத்திற்கான நிதி ஒன்றிய அரசால் வழங்கப்படுகிறது. மேலும், 3 முதல் 4 மடங்கு நிதி மதிப்பிலான பணிகள் மாநில அரசின் பல்வேறு திட்டங்களின் மூலம் இக்கிராமங்களுக்கு ஒருங்கிணைத்து வழங்கப்படுகிறது.

# 5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பணியமைப்பு

## 5.1. பணியமைப்பு

கிராம பகுதிகளில் அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு உருவாக்குதல், சுகாதாரம், வீட்டு வசதி, வாழ்வாதாரம் மற்றும் கிராம ஊராட்சிகள் நிர்வாகம் மாநில மற்றும் ஒன்றிய அரசு திட்டத்தின் கீழ் வளர்ச்சி பணிகள் உள்ளிட்ட பணிகளை செயல்படுத்தும் முக்கிய துறையாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை விளங்குகிறது.

மாநில அளவில் 65 அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்கள், 27 பொறியாளர்கள் / தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் 251 அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்களும், மாவட்ட / இதர அலுவலகங்களில் 1,580 அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்கள், 5,290 பொறியாளர்கள் / தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் 98,326 அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்களும் உள்ளனர்.

## 5.2 அரசிதழ் பதிவு பெற்ற பணியமைப்பு

இத்துறையில், மேற்கண்ட பணிகளை முறையாக திட்டமிடவும், செயல்படுத்திடவும், கண்காணிக்கவும் மாநில மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

## அட்டவணை 5.1

## வகைவாரியான பணியாளர்கள் விபரம்

## அரசிதழ் பதிவு பெற்ற அரசுப் பணியாளர்கள் விபரம்

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | இயக்குநரகம் | மாவட்ட / இதர அலுவலகங்கள் | மொத்தம் |
| 1. | கூடுதல் இயக்குநர் | 8 | 15 | 23 |
| 2. | இணை இயக்குநர் | 2 | 95 | 97 |
| 3. | உதவி இயக்குநர் | 10 | 398 | 408 |
| 4. | வட்டார வளர்ச்சி அலுவலர் | 45 | 1072 | 1117 |
| | **மொத்தம்** | **65** | **1580** | **1645** |

- கூடுதல் இயக்குநர் நிலையில், இதர துறைகளில் மாற்றுப்பணியில் 6 அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.
- இணை இயக்குநர் நிலையில், இதர துறைகளில் மாற்றுப்பணியில் 6 அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

### 5.3 பொறியியல் பணியமைப்பு

இத்துறையின் தொழில்நுட்ப அலுவலர்களைக் கொண்ட பிரிவானது ஊரகப் பகுதிகளில்

உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் தொடர்பான கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதுடன் ஒன்றிய மற்றும் மாநில அரசு திட்டங்களை செயலாக்கும் பொறுப்பினை கொண்டது.

## அட்டவணை 5.2

## வகைவாரியான பொறியியல் பணியாளர்கள் விவரம்

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | இயக்குநரகம் | மாவட்ட / இதர அலுவலகங்கள் | மொத்தம் |
| 1. | தலைமைப் பொறியாளர் | 2 | – | 2 |
| 2. | கண்காணிப்பு பொறியாளர் | 3 | – | 3 |
| 3. | செயற்பொறியாளர் | 2 | 43 | 45 |
| 4. | உதவி செயற்பொறியாளர் | 4 | 193 | 197 |
| 5. | உதவிப் பொறியாளர் | 13 | 932 | 945 |
| 6. | முதுநிலை வரைதொழில் அலுவலர் | – | 37 | 37 |
| 7. | இளநிலைப் பொறியாளர் | – | 315 | 315 |
| 8. | பணிமேற்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர் | 3 | 2619 | 2622 |
| 9. | சாலை ஆய்வாளர் | – | 1151 | 1151 |
| | **மொத்தம்** | **27** | **5290** | **5317** |

- இத்துறையில் 45 செயற்பொறியாளர்கள் உள்ளனர். அவர்களில் இதர துறைகளில் மாற்றுப்பணியில் 4 செயற்பொறியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.
- இத்துறையில் உதவி செயற்பொறியாளர் நிலையில் 197 உதவி செயற்பொறியாளர்கள் உள்ளனர். அவர்களில் இதர துறைகளில் மாற்றுப்பணியில் 11 உதவி செயற்பொறியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.
- இத்துறையில் 945 உதவிப் பொறியாளர்களும், 315 இளநிலைப் பொறியாளர்களும், 37 முதுநிலை வரைதொழில் அலுவலர்களும், 2,622 பணி மேற்பார்வையாளர்கள் / இளநிலை வரைதொழில் அலுவலர்களும் 1,151 சாலை ஆய்வாளர்களும் உள்ளனர். இத்துறையில் உள்ள 945 உதவிப் பொறியாளர்களில் இதர துறைகளில் மாற்றுப்பணியில் 17 உதவிப்பொறியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

**முதுநிலை அலுவலர்களை பிற துறைக்கு மாற்றுப் பணியில் அனுப்புதல்**

இத்துறையைச் சார்ந்த கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர், செயற்பொறியாளர், உதவி இயக்குநர் மற்றும் உதவி செயற்பொறியாளர் நிலையில்

உள்ள முதுநிலை அலுவலர்களை சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, தமிழ்நாடு நகர்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் (TNUHDB), தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO), சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் (CMDA), சிப்காட் (SIPCOT), தேசிய நலவாழ்வு இயக்கம் (NHM), தேசிய ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு முகமை (NRIDA), தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET) மற்றும் தமிழ் இணையக் கல்விக் கழகம் (TVA) போன்ற துறைகளில் மாற்றுப் பணியில் பணிபுரிய உத்தரவிடப்பட்டுள்ளது. இதுபோன்ற பல்வேறு இதர துறைகளில் பணிபுரிவதன் மூலம் இதர துறை சார்ந்த பணிகளை கற்றுக் கொண்டு அதன் மூலம் தமது தொழிற்திறனை வளர்த்துக் கொள்ள உதவி புரிகிறது.

### 5.4 அரசிதழ் பதிவு பெறாத பணியாளர் பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் அடிப்படை பணி, தமிழ்நாடு அமைச்சுப்பணி மற்றும் ஊரக வளர்ச்சி சார்நிலைப்பணி விதிகளுக்குட்பட்ட பணியாளர்கள் மற்றும் அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்கள் அனைவரது பணிகள் இப்பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனுடன் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின்

பணியாளர்கள் நலன் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசிதழ் பதிவு பெறாத பணியமைப்பின் கீழ் மாநில அளவில் 251 பணியாளர்களும், மாவட்டங்களிலும் மற்றும் பிற அலுவலகங்களிலும் 98326 பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். அரசிதழ் பதிவு பெறாத பணியமைப்பின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பணியாளர்கள் விவரம் மற்றும் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் கீழே அட்டவணையிடப்பட்டுள்ளன.

### அட்டவணை 5.3

### அரசிதழ் பதிவுபெறாத பணியாளர்கள் விவரம்

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | இயக்குநரகம் | மாவட்டம் / இதர அலுவலகங்கள் |
| **அரசுப் பணியாளர்கள்** | | | |
| 1. | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 47 | 3936 |
| 2. | உதவியாளர் | 49 | 5642 |
| 3. | இளநிலை உதவியாளர் | 38 | 3171 |
| 4. | சுருக்கெழுத்து தட்டச்சர் | 17 | 185 |
| 5. | தட்டச்சர் | 26 | 1054 |
| 6. | ஓட்டுநர் | 11 | 934 |
| 7. | பதிவுரு எழுத்தர் | 7 | 149 |

| | | | |
|---|---|---|---|
| 8. | அலுவலக உதவியாளர் | 54 | 670 |
| 9. | இரவுக் காவலர் | 2 | 135 |
| 10. | மசால்சி | 0 | 14 |
| | **மொத்தம்** | **251** | **15890** |
| **உள்ளாட்சிப் பணியாளர்கள் விவரம்** | | | |
| **அ) ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள்** | | | |
| 1. | ஓட்டுநர் | 776 | |
| 2. | பதிவுரு எழுத்தர் | 390 | |
| 3. | அலுவலக உதவியாளர் | 1533 | |
| 4. | இரவுக் காவலர் | 380 | |
| 5. | மசால்சி | 9 | |
| | **மொத்தம்** | **3088** | |
| **ஆ) கிராம ஊராட்சிப் பணியாளர்கள்** | | | |
| 1. | ஊராட்சி செயலர் | 12525 | |
| 2. | தூய்மைப் பணியாளர் | 26404 | |
| 3. | மேல்நிலை நீர்தேக்க தொட்டி இயக்குபவர் | 40419 | |
| | **மொத்தம்** | **79348** | |

**புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி அலுவலங்களுக்கு புதியதாக ஏற்படுத்தப்பட்ட பணியிடங்கள்**

புதியதாக தோற்றுவிக்கப்பட்ட செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் தென்காசி ஆகிய ஐந்து மாவட்டங்களில் மாவட்ட ஊராட்சி அலுவலங்களுக்கு கீழ்க்கண்ட பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டது.

**அட்டவணை 5.4**

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|
| 1. | மாவட்ட ஊராட்சி செயலர் | 5 |
| 2. | உதவியாளர் | 5 |
| 3. | இளநிலை உதவியாளர் | 5 |
| 4. | ஓட்டுநர் | 5 |
| 5. | அலுவலக உதவியாளர் | 5 |
| | **மொத்தம்** | **25** |

# 6. பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு

## 6.1 திறன் மேம்பாடு

அரசு திட்டங்களை செயல்படுத்தும் பொறுப்பில் உள்ள அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் ஊரக உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஆகியோர்களின் திறமை, அறிவுத்திறன், ஆக்கத்திறன் ஆற்றல் மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்கு பயிற்சிகள் மிகவும் அவசியமாகும். அவர்களின் திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி என்பது மனித வளங்களின் தரத்தை மேம்படுத்துவதுடன், திறம்பட்ட செயல்பாட்டின் மூலம் அரசு திட்டங்களின் வெற்றியை உறுதி செய்கிறது.

தமிழ்நாட்டில் கீழ்க்குறிப்பிட்டுள்ள மூன்று நிறுவனங்களின் மூலம் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

# அட்டவணை 6.1

<table>
<tr><td>வ. எண்.</td><td colspan="2">நிறுவனங்களின் பெயர்</td><td colspan="2">எல்லைக்குட்பட்ட மாவட்டங்கள்</td></tr>
<tr><td>I</td><td colspan="2">மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்</td><td colspan="2">அனைத்து மாவட்டங்கள்</td></tr>
<tr><td rowspan="5">II</td><td colspan="4">மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்</td></tr>
<tr><td>நிறுவனங்களின் பெயர்</td><td>தலைமை இடம் அமைந்துள்ள மாவட்டத்தின் பெயர்</td><td>துவங்கப் பட்ட ஆண்டு</td><td>எல்லைக்குட்பட்ட மாவட்டங்கள்</td></tr>
<tr><td>சத்திய விஜய நகரம்</td><td>திருவண்ணாமலை</td><td>1956</td><td>செங்கல்பட்டு,<br>கடலூர்,<br>கள்ளக்குறிச்சி,<br>காஞ்சிபுரம்,<br>திருவள்ளூர்,<br>திருவண்ணாமலை,<br>விழுப்புரம்<br>(7 மாவட்டங்கள்)</td></tr>
<tr><td>கிருஷ்ணகிரி</td><td>கிருஷ்ணகிரி</td><td>1958</td><td>தருமபுரி,<br>கிருஷ்ணகிரி,<br>நாமக்கல்,<br>இராணிப்பேட்டை,<br>சேலம்,<br>திருப்பத்தூர்,<br>வேலூர்<br>(7 மாவட்டங்கள்)</td></tr>
<tr><td>பட்டுக்கோட்டை</td><td>தஞ்சாவூர்</td><td>1954</td><td>மயிலாடுதுறை,<br>நாகப்பட்டினம்,<br>புதுக்கோட்டை,<br>சிவகங்கை,<br>தஞ்சாவூர்,<br>திருவாரூர் ,<br>திருச்சிராப்பள்ளி<br>(7 மாவட்டங்கள்)</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | பவானிசாகர் | ஈரோடு | 1972 | அரியலூர்,<br>கோயம்புத்தூர்,<br>திண்டுக்கல்,<br>ஈரோடு,<br>கரூர்,<br>நீலகிரி,<br>பெரம்பலூர்,<br>திருப்பூர்<br>(8 மாவட்டங்கள்) |
| | தே.கல்லுப்பட்டி | மதுரை | 1948 | கன்னியாகுமரி,<br>மதுரை,<br>இராமநாதபுரம்,<br>தென்காசி,<br>தேனி,<br>திருநெல்வேலி,<br>தூத்துக்குடி,<br>விருதுநகர்<br>(8 மாவட்டங்கள்) |
| III | **ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள் (DRCP)** | | அனைத்து மாவட்ட தலைமையகத்தில் தலா ஒன்று (36 எண்கள்) | |

### 6.1.1 மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்

மாநில அளவிலான தலைமை பயிற்சி நிறுவனம் என்ற வகையில், இந்நிறுவனமானது, ஊரக மற்றும் உள்ளாட்சித் துறையில் உள்ள ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்களுக்கு அறிவு, திறன் மேம்பாடு மற்றும் நேர்மறை மனப்பான்மையை உருவாக்குவதன் மூலம் பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதற்கு

தேவையான பயிற்சிகளை அளிக்கின்றது. மேலும் பயிற்சிக்கான பாடநெறி உள்ளடக்கத்தை மேம்படுத்துதல் மற்றும் பல்வேறு படிப்புகளுக்கான பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளித்தலும் இந்நிறுவனத்தின் பொறுப்பாகும். மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனமானது, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975–ன் கீழ் ஓர் சங்கமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டிலிருந்து இந்நிறுவனம் சென்னைக்கு அருகில் உள்ள மறைமலைநகரில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் இயங்கி வருகிறது.

### 6.1.2 பயிற்சிக்கான நிதி ஆதாரம்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் அதன் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் ஊதியமில்லாத செலவினங்களுக்கான மானிய நிதி உதவியினை (Grants–in–aids) தொடர் செலவினத் தலைப்பில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளிடமிருந்து 50:50 என்ற விகிதாச்சார அடிப்படையில் பெறுகின்றது. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், பல்வேறு பயிற்சிகளை அளிக்க, தேசிய கிராம சுயாட்சி திட்டம், ஜல் ஜீவன் இயக்கம் மற்றும் மாநில நிதிக் குழு மூலமாக ஒன்றிய, மாநில அரசுகளிடமிருந்து நிதியுதவி பெறுகிறது.

உட்கட்டமைப்பு உபகரணங்கள் வசதிகள் கொள்முதல் மற்றும் பயிற்சி ஆகியவற்றிற்காக ஒவ்வொரு வருடமும் தேவையின் அடிப்படையில் ஒன்றிய அரசின் மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் மூலம் தொடரா செலவினத்தில் 100 சதவீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

## 6.2 மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் மையங்கள்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் பின்வரும் நான்கு மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன:

1. ஊராட்சி நிர்வாக மையம் / மாநில ஊரக வள மையம்.
2. ஊரக வளர்ச்சி திட்ட செயல்பாடு மற்றும் பயிற்சி ஒருங்கிணைப்பு மையம்.
3. வாழ்வாதாரம், மகளிர் மேம்பாடு மற்றும் ஊரக தொழில் நிறுவன மேம்பாட்டு மையம்.
4. ஊரக பொறியியல் மற்றும் தொழில் நுட்ப மையம்

## 6.3 பயிற்சி முறைகள்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், பங்கேற்புடன் கூடிய பயிற்சி முறைகள், விரிவுரைகள், களப்பார்வை, மேற்கோள் காட்டுதல், கலந்துரையாடல், அனுபவ பகிர்வு போன்ற பயிற்சி

முறைகளை கடைபிடிக்கிறது. மாவட்ட மற்றும் வட்டார அளவிலான பயிற்சிகளுக்கு, சிறந்த பயிற்றுநர்கள் மாநில நிலை முதல் கிராம நிலை வரை அனைத்து மட்டங்களிலும் படிப்படியாக பயிற்சி அளிக்கும் முறையில் (Cascading Model) பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

## 6.4 பயிற்சி செயல்திறன்

2022-23 இல், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மூலம் 85 பயிற்சிகள் நடத்தப்பட்டன. இதில் 8,065 பங்கேற்பாளர்கள் பயிற்சி பெற்றனர். மேலும் இணைய வழி வகுப்பாக 85,486 பயிற்சியாளர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

2022-2023 ஆம் ஆண்டில் அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு தேசிய அளவிலான நிறுவனங்களான இந்திய நிர்வாக பணியாளர்கள் கல்லூரி மற்றும் ஊரக மேலாண்மை நிறுவனம், ஆனந்த், குஜராத், இந்திய பணியாளர்கள் நிர்வாக கல்லூரி (ASCI) போன்ற நிறுவனங்களில் பயிற்சிகள் வழங்கப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 1000 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்கள் மற்றும் ஊராட்சி பிரதிநிதிகளில் 707 நபர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. இப்பயிற்சியானது ஜூன் 2023-ல் நிறைவடையும்.

## 6.5 மறு சீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டம் (RRGSA)

ஊராட்சி நிறுவனங்களின் திறனை வலுப்படுத்தவும், உள்ளூர் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் வழங்குவதை உறுதி செய்யவும் ஒன்றிய அரசால் மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டம் 2022 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி மக்கள் பங்கேற்புடன் கூடிய திட்டம் தயாரித்தல், தொழில்நுட்ப உதவியுடன் உள்ளூர் வளங்களை திறமையாக பயன்படுத்தி உள்ளூர்மயமான நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளுடன் (LSDGs) தொடர்புடைய பிரச்சனைகளுக்கு தீர்வுகள் ஏற்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். ஐக்கிய நாடுகளின் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) 2030–க்குள் அடைவதற்கு ஊராட்சிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

### 6.5.1 நிதி ஒதுக்கீடு

மறு சீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டமானது (RRGSA) ஒன்றிய மற்றும் மாநில அரசு 60:40 என்ற நிதி விகிதாச்சார முறையில் செயல்படுத்தப்படுகிறது. ஒன்றிய அரசானது பயிற்சி,

பயிற்சிக்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனிதவளம், தொலைதூரக் கல்வி, புதுமையான முயற்சிகள், ஊராட்சிகளுக்கு தொழில்நுட்ப உதவிகள், நிர்வாகம் மற்றும் நிதி தகவல் பகுப்பாய்வு மற்றும் திட்டப் பிரிவு, ஊராட்சி மின்னணு செயலாக்கம், பொருளாதார வளர்ச்சி மற்றும் வருவாய் மேம்படுத்துதலுக்கு திட்ட அடிப்படையில் உதவிகள், தகவல், கல்வி மற்றும் தகவல்தொடர்பு (2%) மற்றும் திட்ட மேலாண்மை (1.5%) ஆகியவைகளுக்கு நிதி அளிக்கிறது.

2023–2024 ஆம் ஆண்டில் மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டத்தில் 9 நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளின் உள்ளூர்மயமாக்குதலுக்கு (LSDGs) தேவையான அனைத்து பயிற்சிகள் வழங்க சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

## 6.6 இதர கல்வி நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றுதல்

இந்திய தொழில்நுட்ப நிறுவனம்–சென்னை, காந்தி கிராமம் ஊரக நிறுவனம், குஜராத் மாநிலம், ஆனந்தில் உள்ள ஊரக மேலாண்மை நிறுவனம், மெட்ராஸ் சமூக பணிகள் பள்ளி, தேசிய தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், அவிநாசிலிங்கம் பல்கலைக்கழகம், எஸ்.ஆர்.எம்.

பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றும் ஒப்பந்தங்கள் (MoUs) இந்நிறுவனங்களோடு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பயிற்றுநர் மேம்பாடு, ஆய்வு, களப்பார்வை, திறன் மேம்பாடு, களவேலைகள், வெளியீடுகள், ஊரக வளர்ச்சி, பேரிடர் மேலாண்மை போன்ற துறைகளில் நிபுணத்துவம் பெற்றிட இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதேபோன்று பங்கேற்கும் நிறுவனங்களுக்கும் தங்களுடைய மாணவர்களுக்கும் பயிற்சியளித்திடவும், பணி அனுபவம் (Internship) பெற்றிடவும், திட்டங்கள் தொடர்பாக நிறுவனத்துடன் இணைந்தாய்வு மற்றும் மதிப்பீடு மேற்கொள்ளவும், ஆசிரியர்களாக பணியாற்றவும், நடைமுறையில் உள்ள சிறந்த முறைகளை ஆவணப்படுத்தவும் ஏதுவாகிறது.

### 6.7 மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் இயக்குநர் / இணை இயக்குநர் நிலையிலான முதல்வர்கள் தலைமையின் கீழ் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

## 6.8 மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் செயல்பாடுகள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி பிரதிநிதிகள் அதாவது, ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள், கிராம ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி செயலர்கள் மற்றும் அனைத்து ஊராட்சி பணியாளர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள், சமூகம் சார்ந்த அமைப்புகள், பிற துறையில் பணிபுரியும் அலுவலர்கள் ஆகியோருக்கு மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட பயிற்சிக்கான பாடநெறி உள்ளடக்கம் மற்றும் கையேடுகளின் அடிப்படையில், அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனமும் ஓர் ஆண்டிற்கு குறைந்தபட்சம் 6,000 நபர்களுக்கு உள் வளாகப் பயிற்சியும், அதிகபட்சமாக 25,000 நபர்களுக்கு வெளி வளாகப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன.

2022-23 ஆம் ஆண்டில், 5 மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில்

154 பயிற்சிகள் நடத்தியதில் 58,584 நபர்கள் பயிற்சி பெற்றனர்.

### 6.8.1 நிதி ஆதாரங்கள்

தமிழ்நாடு அரசு, மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் செயல்பாட்டிற்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.7 கோடி நிதி வழங்குகிறது. ஒன்றிய அரசு ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கும், ஒவ்வொரு ஆண்டும் பயிற்சித் திட்டம் தொடர்பான செலவினங்களை மேற்கொள்ள ரூ.20 இலட்சம் தொடர் செலவின மானியமாக வழங்குகிறது. மேலும் இந்நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் மற்றும் பயிற்சி உபகரணங்களுக்காகவும் தேவையின் அடிப்படையில் ஒன்றிய அரசு 100 சதவீதம் தொடரா செலவினத்தின் கீழ் நிதியினை வழங்குகிறது. மேலும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களுக்கு, மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டம், மாநில நிதிக்குழு மானியம் மற்றும் ஜல் ஜீவன் இயக்கம் ஆகிய திட்டங்களில் நிதியுதவி பெறப்படுகிறது.

## 6.9 ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள் (DRCPs)

மாவட்ட அளவில் ஊராட்சி அமைப்புகளுக்கு தேவையான திறன் மேம்பாடு மற்றும் பயிற்சிகளை சிறப்பாக மேற்கொள்ள ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள், ஒன்றிய அரசு நிதி உதவியுடன் தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் (RGSA) கீழ் அமைக்கப்பட்டுள்ளன. சம்மந்தப்பட்ட மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்வாக கட்டுப்பாட்டிற்குள் செயல்படும் இம்மையங்களின் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு பணிகள் சம்பந்தப்பட்ட மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் வழிகாட்டுதல் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். மாவட்ட வள மையங்களில் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், சாலை ஆய்வாளர்கள், ஊராட்சி செயலர்கள், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் ஆகிய ஊராட்சி பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள், சமூகம் சார்ந்த அமைப்புகள் மற்றும் கிராம ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஆகியோருக்கு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

2022-23 ஆம் ஆண்டில், ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்களில் ஒன்பது கருப்பொருளில் மாவட்ட கீழ்நிலை அளவில் அலுவலர்கள் மற்றும் ஊராட்சி உறுப்பினர்களுக்கு பயிற்சிகள் நடத்தப்பட்டு 79,368 பங்கேற்பாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

# 7. நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை உள்ளூர்மயமாக்கல் (LSDGs)

## 7. நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை உள்ளூர்மயமாக்கல் (LSDGs)

நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை 2030 ஆம் ஆண்டுக்குள் அடைவதை நோக்கிய தமிழ்நாட்டின் பயணத்தில், குறிப்பாக ஊராட்சி அளவில் ஒருங்கிணைத்து, சாத்தியமான முயற்சிகளை மேற்கொள்ள மாநிலத்தை வழி நடத்திச் செல்வதில் ஒரு முக்கிய பங்காளராக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முன் நிற்கிறது. நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகளை உள்ளூர்மயமாக்கல் அரசின் முக்கியமான படிநிலையாகவும், திறன் வாய்ந்த நிலைத்திருக்கக் கூடிய வளர்ச்சி இலக்குகளை கிராம அளவில் சாதனை ஆக்குவதுமே ஆகும். கிராம ஊராட்சியே, அனைத்து திட்டங்களும், நடைமுறைகளும், கொள்கை குறிக்கோள்களும், ஒருங்கமையும் இடமாகவும், நிலையான வளர்ச்சி இலக்குகளை வெல்வதற்கான ஒரு பொது மேடையாக விளங்குகிறது. எனவே, ஒன்றிய அரசின் பஞ்சாயத் ராஜ் அமைச்சகம் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை ஊராட்சி அளவில் சாத்தியப்பட்ட 9 கருப்பொருட்களாக ஒருங்கிணைத்துள்ளது.

## 7.1 வறுமையில்லாத மேம்படுத்தப்பட்ட வாழ்வாதாரம் கொண்ட கிராம ஊராட்சி

### அட்டவணை 7.1

| கருப்பொருள் | தொடர்புடைய இதர துறைகள் | தொடர்புடைய திட்டங்கள் |
|---|---|---|
| வறுமையில்லாத மேம்படுத்தப்பட்ட வாழ்வாதாரம் கொண்ட கிராம ஊராட்சி | • வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை<br>• மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை<br>• வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை<br>• தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை<br>• கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை<br>• மாற்றுத் திறனாளிகள் நலத் துறை<br>• குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை (MSME) | • மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS)<br>• அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – II<br>• கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (KAVIADP)<br>• தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)<br>• தீன் தயாள் உபாத்யாய |

| | | |
|---|---|---|
| | • கைத்தறி, கைத்திறன், துணிநூல் (ம) கதர்த்துறை<br>• ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை | கிராமின் கௌசல்யா யோஜனா (DDU–GKY)<br>• பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டம் (PMAY–G)<br>• முதியோர் ஓய்வூதியம் மற்றும் இதர சமூக பாதுகாப்புத் திட்டங்கள்<br>• முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் (CMCHIS)<br>• பொது விநியோகத் திட்டம்<br>• புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS)<br>• வாழ்ந்து காட்டுவோம் |

| | | |
|---|---|---|
| | | திட்டம் (VKP)<br>• திறன் மேம்பாட்டு பயிற்சி – குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை (MSME), வேளாண்மை, தோட்டக்கலை, ஆதிதிராவிடர் / பழங்குடியினர், மாற்றுத்திறனாளிகள் போன்றவை. |

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையானது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS), அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (KAVIADP), தீன் தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்யா யோஜனா (DDU–GKY), தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் (DAY–NRLM) போன்ற திட்டங்கள் மூலமும் மகளிர் சுய உதவிக் குழு வங்கி கடன் இணைப்பு ஆகியவற்றை ஒருங்கிணைத்து வறுமை ஒழித்திட, மேம்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்பு, வாழ்வாதாரப் பாதுகாப்பினை ஊராட்சி அளவில் ஏற்படுத்திட

பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், வயது முதிர்ந்தோர், விதவைகள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு பிற துறைகளின் திட்டங்கள் மூலம் சமூக பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது. உணவுப் பாதுகாப்பு, பொது விநியோகத் திட்டம் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது. வாழ்வாதாரத்தை மேம்படுத்திட, வாய்ப்புகளை உருவாக்கிட திறன் பயிற்சிகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சி கழகம் (TAHDCO) மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

**அரசு தொடர்ந்து "அனைவருக்கும் வீடு"** என்பதற்கு முன்னுரிமை அளித்து **"குடிசையற்ற தமிழ்நாடு"** என்பதை அடைவதே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. அதற்கு முன்னோடியாக அனைத்து ஊராட்சிகளிலும், விளிம்பு நிலை மக்கள் பயன்பெறும் வகையில் அனைவருக்கும் வீடு கணக்கெடுப்பு, கிராம ஊராட்சி தலைவர், கிராம ஊராட்சி அலுவலர்கள் மற்றும் சுய உதவிக்குழுவின் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முழுமையான, விரிவான கிராம வளர்ச்சி திட்டத்தை தயாரிக்க கிராம ஊராட்சிக்கு தேவையான

திறன் மேம்பாட்டை இத்துறை பலப்படுத்துகிறது. ஏழை மற்றும் விளிம்பு நிலை மக்களின் தேவைகள் மற்றும் வசதிகளை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் தயாரிக்கும் கிராம வறுமை ஒழிப்பு திட்டத்தின் மூலம் பதிவு செய்வது உறுதி செய்யப்படுகிறது.

## 7.2 நலவாழ்வு கிராம ஊராட்சி

### அட்டவணை 7.2

| கருப்பொருள் | தொடர்புடைய இதர துறைகள் | தொடர்புடைய திட்டங்கள் |
|---|---|---|
| நலவாழ்வு கிராம ஊராட்சி | • மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை<br>• சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை<br>• மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | • ஜல் ஜீவன் இயக்கம் (JJM)<br>• தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) SBM (G)<br>• அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் – II<br>• மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்<br>• முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம்<br>• மக்களைத் தேடி மருத்துவம் |

| | | |
|---|---|---|
| | | • டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு மருத்துவத் திட்டம்<br>• ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் (ICDS)<br>• ஊட்டச் சத்து இயக்கம் 2.0 (போஷன் அபியான் 2.0)<br>• ராஷ்ட்ரிய பால் ஸ்வஸ்திய காரியக்ரம் (RBSK)<br>• பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா (PMMVY)<br>• ஆயுஸ்மான் பாரத் மருத்துவ காப்பீட்டுத் திட்டம்<br>• ஒன்றிய நிதிக்குழு மானிய நிதி / மாநில நிதிக்குழு மானிய நிதி போன்றவை |

பெருந்தொற்று காலத்தில் கிராம ஊராட்சிகள் மக்கள் நலன் மற்றும் சுகாதாரம், பல்வேறு புதிய திட்டங்கள் மூலம் மக்களின் நல வாழ்வு மற்றும்

நலனை மேம்படுத்துதலை உறுதிப்படுத்தின. கிராம ஊராட்சியானது சமூக காரணிகளான நல்வாழ்வு, வீட்டுவசதி, சுகாதாரம், தூய்மை, சுத்தமான காற்று மற்றும் நீர் போன்றவற்றை சரி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

கிராம ஊராட்சிகள் அடிப்படை வசதிகளான போதுமான, பாதுகாப்பான குடிநீர் அனைத்து வீடுகளுக்கும், வீட்டுக் குழாய் இணைப்பு மூலம் வழங்குவதை ஜல் ஜீவன் திட்டத்தில் உறுதி செய்ய வேண்டும். தூய்மை பாரத இயக்க திட்டத்தின் கீழ் தூய்மை மற்றும் சுகாதார நடைமுறைகளை நடத்தை மாற்றத்தின் மூலம் கொண்டுவர வேண்டும். குழந்தைகள் இறப்பு விகிதம், மகப்பேறு கால மரண விகிதம் ஆகியவற்றைக் குறைக்க, மருத்துவமனைகளில் பிரசவித்தல் மற்றும் பெண்கள், கருவுற்ற தாய்மார்களுக்கான ஊட்டச்சத்து சவால்களை சரிசெய்வதுடன் கொசு பெருக்கத்தை கட்டுப்படுத்துதல் மற்றும் இதர நடவடிக்கைகள் மூலம் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்கினை 2030–ஆம் ஆண்டிற்குள் எய்திட வேண்டும்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் (AGAMT–II) கீழ், அமைக்கப்பட்டுள்ள நாற்றங்கால் பண்ணைகளில் ஊராட்சி அளவிலான

கூட்டமைப்பால் முருங்கை மற்றும் பப்பாளி கன்றுகள் வளர்க்க ஊராட்சிகளால் முன்னுரிமை அளிக்கப்பட்டு அவ்வூராட்சியில் உள்ள ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள், வளரிளம் பெண்கள், கருவுற்ற தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களும் உள்ள வீடுகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. இச்செயல்பாடுகள் கிராம ஊராட்சியால் மேற்கொள்ளப்படும் வறுமை ஒழிப்பு முயற்சி, நீடித்த வாழ்வாதார மேம்பாட்டினை அடைதல் போன்ற பணிகளுக்கு பெரும்பங்காற்றுகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் 11,000 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், பெண்கள் நலத்தொண்டர்களாக செயல்பட்டு சமூகத்திற்கும் சுகாதாரத் திட்ட அமைப்பிற்கும் இடையே முக்கிய இணைப்பு சங்கிலியாகச் செயல்பட்டு வருகின்றனர். இவர்கள் பொது மக்களிடையே இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் ஆகியவற்றை பரிசோதித்து மருத்துவ உதவி தேவைப்படுபவர்களை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு பரிந்துரை செய்தல் மற்றும் மக்களைத் தேடி மருத்துவம் மூலம் மருந்துகளை வீட்டிற்கே சென்று வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிராம நலவாழ்வு மற்றும் சுகாதாரக் குழுக்கள் அவ்வூராட்சியில் நோய்களால் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புள்ள மற்றும் விளிம்பு நிலை மக்களைக் கண்டறிந்து அவர்களின் உடல்நிலையைக் கண்காணித்து, அவ்வூராட்சிகளில் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களும் முறையே செயல்படுத்தப்படுவதையும் அதன் நன்மைகள் முறையே இலக்கு மக்களை அடைவதையும் உறுதி செய்திட வேண்டும். இதன் மூலம் அவ்வூராட்சி நலவாழ்வு ஊராட்சி என்ற நிலையை அடைய முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

## 7.3 குழந்தைகள் நேய கிராம ஊராட்சி

**அட்டவணை 7.3**

| கருப்பொருள் | தொடர்புடைய இதர துறைகள் | தொடர்புடைய திட்டங்கள் |
|---|---|---|
| குழந்தைகள் நேய கிராம ஊராட்சி | • மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை<br>• பள்ளிக் கல்வித்துறை<br>• சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை | • மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்<br>• குழந்தைகள் நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் (CFSIDS) |

| | | |
|---|---|---|
| | • தகவல் தொழில்நுட்ப வியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை<br>• இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | • ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் (ICDS)<br>• சர்வ சிக்ஷா அபியான் (SSA)<br>• இல்லம் தேடி கல்வி<br>• பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்<br>• கேலோ இந்தியா<br>• போஷன் அபியான் 2.0<br>• காலை சிற்றுண்டி திட்டம் / சத்துணவு திட்டம்<br>• ஒன்றிய நிதிக்குழு மானிய நிதி போன்றவை |

கிராம ஊராட்சிகள் ஊரகப் பகுதிகளிலுள்ள குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் உறுதியளிக்கக் கூடிய அமைப்பாக உள்ளது. சிசுக்கொலை, ஊட்டச்சத்து குறைபாடுகள், கல்வி, குழந்தைத் தொழிலாளர் முறை, குழந்தைத் திருமணம் போன்றவற்றில் விழிப்புணர்வு

ஏற்படுத்துவதில் முன்னின்று வழிநடத்தும் அமைப்பாகவும், குழந்தைகளுக்கு அவசியமான கல்வி மற்றும் ஊட்டச்சத்துத் தேவைகளை பூர்த்தி செய்திடும் வகையில் அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளின் வளர்ச்சிக்குரிய உகந்த சூழலை ஏற்படுத்திடும் அமைப்பாகவும் திகழ்ந்திட கிராம ஊராட்சிகளின் திறன் மேம்படுத்தப்படும்.

கிராம ஊராட்சித் தலைவர் / உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் பள்ளி நிர்வாகக் குழு (SMC) மாதந்தோறும் நடத்தப்படுவதன் மூலம் பாதுகாப்பான கல்வி கற்கும் சூழலை உருவாக்கி கல்வியின் தரத்தை மேம்படுத்த வேண்டும்.

தற்போது தொடங்கப்பட்டுள்ள முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்கவும், கற்றல் வெளிப்பாட்டிற்கும் முக்கிய பங்காற்றுகிறது. இத்திட்டத்திற்கு பயன்படுத்தப்படும் உணவுக் கூடங்களைப் பழுதுபார்த்திடும் பொறுப்புகள், மகளிர் சுய உதவிக் குழுக்களிலிருந்து தகுதியான சமையலரைத் தேர்வு செய்து, காலை உணவு பரிமாறிடவும் அதனை நாள்தோறும் கண்காணித்திடும் பணிகளை மேற்கொள்வதும் கிராம ஊராட்சிகளிடம் வழங்கப்பட்டுள்ளது.

கிராம ஊராட்சிகள் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு பள்ளி உட்கட்டமைப்பு திட்டங்களான பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தில் குழந்தை நேய அம்சமான பள்ளி கட்டடங்களே காட்சி வழி கற்கும் கருவியாக செயல்படுவதை கண்காணித்திட வேண்டும். பள்ளிகளின் தூய்மையை பராமரிக்க நிதிக்குழு மானிய நிதியிலிருந்து தூய்மைப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு உள்ளனர்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட ஊரக நூலகங்கள் தற்போது படிப்படியாக பழுதுபார்க்கப்பட்டு சீரமைக்கப்பட்டு வருகின்றன. கல்வி வழங்குதலில் முக்கிய பங்கினையும், நூலகங்கள் மூலம் அறிவினையும், விழிப்புணர்வினையும், இணைய வழி சேவைகளை இ-சேவை மையங்கள் மூலமும், உறுதிப்படுத்திடும் முக்கியப் பணிகளை கிராம ஊராட்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

மாநில குழந்தைகளுக்கான கொள்கை 2021 இன் படி **"குழந்தைகளுக்கான கிராம சபைகள்"** (Bala Sabhas) நடத்தப்பட்டு, அதில் குழந்தைகள் தொடர்பான பிரச்சனைகள் பற்றி விவாதித்து அதன் தீர்மானங்கள்

கிராம சபையில் வைக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 7.4 நீரில் தன்னிறைவு அடைந்த கிராம ஊராட்சி

### அட்டவணை 7.4

| கருப்பொருள் | தொடர்புடைய இதர துறைகள் | தொடர்புடைய திட்டங்கள் |
|---|---|---|
| நீரில் தன்னிறைவு அடைந்த கிராம ஊராட்சி | • நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை<br>• வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை<br>• நீர்வளத் துறை | • ஜல் ஜீவன் இயக்கம் (JJM)<br>• தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) (SBM–G)<br>• கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (KAVIADP)<br>• மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்<br>• பிரதமரின் விவசாயிகள் பாசனத் திட்டம் (PMKSY)<br>• நீர்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் மற்றும் நீர்நிலைகள் மறுசீரமைப்பு மற்றும் மேலாண்மை (IAMWARM) |

மாநிலத்தின் தனித்துவமான பாரம்பரிய முறையிலான "குடிமராமத்து", உள்ளூர் மக்களை நீர்நிலைப் பராமரிப்பு பணிகளில் ஈடுபடுத்துதல் மற்றும் நீர் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் போன்றவற்றை புதுப்பித்து நீரில் தன்னிறைவு அடைந்த கிராமமாக மாற்றும் குறிக்கோளை அடைய உறுதி செய்கிறது.

ஜல் சக்தி அபியானின் "மழை பொழிவின் போது மழை பொழியும் இடத்தில் மழைநீர் சேகரிப்பது" என்பதனை தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், பிரதமரின் விவசாயிகள் பாசனத் திட்டம் (PMKSY), ஒருங்கிணைந்த நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல், நீர்நிலைகள் மறுசீரமைப்பு மற்றும் மேலாண்மை (IAMWARM) ஆகிய திட்டங்களில் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் காரணமாக நீர்நிலைகள் பாதுகாப்பு மற்றும் நீர்மேலாண்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நீர் மேலாண்மையின் முக்கிய படியாக ஊராட்சி பகுதியில் புதிதாக கட்டப்படும் அனைத்து பொது கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் மற்றும் ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படும் 15-வது ஒன்றிய குழு மானிய நிதி முதலானவை

முறையாக ஒருங்கிணைக்கப்பட்டு, சமூக சொத்துக்கள் உருவாக்கப்பட்டு, அவை நீர் நிலைகளின் மேலாண்மை மற்றும் பாதுகாப்பிற்கு உதவி செய்கிறது.

ஊராட்சி அளவிலான கிராம குடிநீர் மற்றும் சுகாதார குழு (VWSC) வானது, ஜல் ஜீவன் திட்டம் மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அனைத்து ஊரக குடும்பங்களுக்கும் செயல்பாட்டு வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்பு மூலம் நாளொன்றுக்கு தலா ஒருவருக்கு 55 லிட்டர் குடிநீர் வழங்கப்படுவதை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது. நீர் வழங்கல் அமைப்புகளின் செயல்பாடு, பராமரிப்பு மற்றும் கள சோதனை கருவி மூலம் நீரின் தரத்தை பரிசோதித்தல் ஆகியவற்றை கிராம ஊராட்சியில் உள்ள சுய உதவி குழுக்களுக்கு பொறுப்பு வழங்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

ஊராட்சிகள், ஊராட்சி அளவில் நீரில் தன்னிறைவு அடையும் பொருட்டு "கிராம அளவிலான நீர் தன்னிறைவு திட்டத்தினை" (VWSP) தற்போது தயாரித்து வருகின்றன.

## 7.5 தூய்மையான மற்றும் பசுமையான கிராம ஊராட்சி

அட்டவணை 7.5

| கருப்பொருள் | தொடர்புடைய இதர துறைகள் | தொடர்புடைய திட்டங்கள் |
|---|---|---|
| தூய்மையான மற்றும் பசுமையான கிராம ஊராட்சி | • சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை<br>• வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை<br>• தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் | • மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்.<br>• அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் – II.<br>• தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)<br>• நம்ம ஊரு சூப்பரு<br>• மீண்டும் மஞ்சப்பை<br>• பசுமை தமிழ்நாடு இயக்கம்<br>• தமிழ்நாடு சதுப்பு நில இயக்கம் போன்றவை. |

ஊரகப் பகுதிகளில் ஒட்டுமொத்த தூய்மை மற்றும் சுகாதாரம் முதலானவை 73–வது அரசியலமைப்புச் சட்ட திருத்தத்தின் மூலம் ஊராட்சிகளுக்கு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. தூய்மை பாரத இயக்கம் மூலம், ஊராட்சியானது திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாமையை நிலை நிறுத்துதல், திடக்கழிவு மேலாண்மை, திரவ கழிவு மேலாண்மை மற்றும் காட்சித் தூய்மை போன்றவற்றை

மேம்படுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

நிலையான சுகாதார நடைமுறைகள் மற்றும் சரியான திடக்கழிவு மேலாண்மை ஆகியவற்றில் "நம்ம ஊரு சூப்பரு" இயக்கம் மூலம் நடவடிக்கையில் மாற்றம் ஏற்படுத்தும் முயற்சிகளை ஊராட்சிகள் தொடர்ந்து செய்து வருகின்றன. கழிவுகள் மறுசுழற்சி செய்தல் மற்றும் குப்பைகளை பாதுகாப்பாக அகற்றும் வகையில் உரக் குழிகள் (Compost Pits) நுண்உரம் தயாரிக்கும் மையம், நெகிழியை துகளாக்கும் அலகு மற்றும் மண்புழு உரக்கிடங்கு (Vermi–compost) ஆகியவை அனைத்து கிராம ஊராட்சிகளிலும் படிப்படியாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. "நெகிழி மீள வாங்கும் கொள்கை" மூலம் ஊராட்சிகள் நெகிழிக் கழிவுகளை நீக்குதல் மற்றும் மறுசுழற்சி பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

கரியமிலத் தன்மையை குறைக்கும் விதமாக ஊராட்சிகள் பெருமளவில் மரங்களை நட்டு வருகின்றன. 2022–23–ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மூலமாக 69 இலட்சம் நிழல் தரும் மரங்கள், பழ மரங்கள் மற்றும் நாட்டு மரங்கள் அனைத்து ஊராட்சிகளிலும் நடப்பட்டுள்ளன. ஊராட்சிகளின் இதுபோன்ற

முயற்சிகள், பசுமை தமிழ்நாடு இயக்கம் இந்த ஆண்டில் இரண்டு கோடி மரங்களை நட வேண்டும் என நிர்ணயித்த இலக்கை அடைவதற்கு உதவி புரிகின்றன.

## 7.6. உட்கட்டமைப்பில் தன்னிறைவு அடைந்த கிராம ஊராட்சி

**அட்டவணை 7.6**

| கருப்பொருள் | தொடர்புடைய இதர துறைகள் | தொடர்புடைய திட்டங்கள் |
|---|---|---|
| உட்கட்டமைப்பில் தன்னிறைவு அடைந்த கிராம ஊராட்சி | • தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை<br>• வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை<br>• கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் & மீனவர் நலத்துறை<br>• பொதுப்பணி துறை<br>• பள்ளி கல்வித்துறை<br>• தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் | • ஜல் ஜீவன் இயக்கம்<br>• சொந்த வருவாயைப் பெருக்குதல்<br>• நமக்கு நாமே திட்டம்<br>• அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் – II.<br>• கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம் |

| | | |
|---|---|---|
| | பகிர்மானக் கழகம்<br>• நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை<br>• இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | (KAVIADP)<br>• முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம் (MGSMT)<br>• தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்<br>• பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம்<br>• நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் (SAGY)<br>• சமூக–பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் (SEDP)<br>• பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் (PMGSY)<br>• சியாமாப் பிரசாத் முகர்ஜி ரூர்பன் திட்டம்<br>• நபார்டு – உட்கட்டமைப்பு நிதி<br>• ஒன்றிய |

| | | |
|---|---|---|
| | | நிதிக்குழு மானிய நிதி/ மாநில நிதிக்குழு மானிய நிதி போன்றவை. |

ஊராட்சிகளை தன்னிறைவு பெற்ற, சுய சார்புள்ளவைகளாக உருவாக்க வேண்டும் என்ற தொலைநோக்கு பார்வையுடன் அரசியலமைப்பின் 73–வது சட்டத்திருத்தம் ஊராட்சிகளுக்கு மானிய நிதி பகிர்வை கொண்டு என்ன பணிகளை யாரைக் கொண்டு செயல்படுத்துவது என்பதை தெரிவிக்கிறது.

கிராம ஊராட்சி, தனது திட்டமிடல், வளங்களை ஒருங்கிணைத்தல், தேவைகளை முன்னுரிமைப்படுத்துதல் போன்றவைகள் வழியாக திட்டங்களை செயல்படுத்தி முழுமையான முன்னேற்றம் காண்பதை உறுதி செய்கிறது.

தற்போது, அடிப்படை கட்டமைப்புகளை உருவாக்க கூடுதல் கவனம் செலுத்தி பள்ளிகள், அங்கன்வாடிகள், கிராமச் சந்தைகள், உணவு தானிய கிடங்குகள் மேலும் அடிப்படை வசதிகளான குடிநீர், தெரு விளக்குகள், சுகாதாரம், சாலைகள் போன்றவை கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியம் மூலமாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்,

பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், ஜல் ஜீவன் மிஷின்(JJM), 15 வது ஒன்றிய நிதிக்குழு மானிய நிதி, ஆதிதிராவிடர் குடியிருப் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பிரதம மந்திரி கிராம மாதிரித் திட்டம் போன்ற திட்டங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

ஊராட்சியானது அனைத்து திட்டங்களையும் ஒருங்கிணைத்து, கிராம வளர்ச்சி திட்டத்தின் மூலமாக அனைத்து உடனடி மற்றும் நீண்ட காலத் தேவைகளை முன்னுரிமை அடிப்படையில், அவசர தேவைகளை, இருப்பில் உள்ள நிதியினை கொண்டு அனைத்து திட்டங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தும் பொது மேடையாக விளங்குகிறது.

ஊராட்சிகளின் திறனை வளர்ப்பதன் மூலம், சாலைகள், கட்டடங்கள் போன்ற அடிப்படை கட்டமைப்புகளை உருவாக்கவும், வேளாண்மை, வாழ்வாதாரம், கல்வி, நலவாழ்வு, ஊட்டச்சத்து போன்ற ஒட்டுமொத்த வளர்ச்சிகளை ஏற்படுத்தவும், அனைத்துத் திட்டங்கள், வளங்களை ஒருங்கிணைத்து அந்த ஊராட்சியே அதற்கான திட்டம் தயாரிப்பதை செய்திட முடியும்.

## 7.7 சமூக நீதி மற்றும் சமூக பாதுகாப்பு உள்ள கிராம ஊராட்சி

### அட்டவணை 7.7

| கருப்பொருள் | தொடர்புடைய இதர துறைகள் | தொடர்புடைய திட்டங்கள் |
|---|---|---|
| சமூக நீதி மற்றும் சமூக பாதுகாப்பு உள்ள கிராம ஊராட்சி | • சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை<br>• மாற்றுத் திறனாளிகள் நலத் துறை<br>• தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை<br>• வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை<br>• ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை<br>• கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை<br>• பொதுத் துறை | • மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்<br>• பெரியார் நினைவு சமத்துவபுரம்<br>• அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்–II<br>• தேசிய சமூக உதவித் திட்டம் (NSAP)<br>• புதுமைப் பெண் திட்டம்<br>• டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி கலப்பு திருமண உதவித் திட்டம்<br>• நீல புரட்சி திட்டம்<br>• ஆதிதிராவிடர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டம் (ADHIS)<br>• ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறுபான்மையினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக் கான சிறப்பு திட்டங்கள் போன்றவை |

ஊராட்சியானது கடைநிலை நிர்வாக அமைப்பாக இருந்து அடிப்படை வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குவதுடன், ஏழை, விளிம்பு நிலை மக்கள், மகளிர் மற்றும் நலிந்த பிரிவினர் ஆகியோரின் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்கிறது. சமூகத்தின் மேலிருந்து கீழும், மேலும், சம நேர் நிலையிலும் உள்ள அடுக்கமைப்பு நிலையில், அடிமட்ட நிலையில் சமூக நீதியை உறுதி செய்வது ஊராட்சியால் மட்டுமே செய்திட இயலும்.

அரசாங்கமானது சமூக நீதியை வளர்க்க மற்றும் ஊக்குவிக்கும் விதமாக அர்ப்பணிப்புடன் செயலாற்றி தந்தை பெரியாரின் சமூக சமுத்துவ செய்தியை கொண்டு செல்லும் விதமாக 1997-98-ஆம் ஆண்டு இந்திய சுதந்திர பொன்விழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, பெரியார் நினைவு சமத்துவபுரத்தை தொடங்கி வைத்தது. பல்வேறு சமூகங்களை சார்ந்த மக்கள் சாதி மற்றும் வகுப்பு வேறுபாடு பாராமல் ஒன்றாக வாழ வேண்டும் என்பதே இதன் தொலைநோக்கு பார்வையாக இருந்தது.

நலிந்த பிரிவினர் மற்றும் மகளிர் தலைமைப் பொறுப்பு வகிக்கும் ஊராட்சிகளில் அரசியலமைப்பு ரீதியான மற்றும் சட்டப்படியான உரிமைகளை

நிலைநாட்டிட திறன் மேம்பாட்டு பயிற்சிகளை துறை வழங்கி வருகின்றது.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் 30% நிதியானது நலிந்த பிரிவினர் வசிக்கக் கூடிய பகுதிகளில் உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப் பயன்படுத்தப்படுகிறது. இதேபோன்று, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீட்டில் 22% நிதி விளிம்பு நிலை மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் உட்கட்டமைப்பு பணிகளை கட்டாயமாக தேர்வு செய்யப்பட வேண்டும்.

மாநில அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு மாநில மற்றும் ஒன்றிய திட்டங்களான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் (CMCHIS), தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM), டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம், புதுமைப் பெண் திட்டம், ஆதிதிராவிடர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டம் (ADHIS) மற்றும் பிரதம மந்திரி ஊரக குடியிருப்பு திட்டம் PMAY–G ஆகிய திட்டங்களின் மூலம் குறிப்பிட்ட ஒதுக்கீடு நலிந்த மற்றும் விளிம்பு நிலை பிரிவினருக்கு

ஒதுக்கீடு செய்யப்பட்டு சமூகப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது.

மொத்த மக்கள் தொகையில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமாக பட்டியலின மக்கள் வசிக்கும் ஊராட்சிகளில் பிரதம மந்திரி முன்னோடி கிராம திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 7.8 நல் ஆளுமை உள்ள கிராம ஊராட்சி

**அட்டவணை 7.8**

| கருப்பொருள் | தொடர்புடைய இதர துறைகள் | தொடர்புடைய திட்டங்கள் |
|---|---|---|
| நல் ஆளுமை உள்ள கிராம ஊராட்சி | • தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை<br>• முதல்வரின் முகவரி துறை | • தேசிய கிராம சுயாட்சி திட்டம் (RGSA)<br>• முதல்வரின் முகவரி திட்டம்<br>• தீன் தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்யா யோஜனா (DDU-GKY) போன்றவை |

மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் (RRGSA 2022) மூலமாக, ஊரக வளர்ச்சி

மற்றும் ஊராட்சித் துறை உள்ளூர் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வண்ணம் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் திறனை வலிமைப்படுத்தி நல்லாட்சிக்கு வழி வகுக்கிறது. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் (SIRD & PR) அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு தலைமைப்பண்பு, ஆளுமை மற்றும் நிர்வாகத்தில் புதுமைகளை செயல்படுத்த திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்கி வருகிறது.

கிராம நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை ஏற்படுத்தும் இத்துறையானது 2022-23 முதல் சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி ஆகிய பொது சேவைகள் வழங்குவதற்கு ஒற்றை முனையம் "தேசிய தகவலியல் மையம்" (NIC) மூலமாக உருவாக்கப்பட்டு உள்ளது. கிராம ஊராட்சி அளவில், வங்கி வணிக தொடர்பாளர் (Business Correspondent) மற்றும் ATM மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் (MGNREGS) கீழ் ஊதியத்தை பெறவும் மற்றும் தினசரி வருகை பதிவேட்டினை தேசிய மொபைல் கண்காணிப்பு முறை (NMMS) மூலம் பதிவிடுவதின் மூலமாக பொது மக்கள் தொழில் நுட்பத்தை எளிதில் ஏற்றுக்கொள்பவர்களாக மாறியுள்ளனர்.

கிராம சபை சரியான முறையில் நடைபெறுவதை உறுதி செய்திட "நம்ம கிராம சபை செயலி" தற்போது அறிமுகம் செய்யப்பட்டு, கிராம சபை நடைபெறுவதை கண்காணிக்க வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், வளர்ச்சிப் பணிகளின் கண்காணிப்பு மற்றும் முன்னேற்ற விபரங்களை கண்டறிய "கண்காணிப்பு செயலி" உருவாக்கப்பட்டு பணிகள் நடைபெறுவதை நேரடியாக கள ஆய்வு செய்து நேரம் மற்றும் புவியமைப்பு குறியீட்டுடன் புகைப்படம் எடுத்து கண்காணிக்க வகை செய்யப்பட்டுள்ளது. இச்செயலி பல்வேறு திட்டப்பணிகள் செயல்படுத்தப்படுவதை எளிமையாக கண்காணிக்க உதவுகிறது.

ஊராட்சியில் நல் ஆளுமை கொண்ட நல்லாட்சியை ஏற்படுத்தும் முயற்சியாக அரசு, பொதுமக்களின் குறைகளைக் களையும் வண்ணம் அனைவரையும் உள்ளடக்கிய, ஒருங்கிணைந்த மற்றும் எளிதில் அணுகும் வகையில் "முதல்வரின் முகவரி" என்ற இணையதளத்தை ஏற்படுத்தியுள்ளது.

## 7.9 மகளிர் நேய கிராம ஊராட்சி

### அட்டவணை 7.9

| கருப்பொருள் | தொடர்புடைய இதர துறைகள் | தொடர்புடைய திட்டங்கள் |
|---|---|---|
| மகளிர் நேய கிராம ஊராட்சி | • சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை<br>• மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத்து றை<br>• உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை | • மகளிர் திட்டம்<br>• புதுமைப் பெண் திட்டம்<br>• பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம்<br>• காவலன் செயலி<br>• ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் (ICDS)<br>• பெண் குழந்தைகளை பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம். |

ஊராட்சிகளில் மகளிருக்கான பிரதிநிதித்துவம் மற்றும் பங்கேற்பினை உறுதி செய்வதில் முக்கியப் படியானது ஊராட்சிகளில் உள்ளாட்சி பதவிகளில் 50 விழுக்காடு கட்டாயமாக்கப்பட்டதாகும். முந்தைய

மகளிருக்கான 33 விழுக்காடானது 50 விழுக்காடாக அதிகரிக்கப்பட்டதால், ஊராட்சியின் வளர்ச்சியில், மகளிரின் பங்களிப்பு காரணமாக ஏற்பட்ட மாற்றங்களை காண முடிகிறது.

கிராம ஊராட்சி மகளிர் நேய கருப்பொருளில் முக்கியத்துவம் பெறும் வகையில் இத்துறையானது, மகளிருக்கு சமத்துவமான நிலையான வருங்கால முன்னேற்றத்தினை உறுதி செய்யும் பொருட்டு உள்ளூர் நிர்வாகத்தில் மகளிர் சம பங்கேற்பு மற்றும் முடிவுகளை எடுத்தல் போன்றவற்றில் மகளிர் பங்கினை உறுதி செய்கிறது.

இத்துறையானது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறையுடன் நெருக்கமாக இணைந்து சுகாதாரம், கல்வி, ஊட்டச்சத்து மற்றும் மகளிருக்கு அதிகாரமளித்தல் போன்றவற்றிற்கு தடையாக உள்ள, பல்வேறு சமூக தீமைகள் மற்றும் பிரச்சனைகள் தொடர்பாக விழிப்புணர்வு வழங்குகிறது. மகளிர் சுய உதவிக் குழுக்களின் திறமை மற்றும் திறன் மேம்பாடு மேம்படுத்தப்பட்டு, வங்கி கடன் மூலம் குறு நிறுவனங்கள் நிறுவிட ஊக்குவிக்கப்படுகின்றன.

தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஊராட்சி மற்றும் சமுதாயம் சார்ந்த கூட்டமைப்பின்

இணைப்பு கூறானது கிராம ஊராட்சியில் பயனுள்ள கூட்டாண்மையை உருவாக்கி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் மகளிர் முன்னேற்றத்தில் கவனம் செலுத்துகிறது. ஊராட்சிகள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் சுய உதவி குழுக்களுடன் நெருக்கமாக இணைந்து ஊரக மகளிர்க்கு அதிகாரமளித்து, அதன் மூலம் கிராமத்தில் உள்ள பிற வளர்ச்சி பணிகளில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்கிறது.

## 7.10 வருங்கால திட்டம்

நீடித்த நிலையான இலக்குகளுடன் தங்களை பரிச்சயப்படுத்திக் கொள்ளவும் திறம்பட செயல்படுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவும், கிராம ஊராட்சிகளுக்கு முதல் கட்டமாக 9 கருப்பொருட்களிலிருந்து 3 கருப்பொருட்களை தேர்ந்தெடுத்து, அதன் தொடர்புடைய குறிகாட்டிகள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து 12,525 கிராம ஊராட்சிகளும் 24 ஏப்ரல் 2022 அன்று கிராம சபையில் அடுத்த 2 ஆண்டுகளில் அதாவது 2024 வரை நிறைவேற்றுவதற்கான 3 கருப்பொருட்களை தேர்வு செய்துள்ளன. இவ்வாறாக 9 கருப்பொருட்களும் 2024,

2026, 2028 மற்றும் 2030 ஆம் ஆண்டுகளில் படிப்படியாக கிராம ஊராட்சிகளால் எடுத்துக் கொள்ளப்படும்.

2030 ஆம் ஆண்டில், அனைத்து இலக்குகள் மற்றும் குறியீடுகளை நிறைவேற்றுவதற்கான செயல்பாட்டில், தமிழ்நாட்டின் முன்னேற்றத்தினை துரிதப்படுத்த நீடித்த நிலையான இலக்குகளை அடைவதற்கு உள்ளூர் நடவடிக்கைகளை செயல்படுத்துவது மிக முக்கியமான பணியாகும். இதற்காக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையானது தொடர்புடைய பிற துறைகளுக்குத் தேவையான ஆதரவை வழங்கி, புது வீரியத்துடன் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும், 9 கருப்பொருட்களையும் நிறைவேற்றுவதை உறுதி செய்ய முனைப்புடன் உள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊராட்சிகளும் 2030–ஆம் ஆண்டிற்குள் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை எய்த, இத்துறை இதர தொடர்புடைய துறைகளுக்கு தேவையான உதவிகளை வழங்கி ஊராட்சிகளை வலிமைப்படுத்த, தேவையான வசதிகளை செய்து கொடுக்கும்.

# 8. வரவு செலவுத் திட்டம்
# 2023 – 2024

## 8. வரவு செலவுத் திட்டம் 2023-2024

2023-2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 22,562 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் வருவாய் செலவினங்களுக்காக 20,954 கோடி ரூபாய் மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக 1,608 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 9. முடிவுரை

9. முடிவுரை

வறுமை ஒழிப்பு நடவடிக்கைகள் மற்றும் நீடித்த நிலையான வளர்ச்சியை மேம்படுத்த குடிநீர், சுகாதாரம், சாலை வசதிகள், தெரு விளக்குகள் போன்ற அடிப்படை வசதிகளை வழங்கி, ஆக்கப்பூர்வமான மற்றும் தன்னிறைவு பெற்ற ஊரக சமுதாயங்களை உருவாக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை உறுதி பூண்டுள்ளது. ஊராட்சிகளை தூய்மையாகவும் பசுமையாகவும், எந்த கால நிலையையும் தாங்கக்கூடியவைகளாகவும் வாழத்தகுதியுள்ளவைகளாகவும் துடிப்பான பொருளாதாரத்தை கொண்டவைகளாகவும் மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு பங்களிக்கும் விதமாக அனைத்து வசதிகளுடன் இணைக்கப்பட்ட மையங்களாகவும் உருவாக்குவதே அரசின் நோக்கமாகும்.

ஊராட்சிகள், அனைத்து துறை செயல்பாடுகளும் கிராம அளவில் ஒருங்கிணைவதை உறுதி செய்து அரசுக்கும், உள்ளூர் மக்களுக்கும் பாலமாக விளங்குகின்றன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்துடன் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சித் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்,

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், ஊரக தூய்மை பாரத இயக்கம், 15–வது ஒன்றிய நிதிக்குழு மானியம் மற்றும் இதரத் துறை திட்டங்களும் ஒன்றோடு ஒன்று இணைந்து மேம்பட்ட பலன்களை கடைக்கோடி வரை சென்றடையும் வகையில் ஒருங்கிணைக்கப்படுகின்றன. திறம்பட்ட சேவைகள், ஊரக வாழ்வாதார மேம்பாடு, மேம்பட்ட இயற்கைவள மேலாண்மை, பசுமை பரப்பை அதிகரித்தல் மற்றும் கார்பன் அடிச்சுவடு குறைப்பு போன்றவை துறைகளுக்குள்ளான ஒருங்கிணைப்பின் விளைவுகளாக உள்ளது.

நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை ஊராட்சி அளவில் உள்ளூர்மயமாக்கல் என்பது நீடித்த வளர்ச்சியை 2030–க்குள் அடைவதற்கு முக்கியமான காரணிகளில் ஒன்றாகும். ஒவ்வொரு கிராமத்தின் தேவைகள் மற்றும் சூழலை பொறுத்து உள்ளூர் பிரச்சனைகள் மற்றும் வாய்ப்புகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட தீர்வுகளை உருவாக்க வேண்டும். நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை உள்ளூர்மயமாக்கல், உள்ளூர் நிர்வாகத்தையும் அமைப்புகளையும் வலிமைப்படுத்தி சமூக ஒற்றுமையை பலப்படுத்தி சமூதாய மீள்தன்மையை ஊக்குவிக்கிறது. ஒட்டுமொத்தமாக, நீடித்த மற்றும்

சமமான எதிர்காலத்தை உருவாக்குவதில் நீடித்த நிலையான வளர்ச்சியை உள்ளூர்மயமாக்கல் முக்கியமான ஒன்றாகும்.

திட்டங்களை செயல்படுத்துவதில் மின் ஆளுமை முன்னெடுப்புகள் மற்றும் தரக்கட்டுப்பாட்டு செயல்பாடுகள் போன்றவை நல்ல விளைவுகளை ஏற்படுத்தி வருவதால் ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களை திட்ட செயலாக்கத்தில் மேலும் ஆற்றல் மிக்கவையாக்கும் முயற்சிகளை இத்துறை தனது செயல்பாடுகளில் முன்னிறுத்தி வருகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசுத் துறை வல்லுநர்கள் இடையிலான ஒருங்கிணைப்பு இதுவரை கிடைக்கப்பெற்ற பலன்கள் ஒருமுகப்படுத்தப்பட்டு சேவைகள் வழங்குவதிலும் அடிப்படை மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு மேம்பாட்டிலும் வேகமான செயல்பாடுகள் எட்டப்பட்டுள்ளது.

ஊரக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது இத்துறையின் முக்கியமான பணியாகும். ஊரகப் பகுதிகளில், குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் பள்ளிகளின் உள்கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளியை நிரப்பும் முக்கிய திட்டமாக திகழ்கிறது. முதல்வரின் கிராம சாலைகள்

மேம்பாட்டுத் திட்டம் ஊரக சாலைகள் வகைப்பாட்டினை சீரமைத்து, சாலைகள் மேலாண்மையில் புதிய நோக்குடன் வடிவமைக்கிறது. சொத்துக் கணக்கெடுப்பில் அறியப்படும் இடைவெளிகள், துல்லியமான முறையில் நுண்ணிய திட்டமிடலுக்கு கருவிகளாக இருக்கிறது. கிராம சுகாதார செறிவுத் திட்டம், கிராம நீர் செறிவுத் திட்டம் மற்றும் கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் போன்றவை கள அளவிலான திட்டமிடலுக்கு அடிப்படை தரவுகளுடன் அனைத்து இருப்பு வளங்களையும் செம்மையாக பயன்படுத்தவும் சேவை வழங்குதலில் முக்கிய பங்களிக்கிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின்** அவர்களின் சீரிய தலைமையின் கீழ் தமிழ்நாட்டை அனைத்து நிலைகளிலும் நாட்டின் முதன்மை மாநிலம் என்ற நிலையை அடைய **தனித்துவ வளர்ச்சி மாதிரியை** உருவாக்கி தொய்வடையாத அர்ப்பணிப்புடன் முன்னெடுத்துச் செல்லும்.

# இ. பெரியசாமி

**ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்**

**தமிழ்நாடு அரசு**

## பெரியார் நினைவு சமத்துவபுரம் திறப்பு விழா சிங்கம்புணரி



சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஒன்றியம், கண்ணமங்கலப்பட்டி ஊராட்சி, கோட்டைவேங்கைபட்டியில் பெரியார் நினைவு சமத்துவபுரத்தை 08.06.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்

பெரியார் நினைவு சமத்துவபுரம் – கொழுவாரி ஊராட்சி, வானூர் ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்









## மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் ஊரக வளர்ச்சி பணிகள் ஆய்வு



மதுரை மாவட்டம், T. கல்லுப்பட்டி ஒன்றியம்,
வன்னிவேலன்பட்டி ஊராட்சி மன்ற அலுவலக திறப்பு



விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம்,
விழுப்பனூர் ஊராட்சியில் பணிகள் ஆய்வு



மதுரை மாவட்டம், T. கல்லுப்பட்டி ஒன்றியம்,
வன்னிவேலன்பட்டி ஊராட்சி மன்ற
அலுவலகத்தில் மரம் நடுதல்

## அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II

## 1. நீர் நிலைகள் புதுப்பித்தல்









## அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II

## 2. குக்கிராமங்களில் தெருக்கள் / வீதிகள் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல்









# அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II

## 3. சமத்துவ சுடுகாடு / இடுகாடுகளுக்குதேவையான உட்கட்டமைப்பு வசதிகள்









## அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II

## 4. பள்ளிகள் மற்றும் பொது பயன்பாட்டிற்கான கட்டமைப்புகளை உருவாக்குதல்










## அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II

## 5. பசுமை மற்றும் தூய்மை பணிகள்









# அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II

## 6. வாழ்வாதாரம் மற்றும் சந்தைப்படுத்துதல் வசதிகள்









# "நம்ம ஊரு சூப்பரு" விழிப்புணர்வு இயக்கம்



மகளிர் சுயஉதவிக்குழுக்களால் மஞ்சப்பை உபயோகத்தை ஊக்குவித்தல்




பெண்களால் "நம்ம ஊரு சூப்பரு" இயக்கம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்



நம்ம ஊரு சூப்பரு இயக்க விழிப்புணர்வு பேரணியில் பள்ளி மாணவர்கள் பங்கேற்றல்




பள்ளி மாணவர்கள் திடக்கழிவு மேலாண்மை மையத்தை பார்வையிடல்

# மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்

## நீர் வள மேலாண்மை



கருங்கல் தடுப்பணை



சிமெண்ட் கான்கிரீட் தடுப்பணை



அமிர்த குளம்



அகழிகள்

# மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்
# இயற்கை வள மேலாண்மை



பண்ணைக்குட்டை



தனிநபர் கிணறு



விவசாய நிலத்தில் மண்வரப்பு



வட்டார நாற்றங்கால்

## சாலைகள்



கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், சேலம் மாவட்டம்



நம்பியூர் ஊராட்சி ஒன்றியம், ஈரோடு மாவட்டம்



மோகனூர் ஊராட்சி ஒன்றியம், நாமக்கல் மாவட்டம்



ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், தஞ்சாவூர் மாவட்டம்

## பாலங்கள்



கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், தூத்துக்குடி மாவட்டம்



ஆனைமலை ஊராட்சி ஒன்றியம், கோயம்புத்தூர் மாவட்டம்



திருமானூர் ஊராட்சி ஒன்றியம், அரியலூர் மாவட்டம்



வாழப்பாடி ஊராட்சி ஒன்றியம், சேலம் மாவட்டம்

# பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்



ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கட்டடங்குடி ஊராட்சி
அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம்



ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, பூச்சம்பட்டி ஊராட்சி
வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம், மதுரை மாவட்டம்



ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கட்டடங்குடி ஊராட்சி
அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம்



ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, முனியம்பட்டி,
வெள்ளாளபுரம் ஊராட்சி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம்,
சேலம் மாவட்டம்

## அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட புதிய வீடுகள்
## பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்)









# ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட குடிநீர் பணிகள்









## தூய்மை பாரத இயக்கம் 2.0 –ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை வசதிகள்











# ஆறாவது மாநில நிதிக்குழு மானிய பகிர்மான முறை




# அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II
# 2023–24 ஆம் ஆண்டிற்கு தேர்வு
# செய்யப்பட்ட கிராம ஊராட்சிகள்




## மாவட்ட வாரியாக ஊரகச் சாலைகளின் நீளம்



# மாவட்ட வாரியாக ஊரகச் சாலைகளின் அடர்த்தி




ஆண்டுவாரியாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் நிதி ஒதுக்கீடு மற்றும் செலவின விவரம்





ஆண்டு


## மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் – ஊரக கட்டமைப்பு பணிகள் விவரம் 2022–2023




## பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் ஆண்டு வாரியாக வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட விவரம்




## கடந்த மூன்று ஆண்டுகளில் ஊரக வீடுகளுக்கு வழங்கப்பட்ட வீட்டு குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை



# செயல்பாட்டில் உள்ள வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகளின் சதவீதம்



## கடந்த 5 ஆண்டுகளில் ஒன்றிய அரசிடமிருந்து பெறப்பட்ட நிதிகள்



## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சிறப்பு செயல்பாடுகள் சிறப்பு கையேடுகள் மற்றும் காணொளிகளுக்கு ஸ்கேன் செய்யவும்



இயற்கை வள மேலாண்மை கையேடு



நம்ம ஊரு சூப்பரு இயக்கம்–கையேடு



நீர் வள மேலாண்மை கையேடு

சிறப்பு முயற்சிகள் காணொளி